# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ்க் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை MANNA

பொழிவு - 09
குவிப்பு - 03
பக்கங்கள் - 20
விலை ரூபா 20.00
மார்ச் 2006

THE TAMIL CATHOLIC MONTHLY PUBLISHED BY THE DIOCESE OF MANNAR - Manna Office, Pastoral Centre, Cathedral St, Mannar, Sri Lanka. T.P: 023 - 2232377



## இறைவனை நோக்கிச் செல்லும்
# உள்ளார்ந்த பயணத்திற்கு தகுந்த காலம் தவக்காலமே!

### தவக்காலச் செய்தியில் திருத்தந்தை கூறுகிறார்

"இரக்கத்தின் ஊற்றாகிய இறைவனை நோக்கிச் செல்லும் உள்ளார்ந்த பயணத்திற்குத் தகுந்த காலம் தவக்காலமாகும். எமது ஏழ்மையாகிய பாலைவனத்தினூடாக இறைவன் எம்முடன் தொடர்ந்து வரும் ஒரு பயணமே இது.

நாம் உயிர்ப்பு விழாவின் மகிழ்ச்சியை நோக்கிச் செல்லும் எமது வழிப்பயணத்தில் அவர் எமக்கு ஊட்டமளிக்கிறார். "இருளின் பள்ளத்தாக்கில்" (தி.பா. 23: 4) என்று திருப்பா ஆசிரியர் கூறுவதுபோன்று, தீயவன் எமக்கு நம்பிக்கையின்மையை வருவிக்கும்பொழுது, அன்றேல் எமது சொந்தக் கரங்களினால் நாம் செய்யும் வேலைகளில் வீணான நம்பிக்கை வைக்க எம்மைத் தூண்டும்பொழுது, எம்மைப் பாதுகாக்க ஊட்டமளிக்கும் இறைவன் எம்முடன் இருக்கிறார்.


இன்று எம்மத்தியில் ஆறுதலுக்காக, அன்புக்காக, சமாதானத்திற்காக, ஏங்கும் ஒவ்வொருவரின் குரலையும் ஆண்டவர் கேட்டுக்கொண்டே இருக்கிறார். இருள் வெற்றிபெற ஒருபோதும் அனுமதிக்காத இறைவனின் இரக்கத்தில் நம்பிக்கைகொண்டு எமது தவக்காலப் பயணத்தைத் தொடருவோம்." என திருத்தந்தை தனது தவக்காலச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (திருத்தந்தையினுடைய தவக்காலச் செய்தியின் முழு வடிவத்தை பக்கம் 7ல் காணலாம்)



### ஏன்?

களிமண் கவலைப்பட்டது.
தன்னைப் பிசைந்து
எத்தனையோ யேசுக்களை
தயாரிக்கும் இவர்களால்
ஏன் இன்னொரு இயேசுவாக
மாற முடிவதில்லை?

## மன்னார் ஞானோதயத்தில்
## இறையியல் கற்கைநெறிச் சான்றிதழ் வழங்கும் விழா



மன்னாரில் உள்ள அமதிகளின் ஆன்மீகக் கல்வி மையமாகிய ஞானோதயத்தில் கடந்த மார்ச் மாதம் 5ம் திகதி இறையியல் டிப்ளோமா கற்கைநெறியை நிறைவுசெய்த 27 பேர் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்டனர்.

மன்னார் ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் இச்சான்றிதழ் வழங்கும் நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக வருகை தந்து கற்கைநெறியை நிறைவுசெய்தவர்களுக்கு சான்றிதழ்களை வழங்கினார்.

மாதத்திற்கு ஒரு நாள் என்ற அடிப்படையில் கடந்த ஒரு வருடமாக நடைபெற்ற இந்த இறையியல் டிப்ளோமா கற்கைநெறியை அருட்பணியாளர் ஸ்ரனி அன்ரனி (அமதி) அவர்கள் நெறிப்படுத்தியிருந்தார்.

## உள்ளே


- மன்னார் ஆயரின் தவக்காலத் திருமடல் - பக்கம் 2
- தவக்காலச் சிறப்பிதழ் (தவக்காலச் சிந்தனைகள்) - பக்கம் 5
- திருத்தந்தையின் தவக்காலச் செய்தி - பக்கம் 9
- மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர் தினச் சிறப்பிதழ் - பக்கம் 11
- திருமணத்திற்கு முன் உறவு? திருச்சபை என்ன சொல்கிறது? - பக்கம் 14
- மாணவர் பக்கம் (பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு...!) - பக்கம் 15
- இன்னும் வழமையான் - சுவையான - சுவாரசியமான அம்சங்கள்!


### பத்திரிசியார் கல்லூரியின் முதல் சுதேச அதிபர்
## அருள்நேசன அடிகளார் இறைபதம்

புனித பத்திரிசியார் கல்லூரியின் முதலாவது சுதேச அதிபர் அருள்நேசன் (அமதி) அடிகளார் 03.02.2006 அன்று இறைபதமடைந்தார். புனித பத்திரிசியார் கல்லூரியிலேயே கல்வி கற்று 1954 தொடக்கம் 1960 வரை கல்லூரியின் முதலாவது சுதேச அதிபராக இவர் சிறப்பாகக் கடமையாற்றியிருந்தார். அடிகளாரின் ஆன்மா ஆண்டவரில் அமைதிபெறச் செபிப்போம்.

### 'அன்பே கடவுள்' என்ற தனது முதல் சுற்றுமடலில்
## திருத்தந்தை கையெழுத்திடுகின்றார்


கடந்த ஜனவரி 25ம் திகதி திருத்தந்தை 16ம் பெனடிக்ற் 'அன்பே கடவுள்' **(Deu Caritas est)** என்ற தனது முதல் சுற்றுமடலில் கையெழுத்திட்டார். இச்சுற்றுமடலில் கிறிஸ்தவ அன்பின் தன்மையை அவர் விளக்குகிறார். இம்மடலின் சுருக்கத்தை 9ம் பக்கத்தில் கா்ணலாம்.



## 14வது உலக நோயாளர் தினம்

கடந்த பெப்ரவரி மாதம் 11ம் திகதி 14வது உலக நோயாளர் தினம் அவுஸ்ரேலியாவில் கொண்டாடப்பட்டது. ***மனநோய் நலமும் மானிட மதிப்பும்*** (Mental Health and Human Dignity) என்ற கருப்பொருளில் இவ்வாண்டு இந்நிகழ்வு இடம்பெற்றது.


1992ம் ஆண்டு மே மாதம் 13ம் திகதி முன்னாள் திருத்தந்தை 2ம் அருள் சின்னப்பர் அவர்கள் பெப்ரவரி 11ம் திகதியை உலக நோயாளர் தினமாகப் பிரகடனப்படுத்தினார். 1993ம் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் லூர்துபதியில் முதன் முதலாக உலக நோயாளர் தினம் கொண்டாடப்பட்டது. அதைத்தொடர்ந்து உலகின் பல்வேறு நாடுகளில் இத்தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது.



திருத்தந்தை 16ம் பெனடிக்ற் அவர்கள் மனநோயால் பாதிக்கப்பட்ட சிறுவன் ஒருவனை அன்போடு அணைத்துக் கொள்கின்றார்.

### திருவழிபாட்டுத் திருப்பேராயத்தின் செயலராக
## பேராயர் மல்கம் இரஞ்சித் நியமனம்

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ற் பாப்பரசர் இறைவழிபாடு மற்றும் திருவருட்சாதனங்களுக்கான திருப்பேராயத்தின் புதிய செயலராக பேராயர் மல்கம் இரஞ்சித் அவர்களை நியமித்துள்ளார். 58 வயது நிரம்பிய பேராயர் 1957ம் ஆண்டு குருவாகத் திருநிலைப்படுத்தப்பட்டு 1991ம் ஆண்டு கொழும்பு மறைமாவட்டத்தின் துணை ஆயராக நியமனம் பெற்றார். 4 வருடங்களின் பின்னர் 1995ல் இரத்தினபுரி மறைமாவட்ட ஆயராக நியமனம் பெற்றார். 2001ல் மக்களுக்கான மறைபரப்புத் திருப்பேராயத்தின் இணைச்செயலாளராக நியமனம் பெற்றார். 2004ல் இந்தோனேசியா மற்றும் கிழக்குத் தீமோர் நாடுகளுக்கான பாப்பிறைத் தூதுவராக நியமனம் பெற்ற இவர் மீண்டும் 2005 நவம்பர் மாதம் திருவழிபாட்டுத் திருப்பேராயத்தின் செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.



# மன்னா

## எது சிறந்த நோன்பு?

தவக்காலம் நமக்குத் தரப்பட்ட செபக்காலம். இது அருளின் காலம், ஆண்டவரை அண்டிவரும் காலம். இக்காலத்தில் நாம் ஒறுத்தல் உபவாச முயற்சிகளை மேற்கொண்டு ஆண்டவரோடு நெருங்கிவர ஆசிக்கின்றோம் ....! இவை நல்ல முயற்சிகள், பாராட்டப்படவேண்டியவை, ஊக்குவிக்கப்பட வேண்டியவை. ஆனால் நோன்பு போன்ற நமது பக்தி முயற்சிகளின் உண்மையான நோக்கம் எந்தளவிற்கு நிறைவேறுகின்றன என்பதை நாம் ஆய்வுக்குட்படுத்துவது நமது இந்த தவக்கால பக்தி முயற்சிகளை அர்த்தமுள்ளவையாக, ஆழமுள்ளவையாக மாற்ற உதவி செய்யும்.

### "தவக்காலத்தில் புகைபிடிப்பதில்லை"

மலைப்பாங்கான – குளீர் நிறைந்த ஓர் பிரதேசத்திலே வயோதிபக் குரு ஒருவர் வாழ்ந்து வந்தார். குளிரான காலநிலை நிலவியதாலும் வயோதிபத்தின் வடுக்கள் அவரை வாட்டியதாலும் அவர் சுருட்டுப் புகைக்கும் வழக்கம் உள்ளவராக இருந்தார். ஒருநாள் இரவு வேளையில் நோயில்பூசுதல் அருட்சாதனத்தை நிறைவேற்ற வேண்டுமென்ற அழைப்பை ஏற்று கையிலே லைற்றைப் பிடித்துக்கொண்டு, குளிர்ச்சட்டையை அணிந்தவராக சுருட்டைப் பற்றவைத்துக்கொண்டு அந்த மலைப்பாங்கான காட்டு வழியாலே தனிமையாக நடந்து வந்துகொண்டிருந்தார்.

தனிமையிலே இரவு வேளையில் ஒருவர் வந்துகொண்டிருப்பதை அவதானித்த வழிப்பறிக்கொள்ளைக்காரன் ஒருவன் அங்கே வந்துகொண்டிருந்த குருவை வழிமறித்து கொலை செய்துவிட்டு கொள்ளையடிக்க நினைக்கின்றான். கத்தியை நீட்டியவனாக குருவானவரை நோக்கிச் செல்கின்றான். அருகிலே வந்தபோதுதான் அக்குருவானவருடைய 'உரோமன் கொலரைக்' கண்டு அவர் ஒரு குருவானவர் என்பதை அடையாளம் கண்டுகொள்கிறான்.

"பாதர், நீங்கள் ஒரு குரு என்பதால் உங்களை நான் எதுவும் செய்யாமல் விட்டுவிடுகின்றேன்" என்கிறான். அவன் தனக்கு தீங்கு எதுவும் செய்யாமல் விட்டுவிட்டமையினால் ஆறுதல் அடைந்த அக்குருவானவர் தனது அன்பின் அடையாளமாக தன்னுடைய பொக்கற்றில் இருந்து ஒரு சுருட்டை எடுத்து, "சரியான குளிராக இருக்கின்றது, இந்தச் சுருட்டைப் பற்றவைத்துக்கொள்" என்று கொடுக்கின்றார். அதற்கு அவன், "பாதர், உங்கள் அன்புக்கு நன்றி. இது தவக்காலம், இந்தத் தவக்காலத்தில் சுருட்டுக் குடிப்பதில்லை என்று நான் தீர்மானம் எடுத்திருக்கின்றேன்" என்று கூறி அச்சுருட்டை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகின்றான்.

### எதை விட்டிருக்க வேண்டும்?

தவக்காலத்தில் புகைபிடிப்பதில்லை என்று அந்த மனிதன் எடுத்த தீர்மானம் நல்லது, பாராட்டப்பட வேண்டியது. ஆனால் காலாகாலமாக கொள்ளையடித்தலாகிய பெரும் பாவத்தில் ஊறிப்போய் இருந்த அம்மனிதன் முதலில் கொள்ளையடித்தலாகிய பாவத்தில் இருந்து விலகியிருப்பதைப்பற்றிச் சிந்தித்திருக்க வேண்டும். அதைப்பற்றிய எந்தச் சிந்தனையும் இல்லாமல், தவக்கால ஒறுத்தல் முயற்சியாக சுருட்டுப் புகைப்பதை நிறுத்தியிருந்தான்.

### நமது இன்றைய ஒறுத்தல்கள்

அந்த மனிதனின் ஒறுத்தல் முயற்சி சிலவேளை நமக்கு ஆச்சரியத்தையும் நகைப்பையும் ஏற்படுத்தலாம். ஆனால் பலவேளைகளில் நமது ஒறுத்தல் முயற்சிகளும் அம்மனிதனுடைய நிலையில்தான் உள்ளன என்பதை நாம் உணராமல் இருக்கின்றோம். காலாகாலமாக பழகிப்போன பாவவழிகளை விட்டுவிட மனமில்லாமல் – அதிலிருந்து வெளியேற முயற்சிசெய்யாமல் – வெறுமனே ஒறுத்தல், உபவாசம், நோன்பு ஆகிய முயற்சிகளில் ஈடுபடுவது ஆண்டவர் ஆசிக்கும் நோன்பிற்கு முரணாக உள்ளது.


### ஆண்டவர் ஆசிக்கும் நோன்பு

விவிலியத்தில் ஆண்டவர் ஆசிக்கும் நோன்பு என்ன என்பதைப் பார்ப்போம். "*ஒருவன் தன்னை ஒடுக்கிக்கொள்ளும் நாளையா உண்ணா நோன்பின் நாளாகத் தெரிந்துகொள்வது? ஒருவன் நாணலைப்போல் தன் தலையைத் தாழ்த்தி சாக்கு உடையையும் சாம்பலையும் அணிந்துகொள்வதா எனக்கு ஏற்ற நோன்பு? கொடுமைத் தளைகளை அவிழ்ப்பதும் நுகத்தின் பிணையல்களை அறுப்பதும் ஒடுக்கப்பட்டோரை விடுதலை செய்து அனுப்புவதும் எவ்வகை நுகத்தையும் உடைப்பதுமன்றோ நான் தேர்ந்துகொள்ளும் நோன்பு.*" (எசாயா 58:5-8)

எனவே நம்மிடமுள்ள பாவப்பலவீனங்களில் இருந்து விடுதலை பெற முயற்சிப்போம், அடுத்திருப்பவர்கள் மட்டில் அக்கறையுடன் செயலாற்றுவோம்.

மீண்டும் மறுமடலில் வந்து சந்திக்கும்வரை

**அன்புடன், அருட்பணியாளர் நேசன்**
**மன்னா பதிப்பாசிரியர்**



## வாசகர் எண்ணங்கள்

### அனைத்து அம்சங்களும் அருமை!

மாதத்தில் ஒரு முறை வலம் வந்துகொண்டிருக்கும் மன்னாவே, உனக்கு என் மகத்தான வணக்கங்கள் உரித்தாகட்டும். நீ சுமந்து வரும் அத்தனை அம்சங்களும் அருமையிலும் அருமை. சுடச்சுடச் சுவையான அம்சங்களைத் தந்து உதவுகின்றாய். குறுக்கெழுத்துப் போட்டியானது விவிலியத்தை ஒருமுறையல்ல பத்துமுறைக்குமேல் வாசிக்கத் தூண்டுகிறது. மாணவர் மறையறிவுப் போட்டியானது தேடலையும், ஊக்கத்தையும் ஏற்படுத்துகின்றது. நீ எமக்குப் பரிசுப் பொருட்களை அனுப்பி வைப்பது எமக்கு உற்சாகத்தைத் தருகின்றது. மேலும் இதுபோன்ற தரமான ஆக்கங்களைத் தந்து உதவும் மன்னாவே உனக்கு என் மனமார்ந்த நன்றிகள். வாழ்க உன் பணி.

*- பி. வதனா, கன்னியர் இல்ல வீதி, வாழ்க்கைப்பெற்றான்கண்டல், முருங்கன்.*

### தகவல்களைத் திரட்டி வருகின்றாய்

மாதம் ஒருமுறை எம்மைக் கொள்ளைகொள்ளும் மன்னாவே,
மகிழ்வுடன் நீ உலகெங்கும் வலம் வருகின்றாய்
சிறந்த நல்ல தரவுகளைத் திரட்டித் தருகின்றாய்
பரவட்டும் உன் புகழ் பாரெங்கும்.
உன்னை உருவாக்க அயராது உழைத்திடும்
அன்பு நெஞ்சங்கள் அனைவரையும்
தூய ஆவி துணைபுரிந்து வழிநடத்த வேண்டுகிறேன்.

*எம். லின்ரா, பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.*

### உனக்கு நிகர் நீயே!

மக்கள் இதயத்தில், இல்லத்தில் மன்னா நீ ஆத்மீகப் பசி தீர்க்கின்றாய். கதைகள் கட்டுரைகள் பாக்கள் கலந்து சுவைக்கத் தருவதில் உனக்கு நிகர் நீயே! இளம் உள்ளங்களின் தேடலில் இதமாக விருந்து வைக்கும் கூடம் நீ. புரட்டிப்படிக்க, அறிய வைக்க, புதியவை தருவதில் நீ ஓர் கணினி. நீ தொடர்ந்து வர வாழ்த்துகிறேன். உன் பணி சிறக்க இறைவனை வேண்டுகிறேன்.

*ஏ. றி. இம்மானுவேல், ஜேர்மனி.*

இறைவனின் இரக்கத்தாலும்
புனித ஆட்சிப் பீடத்தின் ஆதரவாலும்
மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆகிய நான்
மன்னார் மறைமாவட்ட இறைமக்களுக்கு எழுதும்



## தவக்காலத் திருமடல்

அன்பார்ந்த குருக்களே! துறவியரே! இறைமக்களே!

இந்த வருடத் தவக்காலத்தில், ஒரு அத்தியாவசியமான விடயத்தின்பால் உங்கள் சிறப்பான கவனத்தை ஈர்க்கும்பொருட்டு, இந்த மடலை எழுதுகிறேன்.

வருடம்தோறும் எம்மைக் கடந்து செல்லும் தவக்காலமானது மனமாற்றத்திற்கும், ஒப்புரவிற்கும், ஆன்மீகப் புதுப்பித்தலுக்கும் இறைவன் விடுக்கும் அழைப்பாகும். இறைவனின் நிபந்தனையற்ற அன்பையும், இரக்கத்தையும் உய்த்துணர்ந்து, முழு இதயத்தோடும், நாம் இறைவனை நோக்கிப் பயணிக்க, அறைகூவல் விடுக்கப்படும் காலமாகும்.

எனினும், இத்தவக்காலத்தில் நமது நாட்டில் வாழும் எல்லா மக்களுடைய ஏக்கமாக, எதிர்பார்ப்பாக, ஆதங்கமாக விளங்கும் சமாதானத்தைப்பற்றி நாம் சிந்திக்காமல் இருக்க முடியாது. கடந்த கால் நூற்றாண்டாக நமது தேசத்தில் இடம்பெற்ற உள்நாட்டு இனமோதலினால் ஏற்பட்ட மனித அவலங்களை நாம் இலகுவில் மறந்துவிட முடியாது. போர் அனர்த்தத்தினால் பல்லாயிரக்கணக்கான மக்களின் உயிர்கள் காவுகொள்ளப்பட்டதை நாம் கணக்கிலெடுக்காமல் இருக்க முடியாது. இதன் விளைவாக எமது வாழ்விடங்களில், வீதிகளில், ஆலயங்களில், கடலில் இரத்தம் சிந்தப்பட்டுக் கறைப்படுத்தப்பட்டதை நாம் மறந்துவிட முடியாது.

எமது தேசத்தில் இரத்தம் சிந்தப்பட்ட வரலாறு எமது மானுட வாழ்வில் கறைபடிந்த அத்தியாயம் என்பதை நாம் அறிவோம். இனியும் எமது தேசத்தில் போரின் பெயரால் இரத்தம் சிந்துதலை நாம் அனுமதிக்க முடியாது. ஒவ்வொரு உயிரும் இறைவனின் முன்பாக மாண்புமிக்கது. அவருக்கே உரித்தானது என்பதை எல்லோரும் உணர வேண்டும். எத்தனையோ அப்பாவிகளான ஆபேல்களின் இரத்தம் ஆண்டவன் சந்நிதியை நோக்கி அபயக்குரல் எழுப்புகின்றன. எமது மண்ணில் சிந்தப்படும் ஒவ்வொரு துளி இரத்தமும், இயேசு சிந்துகின்ற இரத்தமாகும். ஏனெனில் துன்புறும் ஒவ்வொரு மனிதனிலும் இயேசுவே துன்புறுகிறார், இரத்தம் சிந்துகிறார். எமது நாடு தொடர் கல்வாரிக் களமாக மாறிவிட்டதை மனதில் கொண்டுவருவோம்.

மனித குலத்தின் பாவங்களுக்காக கழுவாயாகிப்போன நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்து மட்டுமே எமது மண்ணின் இரத்தக் கறைகளைத் துடைத்து, சமாதானம் என்னும் கொடையை அளிக்கக்கூடியவர் என்பதை நாமறிவோம். "வரலாற்றின் கால ஓட்டத்திலே, வெறுப்பும், கசப்பும் மேலெழுந்து நிற்பதாகக் காணப்பட்ட வேளைகளிலும்கூட, இறையன்பின் உறுதிப்பாடு உயர்ந்தெழுந்து பிரகாசிக்க என்றுமே தவறியதில்லை." என்றும், "அன்பு, மகிழ்ச்சி, அமைதிக்காக ஏங்கி நிற்கும் மக்கள் கூட்டங்களின் அழுகைக் குரலுக்கு, ஆண்டவர் இன்றும் செவிமடுக்கிறார்." என்றும் தமது இவ்வாண்டுத் தவக்காலச் செய்தியிலே, நம் திருத்தந்தை 16ம் ஆசீர்வாதப்பர் சுட்டிக் காட்டுகிறார்.

எமது நாட்டிலே, இனமோதலில் ஈடுபட்டுள்ள சகல தரப்பினரும் வன்செயலையும், போரையும் நிரந்தரமாக நிராகரித்துச் சமாதானத்தின் பாதையை மட்டும் இதய சுத்தியோடு தேர்ந்தெடுக்க வேண்டும். நம் ஆண்டவர் இயேசுக் கிறிஸ்துவின் பாடுகள், துயரங்களைச் சிந்திக்கும் இக்காலத்தில் எம் தேசத்தில் நடந்தேறிய துயர, அவல நிகழ்வுகளையும் நி[illegible]ணர்ந்து, உயிர்த்த இயேசு உலகிற்கு அளித்த மாபெரும் கொடையாகிய சமாதானத்தை நமது தேசத்தில் மலரச் செய்யச் சிறப்பாகத் தவமிருந்து செபிக்க உங்களை அன்போடு அழைத்து நிற்கின்றேன்.

எனவே, நமது தேசத்தில், இரத்தம் சிந்தும் அழிவுக் கலாச்சாரத்திற்கு நிரந்தர முற்றுப்புள்ளி வைக்கப்படவும், நீதியும், உண்மையும் பிறப்பிக்கும் சமாதானம் நிலைநாட்டப்படவும் இறைவார்த்தையை, நற்கருணையை மையப்படுத்தி, பங்குத்தந்தையர்கள் தம் இறைமக்களைத் தவமிருந்து, நோன்பெடுத்துச் செபிக்கவும், பாதயாத்திரைகளை மேற்கொள்ளவும் அவர்களுக்கு இத்தவக்காலத்தில் வழிவகுத்துக் கொடுக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக, இந்த நாற்பது நாட்களும் நமது தேசத்திற்குச் சமாதானம் வேண்டி நிற்கும் தவத்தோடு கூடிய பயணமாக நம் எல்லோருக்கும் அமையட்டும்.

குறிப்பாக, ஒவ்வொரு வெள்ளியும் இறைவார்த்தையை முதன்மைப்படுத்திய உபவாசத்தோடு, நற்கருணை ஆராதனை, ஒப்புரவு, மனமாற்றம், இரக்கச் செயல்கள் போன்றவற்றில் இறைமக்கள் எல்லோரும் தம்மை தாராள மனத்தோடு ஈடுபடுத்துமாறு அன்போடு வேண்டி நிற்கின்றேன். அப்போது எமது மண்ணில் இரத்த ஆறு ஓடுவது நிறுத்தப்பட்டு, உண்மை, நீதியில் விளைந்த சமாதானத்தை உயிர்த்த ஆண்டவர் நம் நாட்டுக்கு அருள்வார்.

"நம் நம்பிக்கையின் உயிருள்ள ஊற்றாகிய எம் தாய் மரியாளிடம் இந்த எம் தவக்காலப் பயணத்தை ஒப்படைப்போம்" (திருத்தந்தையின் தவக்கால சுற்றுமடல்) தம் திருமகனின் பாடுகள், மரணம், உயிர்ப்பில் அவரோடு பயணித்த அவர்கள் எம்மோடு இருந்து எம்மையும் வழிநடத்துவார்.

**கிறிஸ்து ஆண்டவரில் உங்கள்மேல் அன்புள்ள,**
**+ இராயப்பு யோசேப்பு, மன்னார் ஆயர்.**

## சிந்திக்க செய்திகள்

### மன்னிப்போம் மறப்போம்

ஒருமுறை உலகப் புகழ் பெற்ற ஓவியர் லியானார்டோ டாவின்சி இயேசுவின் இறுதி இரவு உணவுச் சித்திரத்தைத் தீட்டிக்கொண்டிருந்தார். சித்திரம் தீட்ட தனக்கு உதவி செய்ய வந்திருந்த ஒருவர்மேல் அவருக்கு அடங்காக் கோபம் ஏற்பட்டது. கடுஞ்சொற்களால் அவனை வசை பாடினார். அவனை வெளியே அனுப்பிவிட்டு, மீண்டும் அவர் சித்திரம் தீட்டினார். இயேசுவின் முகத்தின்மீது மெல்லிய கோடுகளை வரைய முயன்றார். ஆனால் இயேசுவின் முகத்தோற்றத்தை மனக்கண்ணால் உற்று நோக்கி உருக்கொடுக்க இயலாதவாறு கவனம் சிதைந்தது.

ஓவியம் தீட்டுவதை அப்படியே விட்டுவிட்டு தான் வசைமாரி பொழிந்த மனிதரிடம் மன்னிப்பு வேண்டுவதற்குப் புறப்பட்டார். அவரது கோபத்துக்கு இலக்கான மனிதர் டாவின்சியை மன்னித்து ஏற்றுக்கொண்டதாக உணர்ந்தபிறகுதான் அவர் மனச்சான்று சீராகியதாக உணர்ந்தார். மீண்டும் வந்து இயேசுவின் முகத்தை மனநிறைவோடு தீட்டி முடித்தார்.

### மண்ணில் வந்த இறைவன்

கல்கத்தாவிலுள்ள தூய சவேரியார் கல்லூரி இயேசுசபைக் குரு ஒருவர் மாணவர்கள் தேர்வு எழுதுவதை மேற்பார்வை செய்து வந்தார். அங்கு மாணவராக இருந்த இரவீந்திரநாத் தாகூர் (பிற்காலத்தில் உலகப் புகழ்பெற்ற வங்க எழுத்தாளர்) தேர்வு எழுதும்போது வருத்தமும் மனச்சோர்வும் நிறைந்தவராக இருந்தார். அவரிடம் நெருங்கிய அந்தக் குரு, அவரது தோள் மீது தோழமையுடன் கைபோட்டுப் பேசினார். "என்ன இரவீந்திரநாத், இன்றைக்கு உடல் நலம் சரியில்லையா?" தாகூர் பிற்காலத்தில் தமது 'மலரும் நினைவுகள்' (Reminiscences) நூலில் பின்வருமாறு எழுதுகிறார்: "என்னைப் பொறுத்தவரையில், மண்மீது இறங்கி வந்த இறைவன் அந்தக் குருதான்!"

### புனிதர் பொன்மொழி

கடவுளின் பார்வையில் மனிதனின் நிலையே உண்மை நிலை. - புனித அசிசியார்

விவிலியத்தை நேசி, குறைகள் உன்னைவிட்டு விலகும். புனித ஜேரோம் -

# அன்பை மையப்படுத்தி வாழவே ஆசிரியர்கள் அழைக்கப்பட்டுள்ளனர்!

## கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் யாழ் ஆயர்

ஆசிரிய சமூகத்தினர் அன்பை மையப்படுத்தி வாழவே அழைக்கப்பட்டுள்ளனர். வன்செயல்கள் நிறைந்த இவ்வுலகில் சமகால நிகழ்வுகளுக்கு முகம்கொடுத்து வாழ இந்த அன்புக்கொடை கட்டாயம் வாழப்பட வேண்டிய தேவை உணரப்படுகின்றது. இவ்வாறு கடந்த 17. 01.2006ல் கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் நடந்த ஒளிவிழாவில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு திருப்பலி ஒப்புக்கொடுத்து மறையுரையாற்றியு யாழ் ஆயர் பேரருட்திரு கலாநிதி தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தெரிவித்தார். (தொடர்ச்சி 9ம் பக்கம்)




கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் 17.01.2006 அன்று நடைபெற்ற ஒளிவிழா நிகழ்வில் கிறிஸ்தவ மன்றத் தலைவர் திரு. ஞா. எசார்வே தலைமையுரை ஆற்றுவதையும், கலாசாலை ஆன்மீக அருட்பணியாளர் மவுலிஸ் அடிகளார், கலாசாலை முதல்வர் திரு. சிறிஸ்கந்த மூர்த்தி அவர்கள், பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ் ஆயர் அதி.வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, கோப்பாய் பங்குத்தந்தை செலஸ்ரின் அடிகளார், ஆயருடைய செயலர் றொசான் அடிகளார், கலாசாலை விரிவுரையாளர் திரு. அந்தோனிப்பிள்ளை ஆகியோர் மேடையில் அமர்ந்திருப்பதை காணலாம்.

## மீண்டும் அன்பிய இராகம்


மன்னார் மறைமாவட்ட இறைமக்களுடைய பாவனைக்காக *அன்பிய இராகம்* என்னும் பாடல் புத்தகம் மீள்பதிப்பு செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

மறைமாவட்டத்திற்குள்ளே இதனுடைய விலை 100 ரூபாவாகவும், மறைமாவட்டத்திற்கு வெளியே 140 ரூபாவாகவும் இருக்கும். இப்பாடல் புத்தகத்தை வெளிக்கொணர்ந்த அருட்பணியாளர் அந்தோனிதாஸ் டலிமாவைப் பாராட்டுகின்றோம், வாழ்த்துகிறோம்.

## மக்களின் வளர்ச்சியில் முரண்பாடுகள் அவசியம்!

கடந்த ஜனவரி 27,28ம் திகதிகளில் மன்னார் மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியம் (CHA) காரியாலயத்தினால் *முரண்பாடுகளைத் தீர்த்தல்* பற்றிய அரச ஊழியர்களுக்கான பயிற்சி நடைபெற்றது. இப்பயிற்சியில் முரண்பாடுகளினால் நாம் அடையும் நன்மைகள் பற்றியும், முரண்பாட்டின் அவசியம், எதிர்நோக்குகள் பற்றியும் ஆராயப்பட்டது.

முரண்பாடு என்றால் என்ன? எவ்வாறு உருவாகின்றது? முரண்பாட்டை எவ்வாறு பகுப்பாய்வு செய்யலாம்? முரண்பாட்டினால் எவ்வாறு சமாதான அபிவிருத்திக்கு திட்டமிடலாம், முரண்பாட்டின் சாதக பாதக பயன்கள் எவை? திணைக்கள, கிராம, அரச, அரசசார்பற்ற காரியாலய முரண்பாடுகளை எவ்வாறு இனங்கண்டு குறைக்கலாம் போன்ற விடயங்கள் ஒப்படைகள், விளையாட்டுக்கள், கருத்துரைகள், குழு வேலைகள் மூலம் விளக்கப்பட்டன. இதில் 25க்கு மேற்பட்ட சிரேஸ்ர ஊழியர்கள் கலந்து பயன்பெற்றனர். இந்நிகழ்வில் அருட்சகோதரர் கலாநிதி பப்ரிஸ் குரூஸ் அவர்கள் *முரண்பாடும் மன்னிப்பும்* என்ற கருப்பொருளில் உரையாற்றினார்.



## அமதிகள் சபைக்கு திருச்சபை அங்கீகாரம் கிடைத்த 180வது ஆண்டு நிறைவு

அமலமரித் தியாகிகள் சபையின் 180ஆவது ஆண்டு நிறைவுகாணும் வேளையில் யாழ் மாகாணத்தைச் சேர்ந்த 7 அருட்சகோதரர்கள் தமது நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டனர். பெப்பரவரி மாதம் 16ம் திகதி கொழும்புத்துறை புனித சூசையப்பர் ஆலயத்தில் அமதிகளின் யாழ் மாகாண முதல்வர் அருட்தந்தை சா. ம. செல்வரட்ணம் அடிகளாரின் தலைமையில் இடம்பெற்ற திருப்பலியிலேயே இவர்கள் தமது நித்திய அர்ப்பணத்தை மேற்கொண்டார்கள். இவர்களுக்கு தியாக்கோன் பட்டமளிக்கும் திருச்சடங்கும் அமலமரித்தியாகிகள் சபைக்கு திருச்சபை அங்கீகாரம் வழங்கியதன் 180 ஆண்டு நிறைவு நன்றித் திருப்பலியும், பெப்ரவரி மாதம் 17ம் திகதி காலை 7.30 மணிக்கு அநுராதபுர மறைமாவட்ட ஆயர் மேதகு நோபட் அந்திராடி அ.ம.தி ஆண்டகையின் தலைமையில் இடம்பெற்றது.

## திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்றுகூடல்




மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்களுக்கான கிறிஸ்மஸ் ஒன்று கூடலானது 14.12.2005 அன்று மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் மன்னார் மறைமாவட்ட திருப்பாலர் சபை இயக்குனர் அருட்பணியாளர் அவிதப்பர் அடிகளாரின் தலைமையில் ஆரம்பமாகியது. இதில் மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகை அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

## தலைமன்னாரில் முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

கடந்த 16.02.2006 அன்று தலைமன்னார் புனித லோறன்ஸ் ஆலய பங்கு முதியோர்கள் ஆலய போட்டிக்கோ முன்றலில் பங்கு மக்கள் புடைசூழ ஒன்றுகூடி இருந்தனர். திருப்பலியோடு முதியோர் சங்க அங்குரார்ப்பண நிகழ்வுகள் ஆரம்பமாகின. அருட்பணியாளர் விக்ரர் சோசை தனது மறையுரையில் காதலர் தினமான இன்றைய நாளில் முதியோர் தின அங்குரார்ப்பண வைபவம் தலைமன்னார் பங்கின் வரலாற்றுச் சரித்திரத்தில் நடைபெற்றமை நல்லதோர் மங்கள கரமான நிகழ்வாக நாம் பெருமைப்படுகின்றோம் என்றார்.

திருப்பலி நிறைவெய்தியதும் பொது ஒன்றுகூடல் நடைபெற்றது. ஒன்றுகூடலை ஆரம்பித்துவைத்த பங்குத் தந்தை டலிமா அடிகளார், முதியோர் பணி இயக்குனர் அருட்தந்தை விக்ரர் சோசை, மறைமாவட்ட முதியோர் சங்கத் தலைவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் பாக்கியம், மற்றும் அதன் பொருளாளர் ஓய்வுபெற்ற ஆசிரியர் குணம் ஆகியோர் அன்றைய தினத்தைச் சிறப்பிக்க வந்தமைக்காக நன்றிகூறி அவர்களின் சேவை மனப்பான்மையையும் பாராட்டினார்.

பின்னர் முதியோர் பணி இயக்குனர் விக்ரர் அடிகளார் உரையாற்றினார். அவர் தனது உரையில், வேறெந்தப் பங்கிலும் இல்லாதவாறு இங்கு முதியோர் இளம் தம்பதியர் போன்று அணிவகுத்து பவனி வந்தது மிகச் சிறந்ததோர் அம்சம் என்று முதியோரைப் பாராட்டினார்.

ஈற்றில் தலைமன்னார் பங்கின் முதியோர் சங்கத் தலைவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் செபஸ்தியான் குலாஸ் தனது நன்றியுரையில் வருகை தந்த நிர்வாகிகளுக்கும் பங்கு மக்களுக்கும் நன்றி கூறி எல்லோரையும் ஒத்துழைப்பு நல்கி சங்கம் வளர ஒவ்வொருவரும் பங்களிக்க வேண்டும் என்று கூறி ஒன்றுகூடலை நிறைவுசெய்தார். இதைத் தொடர்ந்து, இரவு விருந்து சகலருக்கும் பரிமாறப்பட்டதுடன் அன்றைய நிகழ்வு இனிதே மங்களகரமாக காதலர் தினம் முதியோர் தினமாக மாறி நிறைவுபெற்றது.

*தகவல் - எஸ். அல்விறெட் சில்வா,*
*இளைப்பாறிய தபாலதிபர்,*
*தலைமன்னார் கிராமம்.*

## பங்குத்தள சங்கதிகள்

### முருங்கன் பிச்சகுளத்தில் இளைஞர் ஒன்றுகூடல்

மன்னார் வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய கத்தோலிக்க இளைஞர் ஒன்றிய ஒன்றுகூடல் கடந்த 24ம் திகதி பிச்சகுளம் புனித செபமாலை மாதா ஆலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் 75க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பங்கேற்றனர். மறைமாவட்ட இளைஞர் ஒன்றிய இயக்குனர் ஞானாதிக்கம் அடிகளார், துணை இயக்குனர் ஞானப்பிரகாசம் அடிகளார், செட்டிகுளம் பங்குத்தந்தை ஸ்ரீபன்ராஜ் அடிகளார், முருங்கன் பங்குத்தந்தை அன்ரன் அடிகளார், முருங்கன் கார்மேல்சபை சகோதரிகள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றுச் சிறப்பித்தார்கள். 25ந் திகதி காலைத் திருப்பலியுடன் ஒன்றுகூடல் நிறைவுபெற்றது.


*தகவல்: அ. அலெக்சாந்தர், பிச்சகுளம்.*

### முருங்கனில் முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம்

முருங்கன் பங்கை உள்ளடக்கிய பிச்சகுளம், சுண்டிக்குளி, சிறுக்கண்டல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த முதியோர்களின் நலன் கருதி முதியோர் சங்கம் முருங்கன் பங்குத்தந்தை அன்ரன் அடிகளாரின் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்டது. முதியோரை கௌரவிக்கும் முகமாக கடந்த 26ம் திகதி ஞாயிறு அன்று சிறப்புத் திருப்பலியும் தொடர்ந்து மன்னார் மறைவட்ட முதியோர் சங்க சமாசத் தலைவர், பொருளாளர், முருங்கன் கார்மேல்சபை சகோதரி ஆகியோருடன் முதியோர் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. அத்தோடு இவர்களுக்கு பிச்சகுளம் மாதர் சங்க சார்பில் வேல்ட்விஷன் உதவியுடன் அங்கத்தவர்களுக்கு அன்பளிப்பும் வழங்கப்பட்டது.

*தகவல்: அ.அலெக்சாந்தர், பிச்சகுளம்.*

## யாழ் திருமறைக்கலா மன்றத்தின் கலைத்தூது அழகியல் கல்லூரி



யாழ் திருமறைக் கலாமன்றத்தின் "கலைக்கோட்டம்" புதிய கட்டடத்தொகுதி 14.01.2006 அன்று யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் திறந்துவைக்கப்பட்டது. யாழ். மறைக்கோட்ட முன்னாள் முதல்வர் ஜே. பி. ஈ. செல்வராஜா, பிரதமவிருந்தினராக கலந்துகொண்டு கட்டடத் தொகுதியை திறந்துவைத்தார். கவின்கலைகள் பயில்வதற்கென பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட கலைத்தூது அழகியல் கல்லூரியுடன் மகாநாட்டு மண்டபம் போன்ற பல வசதிகளைக் கொண்ட மூன்று மாடிக்கட்டடமே திறந்து வைக்கப்பட்டது. (தொடர்ச்சி 9ம் பக்கம்)

## அருட்பணியாளர் அன்ரனி பாலாவின்
# 'சீர் சமைத்த சிற்பி' நூல் வெளியீடு

"பொதுவாக இலங்கையிலும் சிறப்பாகத் தமிழர் தாயகத்திலும் இடம்பெற்ற நிகழ்வுகள், பணிகள் மற்றும் வாழ்ந்து மறைந்த பெரியோர் பற்றிய ஆய்விற்கே யாழ். பல்கலைக்கழகம் முதன்மை இடம்கொடுக்கின்றது.

இவ்வாறு பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் "சீர் சமைத்த சிற்பி" என்றும் நூல் வெளியீட்டு விழாவில் குறிப்பிட்டார்.

கடந்த 19.12.2005 திங்கள் மாலை 3.00 மணிக்கு யாழ்ப்பாணம் அகவொளி குடும்பவளத்துணை நிலையக் கேட்போர் கூடத்தில், *"யாழ்ப்பாணக் கத்தோலிக்க மறைமாவட்டத் திருச்சபையில் ஆயர் ஜேக்கப் ஜெரோம் எமிலியானுஸ்பிள்ளை அ.ம.தி.யின் (1901 – 1972) வாழ்வும் பணியும்"* என்னும் பொருளில் ஆய்வு நூல் வெளியிட்டுவைக்கப்பட்டது.

அருட்பணி ஜே.பி.ஈ.செல்வராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட் கலாநிதி இ. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை பிரதம விருந்தினராகவும், பேராசிரியர் அ. சண்முகதாஸ் அவர்கள் கௌரவ விருந்தினராகவும், அருட்கலாநிதி ஜே. ஈ. ஜெயசீலன் அவர்கள் சிறப்பு விருந்தினராகவும் கலந்து சிறப்பித்தனர்.

விருந்தினர்களை வரவேற்றதைத் தொடர்ந்து மறைந்த முன்னாள் முதல் சுதேச தமிழ் யாழ் ஆயர் ஜேக்கப்பிள்ளை ஜேரோம் எமிலியானுஸ்பிள்ளை அவர்களின் படத்திற்கு நூல் ஆசிரியர் அருட்பணியாளர் அன்ரனி பாலா அவர்களினால் மலர்மாலை அணிவிக்கப்பட்டது. தற்போதைய யாழ் ஆயர்,' அருட்சகோதரி யுஸ்தீனா (தி. கு. ச,) மறைப்போதகர் கி. கி. பங்கிராஸ் மூவரும் ஆயரின் படத்திற்கு விளக்கேற்றினர். (தொடர்ச்சி 9ம் பக்கம்)

## மன்னார் திருமறைக்கலாமன்றத்திற்கு
# இசைக்கருவிகள் அன்பளிப்பு




மன்னார் திருமறைக்கலாமன்றத்திற்கு இசைக்கருவிகள் வழங்கும் நிகழ்வு கடந்த பெப்ரவரி மாதம் 15ம் திகதி மன்னார் வை. எம். சி. ஏ. மண்டபத்தில், மாலை 4.00 மணியளவில் நடைபெற்றது. இந்நிகழ்வை மன்னார் திருமறைக்கலாமன்றம் சிறப்பாக ஏற்பாடு செய்திருந்தது. பாராளுமன்ற உறுப்பினர் வினோ அவர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து ஒதுக்கப்பட்ட 50,000 ரூபா பெறுமதியான ஓகன், மிருதங்கம், றபாணம் போன்ற இசைக்கருவிகள் கௌரவ வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் வினோ அவர்களினால் வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் வினோ, மன்னார் பிரதேச செயலாளர் திருமதி. ஸ்ரான்லி டிமெல், பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் திரு. சசிகரன், திருமறைக்கலாமன்ற இணைப்பாளர் திரு. பொஸ்கோ, உதவி இணைப்பாளர், செயலாளர், உதவிச் செயலாளர், பொருளாளர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், அலுவலர்கள், பயிற்சியாளர் வட்ட உறுப்பினர்கள், சிறுவர் கலைக்கூட சிறுவர்கள் ஆகியோர் இந்நிகழ்வில கலந்து சிறப்பித்தனர்.

## கத்தோலிக்க ஆசிரியர்களே!

**அருளின் காலமாகிய இத்தவக்காலத்தில் உங்களுக்கோர் அன்பான அழைப்பு!**

இறை உறவில் மகிழ்ந்திருக்க,
இறைவார்த்தையால் ஊட்டம்பெற,
பாடுகளில் பங்கேற்று உயிர்ப்பை உணர,
உடல் உள ஆன்மீகக் குணம்பெற
ஆசிரிய அர்ப்பணத்தை ஆழப்படுத்த,

**இதோ ஆண்டவர் உங்களை அழைக்கின்றார்**

**நல்லதோர் வாய்ப்பை நழுவவிடாதீர்கள்!**

**கத்தோலிக்க ஆசிரியர்களுக்கான**

**வருடாந்த தவக்காலத் தியானத்தில் பங்கேற்க வாருங்கள்!**

இடம் : மடுத்திருப்பதி

காலம் : 24.25.26 மார்ச். 2006 (வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம் : 24ந் திகதி மாலை 6.00 மணி தொடக்கம்
26ம் திகதி காலை 10.00 மணிவரை.

உங்கள் ஆன்மீக வாழ்வை ஆழப்படுத்த அரியதோர் சந்தர்ப்பம்!

பங்கேற்கும் அனைவருக்கும் உணவு, தங்குமிட வசதிகள் உண்டு. பாடசாலை மட்டத்தில் அல்லது பங்கு மட்டத்தில் நீங்களே வாகன ஒழுங்குகளை மேற்கொண்டு மடுத்திருப்பதிக்கு வாருங்கள். உங்கள் ஆசிரிய நண்பர்களையும் அழைத்து வாருங்கள்.

*- மறைக்கல்வி நிலையம், மன்னார்*

# கல்வாரித் திருத்தலம்

## பெரிய கோமரசங்குளம், வவுனியா

மன்னார் மறைமாவட்டத்தில் உள்ள யாத்திரைத் தலங்களில் பெரிய கோமரசங்குளத்தில் அமைந்துள்ள கல்வாரித் திருத்தலமும் ஒன்றாகும். இது 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

இத்தவக்காலத்தில் இறைவனின் மாபெரும் பாஸ்கா நிகழ்ச்சிகளை இயற்கையில் காண, உண்மை நிலையில் அதனை தியானிக்க, இயேசுவுடன் இணைந்து பயணிக்க, அமைதியாக செபிக்க தியானிக்க உகந்த ஒரு திருத்தலம் இதுவாகும்.

### வழிபாடுகள்

- தவக்காலத்தில் ஒவ்வொரு வெள்ளியும் மாலை 5.30க்கு சிலுவைப் பாதையும், திருப்பலியும் இடம்பெறும்.
- பங்கு மட்டத்தில் யாத்திரிகர்களாக வருபவர்களுக்கு (தேவைப்படின்) திருப்பலி நடைபெற ஒழுங்கு செய்துதரப்படும்.
- தவக்காலத்தின் 6ம் கிழமை மாபெரும் சிலுவைப்பாதை மாலை 3.30 மணிக்கு இடம்பெறும். திருப்பலியும் நடைபெறும்.

*"நம் ஆண்டவர் இயேசுக்கிறிஸ்துவின் பாடுகள் துயரங்களைச் சிந்திக்கும் இக்காலத்தில் எம் தேசத்தில் நடந்தேறிய துயர அவல நிகழ்வுகளையும் நினைவில் கொணர்ந்து உயிர்த்த இயேசு உலகிற்கு அளித்த மாபெரும் கொடையாகிய சமாதானத்தை நமது தேசத்தில் மலரச் செய்யச் சிறப்பாகத் தவமிருந்து செபிக்க உங்களை அன்போடு அழைத்து நிற்கின்றேன்."* (ஆயரின் தவக்கால மடல்)

என்று எமது ஆயரின் தவக்காலச் செய்தி சுட்டிக்காட்டுகிறது. இக்காலம் அருளின் காலம், மனமாற்றத்தின் காலம் ஆகவே குடும்பமாக, குழுக்களாக, பங்குகளாக சேர்ந்து செபிக்க உகந்த இடம் கல்வாரித் திருத்தலம் ஆகும்.

### யாத்திரிகர்களின் கவனத்திற்கு

- நீங்கள் எப்போதும் வந்து செல்லலாம்.
- போக்குவரத்து ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
- ஒவ்வொரு அரைமணி நேரமும் வவுனியா பேரூந்து நிலையத்தில் இருந்து சிதம்பரபுரம் நோக்கி வரும் பேரூந்துகளில் பயணம் மேற்கொள்ளலாம்.
- 6ம் கிழமை மட்டும் கல்வாரி வரையும் விஷேட பேரூந்துகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

நேர காலத்தோடு அறிவிக்கும் பட்சத்தில் மலிவான விலையில் சுவையான மதிய உணவுப் பொதிகள் ஒழுங்குசெய்து தரப்படும். மதிய உணவு தேவைப்படுவோர் உங்கள் பங்குத்தந்தை ஊடாக கோமரசங்குள பங்குத்தந்தையை தொடர்பு கொள்ளவும்.

"நாம் நம்பிக்கையின் உயிருள்ள ஊற்றாகிய எம் தாய் மரியாவிடம் இந்த எம் தவக்காலப் பயணத்தை ஒப்படைப்போம்". (திருத்தந்தையின் தவக்கால மடல்) இறைவனின் நிபந்தனையற்ற அன்பையும், இரக்கத்தையும் உய்த்துணர்ந்து முழு இதயத்தோடும் இறைவனை நோக்கிப் பயணிக்க உங்களை அன்போடு அழைக்கின்றோம்.

*பங்குத்தந்தை,*
*பெரியகோமரசங்குளம், வவுனியா.*

## மன்னார்த் திருச்சபை செய்திகள்

- 2006ம் ஆண்டிலும், மன்னார் மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கு சீருடை வழங்குவதற்கான ஏற்பாடுகளை மன்னார் மறைக்கல்வி நிலையம் மேற்கொண்டுள்ளது.

- மன்னார் சமூகத் தொடர்பு நிலையத்தினால், தவக்காலத்திற்குரிய ஞாயிறு திருப்பலி வாசகங்கள் அச்சடிக்கப்பட்டு, பங்குகளுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

- மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவசபை சிறார்களுக்கான சின்னம் வழங்கும் நிகழ்வுகள் நான்கு மறைக்கோட்டங்களில் நடைபெற உள்ளது. 04.03.2006 அன்று ஆட்காட்டிவெளியிலும், 11.03.2006 அன்று உயிலங்குளத்திலும், 14.03.2006 அன்று மன்னாரிலும், 18.03.2006 அன்று வவுனியாவிலும் இந்நிகழ்வுகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

- அருட்பணியாளர் யூட் குரூஸ் அடிகளார் வடஇந்தியாவின் மகாராஷ்ட மாநிலத்தில் நக்பூர் என்ற இடத்தில் திருச்சபையியல் சார்ந்த 40 நாள் கருத்தரங்கில் பங்கெடுத்துவிட்டு நாடு திரும்பியுள்ளார்.

- மன்னார் ஆயர் யோசேப்பு ஆண்டகை அவர்கள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இனந்தெரியாதோரால் கடத்தப்பட்ட புணர்வாழ்வுக் கழக பணியாளர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக்கோரி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு கடிதம் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

- மன்னார் மாந்தை லூர்து அன்னை ஆலயத்திருவிழா கடந்த பெப்ரவரி மாதம் 11ம் திகதி காலை 7.30 மணிக்கு இடம்பெற்றது. குருமுதல்வர் சேவியர் குரூஸ் அடிகளார் திருவிழாத் திருப்பலியை தலைமைதாங்கி ஒப்புக்கொடுத்தார்.

## மன். திருமறைக்கலாமன்ற செய்திகள்

- கடந்த 06.02.2006 அன்று திருமறைக்கலாமன்றத்தின் இயக்குனர் பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் மன்னாருக்கு விஜயம் செய்து மன்னார் மன்றத்தின் புதிய அலுவலகத்தைப் பார்வையிட்டு உறுப்பினர்களோடு கலந்துரையாடினார்.
- கடந்த 18.02.2006 அன்று ஒரு நாள் நிகழ்வாக குஞ்சுக்குளம் கிராமத்தில் சிறுவர் பயிற்சிப் பட்டறை நட்புறவு முகாம் நடாத்தப்பட்டிது.
- மன்னார் பிரதான வீதியில் பிரஜைகள் குழு காரியாலயத்திற்கு அருகில் இயங்கிவந்த மன்ற அலுவலகம் தற்போது அதே வீதியில் ரி. ஆர். ஓ அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள ***டிவா*** இல்லத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

# செய்திகள் சில வரிகளில்

## யாழ் திருச்சபைச் செய்திகள்

- யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் தயாகரன் அவர்கள் ***'வேண்டுகிறேன்'*** என்ற ஒலிநாடாவை அண்மையில் வெளியிட்டுள்ளார்.

- யாழ் ஆயர் இல்லத்தில் தங்குமிட இல்லம் (Resident Quarters) ஒன்று கட்டிமுடிக்கப்பட்டு, திறக்கப்படும் தறுவாயில் உள்ளது.

- யாழ் கத்தோலிக்க அச்சகத்தின் வளாகத்தில் அழகான பல்நோக்கு அரங்கு ஒன்று ( An Attractive Multi – Purpose Auditorium) கட்டப்பட்டு வருகிறது. மறைமாவட்டத்தின் பல ஆண்டுத் தேவையை பூர்த்தி செய்யும் அவசியமான ஓர் அரங்கு என இது கருதப்படுகிறது.

- யாழ் மறைமாவட்டத்தின் குருக்கள் ஒன்றியத்தினால் வெளியிடப்படும், 2006ம் ஆண்டு தை மாதத்திற்கான Fraternity மீண்டும் வெளிவந்துள்ளது. இதன் பதிப்பாசிரியர் அருட்பணியாளர் பி. ஜே. ஜெபரெட்ணம் ஆவார்.

- யாழ் மறைமாவட்டத்தின் ***அகவொளி*** என்று அழைக்கப்படும் குடும்பப் பணிநிலையம் அயர்லாந்து பல்கலைக்கழகமொன்றுடன் இணைக்கப்படவுள்ளது. அகவொளியின் இயக்குனர் அருட்பணியாளர் எஸ். ஜே. இராஜநாயகம் அவர்களின் அயராத முயற்சியினால் அகவொளி இந்த வளர்ச்சிக் கட்டத்தை அடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## திருமலை - மட்டுநகர் திருச்சபைச் செய்திகள்

- திருமலை மட்டுநகர் ஆயர் அவர்கள் இந்த ஆண்டை தமது மறைமாவட்டத்தில் ***இறைவார்த்தை ஆண்டாக*** சிறப்பிக்கும்படி 2006ம் ஆண்டிற்கான தனது திட்டமிடல் சுற்றுமடலில் அழைப்பு விடுத்திருக்கின்றார்.

- திருகோணமலை, மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் முதன் முதல் கட்டப்பட்ட ஆலயம் என்ற பெருமைக்குரிய தாண்டவன்வெளி புனித காணிக்கை அன்னை ஆலயம் மீண்டும் புதிதாகக்கட்டப்பட்டு கடந்த ஜனவரி மாதம் 26ம் திகதி மேதகு ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

- திருமலை மட்டுநகர் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் ஜீவராஜ் அடிகளாரின் தனி முயற்சியாக ***தருகின்றேன் இறைவா*** என்ற ஒலிநாடா வெளிவந்துள்ளது. திருப்பலியின்போது பாடக்கூடிய பாடல்கள் இதில் இடம்பெற்றுள்ளன.

## உலகத் திருச்சபைச் செய்திகள்

- நியூசிலாந்து நாட்டுக் கருதினால் பேரருட்திரு பியோஸ் தியோப்பிலு ஜனவரி 19ம் திகதி காலமானார். இவரது அடக்கச் சடங்குகள் 28ஆம் திகதி சனிக்கிழமை நடைபெற்றது.

- உலகில் மிகவும் பிரபல்யமான அருங்காட்சியகங்களில் ஒன்றாகிய வத்திக்கான் அருங்காட்சியகம் இவ்வருடம் தனது 500 ஆண்டுகள் நிறைவைக் காண்கின்றது. 1506ம் ஆண்டு ஜனவரி 14ம் திகதி திருத்தந்தை 2ம் யூலியஸ் அவர்களினால் இவ் அருங்காட்சியகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. வத்திக்கானிலுள்ள திருத்தந்தையின் இல்லம் அமைந்துள்ள வளாகத்திலேயே இந்த அருங்காட்சியகமும் அமைந்துள்ளது.

- இரண்டாம் வத்திக்கான் சங்க கொள்கைத்திரட்டில் அமைந்துள்ள ***இறைவெளிப்பாடு*** என்ற ஏடு உருவாக்கப்பட்டதன் 40ம் ஆண்டு நிறைவை உலகத் திருச்சபை இவ்வருடம் நினைவுகூறுகின்றது.

- தமிழக முதல்வர் அண்மையில் கிறிஸ்தவ ஆலயங்களில் அன்னதானம் எனும் திட்டத்தை தொடங்கியுள்ளார். இது குறித்து கிறிஸ்தவர்கள் சார்பில் ஆயர்கள் பேரவை எதிர்ப்பையும் வருத்தத்தையும் தெரிவித்துள்ளது.



## புலம்பெயர் நாட்டு நம்மவர் செய்திகள்

- ஜேர்மன் தமிழ்க் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தினால். இவ்வருட தவக்காலத்தில் ***'செந்நீர்க் கலசம்'*** என்ற பெயரில் திருப்பாடுகளின் காட்சி அரங்கேற உள்ளது. இதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

- கனடா ரொறன்ரோ வாழ் தமிழ்க் கத்தோலிக்க மக்களுக்கென சொந்த ஆலயம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. தமிழ்ப் பங்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ரொறன்ரோ மறைமாவட்ட பேராயரினால் வழங்கப்பட்டுள்ள புனித சூசையப்பர் ஆலயம், 172, Lesile street (Leslie & Queen. E) சந்திக்கு அண்மையில் அமைந்துள்ளது.

தவக்காலச் சிறப்பிதழ்...... தவக்காலச் சிறப்பிதழ்...... தவக்காலச் சிறப்பிதழ்...... தவக்காலச் சிறப்பிதழ் ......



# பாதைக்கு வரட்டும் பாதங்கள்.



## தவக்காலச் சிந்தனைகள்

"காலம் நிறைவேறிவிட்டது. இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது. மனம் மாறி நற்செய்தியை நம்புங்கள்" (மாற்கு 1:15)

### தவக்காலம் :

திருவழிபாட்டு ஆண்டில் திருச்சபை மீட்பின் வரலாற்றை நினைவு கூர்ந்து கொண்டாடுகிறது. பாஸ்கா மறைபொருளாகிய நம் ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம், உயிர்ப்பு இவற்றை ஆண்டு முழுவதும் கொண்டாடி, இந்தப் பாஸ்கா மறைபொருளை நமதாக்கிக்கொள்ளத் திருச்சபையின் திருவழிபாட்டுக் கொண்டாட்டங்கள் நம்மை அழைக்கின்றன.

நமது ஆண்டவர் இயேசுவின் பாடுகள், மரணம் இவற்றைச் சிறப்பாக நினைவுகூர்ந்து கொண்டாடும் காலம் இந்தப் புனிதமான காலம். தவக்காலம் அருளின் காலம். மன்னிப்பின் காலம். ஒப்புரவின் காலம். மனமாற்றத்தின் காலம். புது மனிதனாக வாழ நம்மை அழைக்கும் காலம். நாமும் இயேசுவோடு புதியனவற்றிற்கும், உண்மைக்கும், நீதிக்கும், அன்புக்கும், மனித நேயத்திற்கும் கடந்துவர நம்மைத் தூண்டும் காலம். இறைவனை விட்டு விலகிய பாதங்களை மீண்டும் இறைவனின் பாதையில் பதியச் செய்திடும் காலம்.

### மனமாற்றம் : (Conversion)

தவக்காலத்தின் மையப்பொருளாய் அமைவது மனமாற்றம். மனமாற்றம் இல்லாமல் முடிந்துபோன தவக்காலமும், பக்தி முயற்சிகளும் நம்மைப் பொறுத்தவரை, "இது இந்த ஆண்டில் வந்த தவக்காலம்." வருடந்தோறும் வாடிக்கையாக வந்த நிகழ்வு. நம் வாழ்வில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது.

மனமாற்றம் என்ற சொல் மெட்டனோயா (Metanoia) என்ற கிரேக்கச் சொல்லில் இருந்து வருகிறது. இச்சொல் தீமையிலிருந்து விலகி, நல்லவராம் கடவுளை நோக்கித் திரும்புவதைக் குறிக்கிறது. இது ஒருவனின் நடத்தையிலும், முழு மனிதனிலும் உண்டாகும் மாற்றத்தைக் குறிக்கிறது. மனமாற்றம் நமது உள்ளத்தின் ஆழத்தில் உறையும் இறைவனை நோக்கிய பயணம். இப்பயணம் வருத்தங்களையும், இழப்புக்களையும் உள்ளடக்கியது. ஆனால் மனமாற்றத்தைத் தொடங்கி, அதை வழிநடத்தி நிறைவுபெறச் செய்யும் தூயஆவியின் துணையால் ஒவ்வொருவரும் இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும். சுருங்கக்கூறின் ஒவ்வொரு மனிதனும், முழு அறிவுடன் மனப்பூர்வமாக இறைவனின் உறவில் இணைவதும், இந்த உறவின் இணைப்பில் வரும் விளைவுகளை எதிர்கொள்ளத் தன்னையே ஆயத்தப்படுத்திக் கொள்வதுமாகும்.

### விவிலியமும்– மனமாற்றமும்

எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டுவரப்பட்ட இஸ்ரயேல் மக்களோடு, சீனாய் மலையில் கடவுள், *"நான் உங்கள் கடவுள் என்றும், நீங்கள் என்னுடைய மக்கள்"* என்றும் ஓர் உடன்படிக்கையைச் செய்துகொண்டார். அவ்வுடன்படிக்கையின் அடையாளமாகப் *'பத்துக் கட்டளை'* களை இஸ்ரயேல் மக்கள் பெற்றுக்கொண்டனர். ஆனால் உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமில்லாமல் இஸ்ரயேல் மக்கள் அதை மீறி நடந்தனர், பாவம் செய்தனர். உடன்படிக்கையை உடைத்தல், சிலை வழிபாடு, சமூகத் தீமைகள், பொருளாதார ஏற்றத்தாழ்வு, ஏழைகளைச் சுரண்டுதல், இச்சைகளுக்குக் கையளித்தல் போன்ற பாவங்கள் இஸ்ரயேல் சமூகத்தில் பெருகின.

இஸ்ரயேல் மக்களின் பாவவாழ்க்கையின் உச்சக்கட்ட தண்டனையாகத்தான் ஒன்றாக இருந்த கானான் நாடு, யூதா - இஸ்ரயேல் என இரண்டாகப் பிரிந்தது. இஸ்ரயேலின் அசீரிய அடிமைத்தனம், பாபிலோனிய அடிமைத்தனம் இவைகள் இவர்களின் பாவத்தின் விளைவுகளே என விவிலிய விளக்க உரைகள் விவரிக்கின்றன. ஆனால் பாசம் கொண்ட கடவுள், தக்க காலத்தில், ஏற்ற இறைவாக்கினர்களை அனுப்பி, அவர்கள் வழியாகப் பாவ வழியைவிட்டு மனம்மாறவும், உடன்படிக்கைக்கும் தமக்கும் பிரமாணிக்கமாக இருக்கவும் அழைப்பு விடுக்கின்றார். குறிப்பாக நீதியின் இறைவாக்கினரான ஆமோஸ் மற்றும் ஓசேயா, எசாயா, எரேமியா, எசேக்கியேல் இவர்களின் நூல்களில் மனமாற்றத்திற்கான கடவுளின் அழைப்பும், மனம்மாறாவிட்டால் வரும் தீமைகளின் எச்சரிக்கைகளும் மிகுந்து இருப்பது தெளிவாக உள்ளது. (காண்க : ஆமோ 5:4,6, 5:15, ஓசே 14:2-9, 6:1-6, எசா. 1:11-15, 1:16-17, 30:15, எரே.36:3, 4:1-4, எசே. 18:31,32, 22:1-31)

புதிய ஏற்பாட்டில், "இயேவின் பொதுப்பணி தொடக்கமே மனமாற்றத்திற்கான அழைப்பும், கடவுளின் அரசின் வருகையைப் பற்றியதுமாக உள்ளது. (காண்க. மாற். 1:15). பவுலடியாரும் தம் திருமடல்களில் மனமாற்றம்பற்றி வலியுறுத்துகிறார். புதிய ஏற்பாட்டில் கடவுளின் அன்பும், மனம்மாறி வருபவர் பெறும் மன்னிப்பும், மகிழ்ச்சியும் போதியளவு, தெளிவாக விளக்கப்படுகிறது. ஆனால் மனமாற்றம் வாழ்வில் வெளிப்பட வேண்டும் என்ற நிபந்தனை இலைமறை காயாய் மனமாற்ற அழைப்புச் செய்திகள் மற்றும் நிகழ்வுகளில் அடங்கி உள்ளதை யாரும் மறுப்பதற்கில்லை.

### சக்கேயு – மனமாற்றத்தின் மாதிரி : (லூக்கா 19:1–10)

புதிய ஏற்பாட்டில் சக்கேயுவின் மனமாற்றம் குறிப்பிடத்தக்கது. இவரின் மனமாற்றமே இயேசுவை அவ்வீட்டிற்கு "மீட்பு உண்டாயிற்று" என அறிவிக்கச் செய்தது. சக்கேயு ஒரு யூதர். ஆனால் வரி தண்டுபவர் என்ற காரணத்தால் தம் இனத்தாராலேயே ஒதுக்கப்பட்டவர், வெறுக்கப்பட்டவர். அவரிடம் பதவி, புகழ், பணம், அரசியல் செல்வாக்கு அனைத்தும் இருந்தன. ஆனால் அவருக்குள் மகிழ்ச்சி இருக்கவில்லை. உறவு என்று சொல்ல ஒருவரும் இல்லை. தனிமை அவரை வாட்டியது. அவரின் பணமோ, பதவியோ, புகழோ அவர் விரும்பிய மகிழ்ச்சியைத் தர முடியவில்லை. உள்ளத்தில் எப்போதும் ஒரு விரக்தியை உணர்ந்தார். இவரின் மனமாற்றம் மூன்று படிநிலைகளில் ஏற்பட்டுள்ளது.

#### 1. தன் நிலை உணருதல் :

- தன்னிடம் பணம் உண்டு. ஆனால் மகிழ்ச்சி இல்லை.
- தன்னிடம் இல்லாத மகிழ்ச்சியைத் தேடி அலைந்தார்.

#### 2. இயேசுவைக் காண தீர்க்கமான முடிவெடுத்தல் :

- தனது குட்டையான உடல் குறையைத் தடையாகக் கருதாது, இயேசுவைப் பார்க்க, காட்டு அத்திமரத்தின்மீது ஏறினார். அன்பே உருவான இயேசு அவரை அணுகி, "சக்கேயுவே, இறங்கி வாரும். இன்று உமது வீட்டில் நான் தங்க வேண்டும்" என அழைத்தார். தம்மை விட்டுவிலகியே போய்க்கொண்டிருந்த மனிதரைப் பெயர் சொல்லி அழைத்துச் சக்கேயுவின் வீட்டில் தங்க விருப்பம் தெரிவித்தார் இயேசு. இந்தச் செயலால் சக்கேயு தொடப்பட்டார். ஒரு புதிய அனுபவத்தைப் பெற்று மனமாற்றத்தின் அடுத்த நிலைக்குச் செல்கிறார்.

#### 3. மனமாற்றத்தை வாழ்வில் காட்டுதல் :

இயேசுவைத் தம் வீட்டில் வரவேற்ற சக்கேயு, மனம்மாறிய செய்தியை அறிவிக்கிறார். இயேசுவைச் சந்திக்கும்வரை அவர் பழைய மனிதர், பலரை ஏமாற்றிக் கட்டாயப்படுத்திப் பணம் சேர்த்தவர். இயேசுவைச் சந்தித்த பின் புது மனிதர் ஆனார். அதன் அடையாளமாகப் பணத்தையும், செல்வத்தையும் குவித்தவர், சுயநலத்தில் வாழ்ந்தவர், ஏழைகளை நினைத்துப் பார்த்து தம் சொத்தில் பாதியைப் பகிர்ந்து கொள்ள முன்வருகிறார். எவரையாவது ஏமாற்றி இருந்தால், நான்கு மடங்காகத் திருப்பிக் கொடுக்க முடிவு செய்கிறார். இச்செயலுக்குப் பின்பு இயேசு, "இன்று இந்த வீட்டிற்கு மீட்பு உண்டாயிற்று" என்றார்.

### நாமும் – மனமாற்றமும் :

மாற்றம் என்ற சொல்லைத் தவிர, மற்ற அனைத்தும் இவ்வுலகில் மாறிக்கொண்டேதான் இருக்கின்றன. மனிதனின் மனம் மாற்றத்தையும், புதுமையையும் விரும்புகிறது. மாற்றம் இல்லையென்றால் வளர்ச்சி இல்லை என்றே எண்ண வேண்டியுள்ளது. எங்கும் மாற்றம், எதிலும் மாற்றம் என்ற போக்கில் போய்க்கொண்டிருக்கும் உலகில், மனிதன் ஏனோ தனது ஆன்ம வாழ்வில் இறை மனித உறவுகளை மேன்மைப்படுத்தும் மாற்றங்களை வரவேற்கத் தயங்குகிறான். தன்னில் மாற்றங்களை அடைந்தவன் மட்டுமே மாற்றங்கள் உருவாக உதவுகிறான். நாம் மீட்படைய மனமாற்றம் அவசியம். ஆனால் மனமாற்றத்தை வாழ்வில் செயல் வடிவம் பெறச் செய்வது அதைவிட அவசியம். சக்கேயுவின் நிகழ்வு இதையே நமக்கு உணர்த்துகின்றது. இம்மனமாற்றம் இறையுறவிலும் - அயலாரோடு நாம் கொண்டுள்ள உறவுகளிலும் காண்பிக்கப்பட வேண்டும். நமது மனமாற்றத்தின் அடையாளமாக:

1. இறைவனுக்கும் அவரது மதிப்பீடுகளுக்கும் நமது வாழ்வில் முதலிடம் தருவோம்.
2. இறைவன் விருப்பத்தை அறிந்து முனைப்போடு செயல்படுத்துவோம்.
3. இறை வார்த்தையையும், நற்கருணையையும் மையப்படுத்திய வாழ்வு வாழ முயலுவோம்.
4. சமுதாயத்தில் நல்ல மாற்றங்களுக்குத் தோள் கொடுப்போம்.
5. நீதி, நேர்மை, மனித நேயம் ஆகியவை வளரப் பாடுபடுவோம்.
6. புதுமைகளைக் காலத்தின் மாற்றத்திற்கு ஏற்ப, சீர்தூக்கிப் பார்த்து, சிந்தித்து வரவேற்போம்.
7. நமது உறவும், உதவிகளும் மொழி, இனம், சாதி இவைகளைக் கடந்து செல்லட்டும்.
8. உடைந்த உறவுகளுக்கு உயிர்கொடுப்போம்.
9. சடங்குகளிலும், சம்பிரதாயங்களிலும் நமது நம்பிக்கையை அடக்கம் செய்யாமல் வழிபாட்டை வாழ்வாக்குவோம்.
10. நல்லதைச் சிந்திப்போம். நல்லதைச் செய்வோம். நல்லவற்றிற்குத் துணையாவோம்.

சக்கேயுவைப் போல நாமும் சுய ஆய்வை மேற்கொண்டு, நமது வாழ்வில் மாற்றம் தேவைப்படும் இடங்களை இனம் கண்டுகொள்ள வேண்டும். மேலும் மாற்றம் வேண்டும் என்ற தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும். அம்முடிவுகளைச் செயல்படுத்த முனைந்து இயங்க வேண்டும். இதுபோன்ற சவால்கள் இத்தவக்காலத்தில் நமது கவனத்திற்குப் பரிந்துரைக்கப்படுகின்றன. இச்சவால்களை இறை உதவியுடன் சந்தித்து சாதனையாக்குவோமானால், நமது பாதங்கள் இறைவன் நமக்கென வகுத்த பாதையில் பதியத் தொடங்கும். எனவே மனத்தில் மாற்றம் காண்போம். இறை மனித உறவில் ஏற்றம் பெறுவோம்.

நன்றி - தோழன்.

---

# போர்க்களம்

பழைய ஏற்பாடு என்னும் மங்கை புதிய ஏற்பாடு எனும் மணாளனை நோக்கி வருகின்றாள் மாலையோடு. ஏன்? மாலையிட. யாருக்கு மாலையிட? பெண்ணின் வழித்தோன்றலுக்கு. யார் அந்த வழித்தோன்றல்? பெண்ணிடம் பிறந்தவர் (கலா. 4:5)

எதற்காக? அலகையோடு போர் தொடுக்க. முடிவு? வெற்றி.

உலகம் ஒரு போர்க்களம். பாவம் புரிந்த ஆதிப்பெற்றோருக்கு அது ஒரு சோதனைக் களம். சிங்கார வனம் ஓர் சுந்தர வனம். அமைதி வனம். சொர்க்க வனம்!! (தொ.நூ 2,10-15) முதல் பெற்றோர் பாவம் செய்த பின்பே அது சோதனைக் களமாக, போர்க் களமாக மாறியது. (தொ. நூ 3:6-13) சாத்தான் பாம்பு உருவில் போர்க்கோலம் பூணுகிறான். போர்க்களம் புகுகின்றான். போர் தொடுக்கின்றான், சோதனை என்ற அம்பை விடுக்கின்றான். அம்பு துளைக்கின்றது. முதல் மனிதன் வீழ்ந்தான். பாவம் படர்கிறது. பயம் சூழ்கிறது, அன்பு அழிகிறது, இறைமை மறைகிறது. மரணம் தொடர்கிறது!!

மரணம் என்ற அம்பு துளைத்த மனிதம் எழமுடியுமா? அலகையை வெல்ல முடியுமா என்ன? இறைவன் கொடுத்த அன்புறவை இழந்தான், அருட்கொடைகளை இழந்தான். ஏன் சாகாமை என்ற அரிய ஆடைகளை இழந்தான். அவன் இனி எழுந்து போராட முடியுமா? போர்க்களத்தில் விழுந்து மடிய வேண்டிய அவனை கருணையுள்ளம் கொண்ட படைத்தலைவன் (இறைவன்) கைதூக்கி விட்டார். காயத்திற்கு கட்டுப்போட்டு புண்ணையாற்றிவிட பலம் தந்து தூக்கிவிட முன்வருகிறார். அன்பு வார்த்தை பகர்கிறான், மீட்புச் செய்தி தெரிவிக்கிறான். வெற்றி வாக்கு கொடுக்கிறான். வெற்றி இவர்களால் அல்ல, இவர்கள் வழித்தோன்றலால் - இப்போதல்ல காலம் பல கடந்தபின்...! ஆண்டுகள் பல சென்றபின்..! "*உனக்கும் பெண்ணுக்கும் உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவேன். அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்*" (தொ. நூல் :3:15) இதில் உன் வித்து – அலகையும் அதன் தீய சக்திகளையும், அவள் வித்து – புனித மரியாளும் அவர் கனியாகிய யேசுவையும் குறிப்பதாக மறை வல்லுநர்கள் கருதுகின்றார்கள்.

அதாவது அன்னை வழிவந்த மீட்பர் கிறீஸ்து சாத்தானையும் அதன் தூதர்களையும் அதன் கொடிய செயல்களையும் ஒழித்து விடுதலை அளிப்பார் என்பது பொருள். படைத்தலைவன் மகன் (யேசு) போர்க்களம் புகுந்தார் (மனித உருவில்). அலகையோடும் அதன் தீய சக்திகளோடும் போர்புரியப் புறப்பட்டார். "நீர் இறைமகன் என்றால் இந்தக் கற்கள் அப்பமாகும்படி கட்டளையிடும் (மத். 4:1) கீழே குதியும் .....என்னை வணங்கினால் ... இவையனைத்தையும் ... தருவேன். பாலை வனம் - அமைதியான இடம் - செபிக்கும் இடம் ஆனால் அலகைக்கு சோதனைக்களம் - போர்க்களம் ஆகிறது. இறைவார்த்தையை அம்பாகக் கொடுத்தான். பசாசு என்ற பகைவன். இறைவார்த்தையைக் கொண்டே பதில் அம்பு விடுத்தார் இறைமகன். அன்று ஏவாளைச் சோதித்தான், இன்று அதன் வித்தைச் சோதிக்கிறான். அங்கே கனியைக் காட்டினான், இங்கே கல்லைக் காட்டுகிறான். அங்கே *நீயே கடவுள்* என்றான். இங்கே *நானே கடவுள* என்கிறான். முடிவு - *அகன்று போ - சாத்தானே!*

போர்க்களம் நோக்கிச் செல்லும் வீரனுக்கு நெற்றியிலே பொட்டிட்டு, மாலை அணிவித்து, இரத்தத் திலகமிட்டு, முத்தமிட்டு வாழ்த்தி அனுப்புவாள் வீரமங்கை.

பலிக்களம் நோக்கிச் செல்லும் இறைமகனுக்குக் கழுதைமீது பட்டாடைகளைப் போட்டு அதன்மீது ஏற்றி வீதியில் ஆடைகளைப் பரப்பி ஒலிவக் கிளைகளை ஒடித்து கைகளால் அசைத்து *ஓசான்னா* என்று பாடல் இசைத்து வாழ்த்தி போர்க்களம் அனுப்புகின்றனர் வீரமக்கள். போர் தொடர்கிறது ... போரின் இறுதிக்கட்டம்... கல்வாரி மலை... இதுவே இறைமகனின் - பலிக்களம். இயேசு சிலுவை மரணத்தால், அதில் சிந்திய இரத்தத்தால் மனுக்குலத்திற்கு விடுதலை கொடுத்தார். விலை மதிப்பற்ற யேசுவின் இரத்தத்தால் அலகையின் ஆட்சியும் அதன் வித்துக்களின் மாட்சியும் தோல்வி காணுகின்றன.

அன்று ஒரு மரத்தால் வெற்றிகொண்டான். இன்று இன்னுமொரு மரத்தால் (சிலுவை மரத்தால்) தோல்வி காண்கிறான்.

தவக்காலம் ஓர் போர்க்களம். போராட்டத்தின் காலம். நமது மனித இயல்பு தீய இச்சைகள், சரீர நாட்டங்கள் அனைத்துக்கும் எதிராகப் போராட வேண்டிய காலம். தீயவற்றைக் களைந்து விட்டு ஆவியின் கனிகளை அணிந்துகொள்வோம். இறை மகனோடு சேர்ந்து போராடுவோம். வெற்றி பெறுவோம்.

*ச. வில்பிறெட் மறையாசிரியர்,*
*மாளிகைப்பிட்டி, அளவக்கை*

# கலை இலக்கியச் சாரரம்

## கவிதைக் களம்

### யுத்தம் இல்லாத பூமி



யுத்தத்தின் சத்தங்களை நிறுத்திய
சத்தமில்லாச் சங்கீதமே!
சறுக்கிய சலனத்தை சாந்தப்படுத்து
மனிதம் நிலைத்திடட்டும்.
இலட்சிய இதயமே
சாந்தியின் இலட்சணமே
இறக்கைகளை விரித்துவிடு.
இறுகிய இதயங்கள் இளகட்டும்
ஓலங்கள் ஒழிந்திடவே
ஓரமாகட்டும் வேட்டுக்கள்.
ஓங்கி ஒலிக்கட்டும்
ஒற்றுமையின் நாதங்கள்.
சாந்தியே சாதனை செய்
சாபங்கள் சாய்ந்திடட்டும்
சத்தியமே நீ சாகாதே.
சமாதானம் சாத்தியமாகட்டும்.
அமைதியின் சின்னமே
துப்பாக்கி நமக்கு சின்னமல்ல.
பீரங்கிகள் எமக்கு சொந்தமில்லை
பீதி நமக்கு பந்தமுமில்லை
மனிதக் கரங்கள் தொலைத்த மனிதம்
மண்ணில் மணக்கிறது.
இன்னும் குண்டு மழை வேண்டாம்.
இனி குளங்கள் நிறையப்
பொழியட்டும் மழை.
தூரத்து நட்சத்திரமல்ல நீ
நாம் உன்னைத் துரத்தி வர
அணையா தீபமே நிலைத்துவிடு
அழுத உள்ளங்கள் ஆறட்டும்
சாந்தியின் சாகரமே வற்றாதிரு
சமாதானம் பூக்கின்றது
மானிடமே சுவாசித்துவிடு
சாந்தியின் வாசம் வீசட்டும்.

வி. அலன்றோஜி,
இசைமாலைத்தாழ்வு, முருங்கன்.



### 'வெற்றி தருவது விவிலியமே..!

வாழ்வினில் வெற்றியைப் பெறுவதற்கு
வாசிக்க முயல்வோம் விவிலியத்தை
ஏழ்மையின் இறைவழி தொடர்வதற்கு
இன்றே விவிலியம் படித்திடுவோம்
தாழ்மையைப் போக்கிடும் விவிலியத்தைத்
தாங்கி நம் அகத்தில் ஒளி பெறுவோம்
சூழ்ந்திடும் இருளினைக் களைந்திடவே
சுடராம் விவிலியம் வழி தெரிவோம்
வாழ்வு தருகின்ற இறை வார்த்தை
வாழ்ந்திட அழைத்திடும் நல்வார்த்தை
ஆழ்ந்து இதனைப் படிப்போர்க்கு
அனைத்தும் தந்திடும் அருள் வார்த்தை
கற்றார் போற்றிடும் இறைவார்த்தை
களைகளைக் கழுவிடும் இறைவார்த்தை
சுற்றமும் மகிழ்ந்திடும் சுகவாழ்வு
சுவைத்திடச் செய்திடும் இறைவார்த்தை!

*வ. சுகுணராஜ்,*
*மடுமாதா சிறிய குருமடம், மன்னார்.*

### கடல் தாயே !

அம்மா கடல் தாயே! அழகே கடல் அம்மா
படகினில் ஏறி வரும் அண்ணாவைக் காப்பாற்று.
வலைகள் சுமந்தபடி மீன் அள்ள வருகின்றார்
நேவியின் கண் படாமல் நீ நின்று காப்பாற்று.
தாய் தந்தை யாருமில்லை தவிக்கிறேன் சின்னப் பிள்ளை!
எல்லாமே அண்ணாவென்று எண்ணியே வாழுகின்றேன்.
வட்ட நிலா வந்த நேரம் படகினிலே சென்றாரே!
பட்டுச் சட்டை தாரனென்று பக்குவமாய்ச் சொன்னாரே!
எனக்கு ஒன்றும் ஆசையில்லை அண்ணாதான் வர வேண்டும்!
ஆபத்துக்கள் இல்லாமல் காப்பாற்று கடல் தாயே!
குழைத்த பழஞ்சோற்றில் அன்பு ஊற்றித் தருவாரே!
கொள்ளைப் பாசமுடன் பள்ளி வரை வருவாரே!
நான் நன்றாய் வளர்ந்திடவே தன்னை வருத்திக்கொள்வாரே!
ஆபத்துக்கள் இல்லாமல் காப்பாற்று கடல் தாயே!

எஸ். எஸ். காஜனா, ஆலங்குளம்.

மன்னா

## சிறுகதை

# விடியாத இரவுகள்

ஜெனிதா அலெக்ஸ்சாண்டர்
அடம்பன்தாழ்வு, வட்டக்கண்டல்.



அன்று திங்கட்கிழமை, சூரியனைக் கண்டு, இருள் ஓடி மறைய, வழமை போன்று விடிந்தது. அனுலாவிற்கு மட்டும் அது விடியாத இரவாகவே இருந்தது. டினேஸ் தன் அருகில் இருந்து 'அனு' என்று தட்டி எழுப்புவது போன்ற நினைவோடு கண்களைத் திறந்தாள்.

அன்று இரவு அவள் கண்களில் பாய்ந்த கண்ணீர் அலைகளில் அவள் தலையணை நனைந்திருந்தது. அவள் நினைவுகள் ஒரு வருடம் முன்னோக்கி நகர்ந்தன. யாழ்ப்பாணம் கொடிகாமத்தை பிறப்பிடமாகக் கொண்டவள் அனுலா. பல சொத்துக்கு சொந்தக்காரி அவள். செல்வச் செழிப்புடன் வாழ்ந்து வந்தாள். எல்லாரையும் போன்று, அவளுக்கும் காதல் நோய் பிடித்தது. பள்ளிக்கூடம் சென்று அறிவை வளர்த்தவள், போகும் வழியில் கூடவே காதலையும் சேர்த்து வளர்த்துக்கொண்டாள். இருவரது காதலும், கொழுந்துவிட்டு வளரத் தொடங்கியது. அனுலா டினேசுடன் காதல் கொண்டது எப்படியோ, அனுலாவின் தந்தையின் காதில் விழுந்துவிட்டது. அவர் "தாம், தீம்" எனக் குதித்தார். "இது ஒருபோதும் நடக்காது, நடக்கவும் விடமாட்டேன்" என்று கத்தினார்.

டினேஸ் வீட்டிலும் இதே கதைதான். இது இவ்வாறு இருக்க, அனுலா தன் வீட்டாரை ஒருவாறு சமாதானப்படுத்தி, டினேசை தன் கணவராக கரம் பற்றினாள். திருமணம் முடிந்து, சில நாட்களின் பின்னர், டினேசின் சொந்த ஊராகிய முல்லைத்தீவிற்கு வந்தார்கள். சொத்துக்களை எல்லாம் உதறிவிட்டு, வந்த அனுலாவை தங்கத் தாம்பூலத்தில் வைத்துத் தாங்கினான் டினேஸ். அழகான வீடு கட்டி, களிப்புடனே குடும்பம் நடத்தினார்கள். இவர்களது இல்லற வாழ்விற்கு சான்றாக அனுலா மகனுக்குத் தாயாகவும் மாறிவிட்டாள். இருவர் மூவராகிய குடும்பத்தில் சந்தோஷத்திற்கு பஞ்சம் இல்லை.

அன்று நத்தார் பூசை முடிந்ததும், மறுதினம் ஞாயிற்றுக் கிழமை. "பூசைக்குப் போவோம்" என அனுலா டினேசை எழுப்பினாள். "நேற்றுத் தானே பூசைக்குப் போனோம்!" என்று டினேஸ் மறுக்க, "இல்லை இன்று கடைசி ஞாயிறு" என்று கூறி, தனது குழந்தையுடன் மூவருமாகக் கோயிலுக்குச் சென்று பூசை முடிய வீடு வந்தனர். அனுலா, "நாம மட்டும் கிறிஸ்மஸ் கொண்டாடினால் போதுமா? உங்க அப்பா அம்மா நம்ம வீட்டிற்கு வந்தால் நல்லா இருக்கும் அவங்களை போய் மதியம் வரச்சொல்லிவிட்டு வாங்க" என்று சொன்ன மனைவியின் வாக்குக்குக் கட்டுப்பட்டவனாக புறப்பட்டபோது, "நானும் வாறன்" என்ற தோரணையில் அழுத மகனைக் கையில் ஏந்தியவாறு, டினேஸ் தனது தாய் வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அனுலா தனது வேலையில் பரபரப்பாக இருந்தாள். அந்த வேளைதான், "கடல் .... அங்க ........ கடல் வருகுது ............... எல்லோரும் ஓடுங்க" என்ற சத்தம் கேட்டு, அனுலா வெளியே வந்து பார்த்தாள்.

எல்லோரும் நின்றது நிற்க, ஓடிக் கொண்டிருந்தார்கள். "ஊரோடு ஒத்து ஓடு" என்று, மக்கள் கூட்டம் ஓடிய திசையை நோக்கி, ஏதுமறியாமல் ஓடினாள் அனுலா.

தன்னையும் அறியாமல் தூரத்திலிருந்த கோயிலை வந்தடைந்த அனுலாவுக்கு அப்போதுதான் தன் கணவனைத் தேடும் எண்ணம் வந்தது. கோவிலில் எழுந்த அவலக் குரல்களையும் தாண்டி, அவள் காதுகள் தன் அன்புக் கணவன், பெற்றெடுத்த பாசமகன் போன்றவர்களின் குரலினைக் காணத் துடித்துக் கொண்டிருந்தன. உறவுகளை இழந்த மக்களின் சோக நிலைகளையும் தாண்டி அவளது கண்கள், தன் சொந்தங்களைத் தேடியது. அவள் தேடிய டினேஸ் அங்கே இல்லை. அந்த அகோரக் கடலலை, அனுலா யாருக்காக தனது சொந்தங்களை உதறிவிட்டாளோ, அந்த உள்ளங்களை விழுங்கியிருந்தது. அந்த கோவிலுக்குள் அனாதையைப் போன்று, தனி மரமாக நின்றாள் அனுலா.

தனது கணவனையும், குழந்தையையும் நினைத்து நினைத்து இதயமே வெடித்த நிலையில் நிலைகுலைந்து நின்றாள்.

அந்த அகோரப் பேரலை தனது வாழ்விலும் சித்திரம் கீறிவிட்டதே என்று கண்ணீர் சொரிந்தாள். "நான் மட்டும் ஏன் பிழைத்தேன்! என்னை மட்டும் ஏன் விட்டு வைத்தாய்?"

கடைசியாக, ஒரு தடவையாவது, எனது அன்புக் கணவரின் உயிரற்ற உடலையும், பிஞ்சுப் பாலகனின் பாசமிகு உடலையும் காட்டாமல், பறித்துக்கொண்ட கடலை விரக்தியாக வெறித்தாள். எத்தனையோ தெரிந்த, தெரியாத முகங்கள் ஆறுதல் சொல்லியும், அவள் மனது எதையும் உள்வாங்காமல் பிடிவாதமாக இருந்தது. அழுது, அழுது இன்னும் அவள் கண்களும் ஓயவில்லை.

அன்று மூன்று நிமிடம் அலையாக வந்த கடல், இன்று ஆமையாக உறங்குகின்றது. ஆனால் அவளது மனம் ......... இன்றோடு ஒரு வருடமாகியும், கண்ணீர் அலைகளாக சொரிந்து கொண்டேயிருக்கிறது. விடிந்தும் விடியாத இரவாகவே இருக்கின்றது.

## தொடர் கட்டுரை - அங்கம் 35



# கத்தோலிக்க கலை இலக்கிய பாரம்பரியங்கள்

- அருள்பணியாளர் விக்ரர் பிலேந்திரன் -

### பகுதி II தவக்கால பன்முக மரபுகள்

### இன்று சிலுவைப் பாதை

இன்று சிலுவைப்பாதை பக்தி முயற்சி தவக்காலங்களில் பரவலாக எல்லாப் பங்குகளிலும், சில பாடசாலைகளிலும் பொதுவாக வெள்ளிக் கிழமைகளில் இடம்பெற்று வருகின்றது. மக்கள் இப் பக்தி முயற்சியைப் பெருங்கூட்டமாகவும், சிறு குழுக்களாகவும், தனி நபர்களாகவும் தவக்காலங்களில் மேற்கொள்வர். சிலுவைப்பாதை பக்தி முயற்சியை மேற்கொள்வோரின் நலன்கருதி பெரும் எண்ணிக்கையிலான சிலுவைப்பாதைச் சிந்தனைக் கைநூல்களும், ஏனைய பிரசுரங்களும் வெளிவருகின்றன. மேலும், பல்வேறு நிலையிலுள்ள குழுக்களின் தேவைகளை பூர்த்திசெய்யும் வகையில், (அதாவது பெற்றோர், ஆசிரியர், மாணவர்கள், மறையாசிரியர்கள்) இச்சிலுவைப்பாதைக் கைநூல்கள் ஆக்கப்பட்டுள்ளன.


பொதுவாகத் தவக்காலங்களில் வெள்ளிக்கிழமைகளில் மாலையில் சிலுவைப்பாதைப் பக்தி முயற்சியும், அதனைத் தொடர்ந்து, திருப்பலி ஒப்புக்கொடுத்தலும் அநேக ஆலயங்களில் வழக்கிலுள்ள நடைமுறையாகும். சில பங்குகளில் தவக்காலங்களில் கிராமங்களில் உள்ள வீதிகள் வழியாகவும், சிலுவைப்பாதை பக்தி இடம்பெறுவது உண்டு.

பெரிய வெள்ளிக்கிழமைகளில் கடைப்பிடிக்கப்படுகின்ற பெரிய சிலுவைப்பாதை இங்கு குறிப்பில் இடம்பெறவேண்டிய மற்றுமொரு சிறப்பு நிகழ்வாகும். அநேக ஆலயங்களில், பெரிய வெள்ளிக்கிழமைகளில் காலையில் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கலந்துகொள்ளும் இப்பெரிய சிலுவைப்பாதையில் வழங்கப்படும் நிபந்தனைகள் பலருக்கும் பயனளிக்கும் ஒரு பக்தி முயற்சியாகும். இவ்வாறான பெரிய சிலுவைப்பாதை ஆலயத்தைச் சுற்றியே பொதுவாக இடம்பெறும். பெரிய வெள்ளிக்கிழமை சிலுவைப்பாதைப் பக்தி முயற்சியில் மக்களுக்கு அதிக ஆன்மீகப் புதுப்பித்தலுக்கான வாய்ப்பை இந்நாளுக்குரிய அக, புறச் சூழல்கள் வழங்குகின்றன. மேலும், பொதுவாகப் பல இடங்களிலும் தவக்காலங்களின் வெள்ளிக்கிழமைகளிலும், பெரிய வெள்ளிக்கிழமைகளிலும் சிலுவைப்பாதைச் சிந்தனைகள் மக்களால் வழங்கப்படுகின்றமை மற்றுமொரு சிறப்பான விடயமாகும்.


### பாடுகளின் நாடகங்கள் : தோற்றமும் - வளர்ச்சியும்

பாடுகளின் நாடகத்தின் தோற்றமும் வளர்ச்சியும் உயிர்ப்பு நாடகத்தை தோற்றுவாயாகக் கொண்டே அமைந்தது. இதுவும் ஆலயங்களில் நடத்தப்பெற்ற சடங்குகளின் அடியொற்றியே ஆரம்பித்தது. இதற்குப் பல எடுத்துக்காட்டுகளை முன்வைக்க முடியுமாயினும், யோவான் நற்செய்தியிலிருந்து பெரிய வெள்ளிக்கிழமைகளில் பாடப்படும் பாடுகளின் வரலாறு பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு பலராலும் பாடப்பட்டது தெளிவான சான்றாகும். பிற்பட்ட காலங்களில், பாடுகளின் நாடகம் முதலில் இலத்தீன் மொழியிலும், பின்னர் ஜேர்மன் மொழியிலும் மேடையேற்றப்பெற்றன. இவற்றின் விடயப் பொருளும், வடிவமும் மக்கள் மயப்படுத்தப்பட்ட அல்லது ஜனரஞ்சகப்படுத்தப்பட்ட சிந்தனை மரபிற்கு உட்பட்டதாகவே காணப்பட்டது.

இந்நிலை 15ம் நூற்றாண்டு வரையும் நீடித்தது. இக்காலத்திலேயே மக்கள் மயப்படுத்தப்பட்ட நாடகங்கள் வளர்ச்சி பெற்றன. 13ம் நூற்றாண்டில் வழக்கிலிருந்த பாடுகளின் காட்சிகள் இலத்தீன் மொழி வசன நடையில், சடங்குசார் பண்பினைக் கொண்டவையாக அமைக்கப்பட்டன. இவற்றில், பாடப்பட்ட பாடல்களும், நாடகங்களின் இசைப் பண்புடன் கலந்த சமயச் சார்பான விழுமியங்களை எடுத்துரைக்கும் நிகழ்வுகளாகவே அமைந்திருந்தன. மேலும், ஆலயப்பாடல்களின் மேலெழுந்தவாரியான மொழிபெயர்ப்பும், வழிபாடுகளுடன் தொடர்பற்ற கவிதைகளும், நிகழ்வுகளும் புகுத்தப்பட்டமை சமயச்சார்பான சடங்குகளிலிருந்து விலகி ஜனரஞ்சகமான போக்கை நாடுவதைக் குறிக்கின்றது. இவ்வாறு ஆரம்பித்த பாடுகளின் நாடகம் மிக வேகமாக, வளர்ச்சி பெற்று, 14ம் நூற்றாண்டளவில் தரமான நிலையை அடைந்தது. அதிக எண்ணிக்கையான ஒத்திகைகளை வைத்துக்கொண்டமையே இவ்வாறான தீவிர வளர்ச்சிக்குக் காரணம் எனக் கொள்ளலாம்.



## துளிப்பா



**வானவில்**
யாரது சேலைகளை
துவைத்து வானத்தில்
காயப் போட்டது!

**நான்**
ஓர் குருட்டுச் சிற்பி
செதுக்கி விட்ட ஓவியம்

**மனம்**
மல்லிகையே – உன்
வெள்ளை இதழிற்குள்
கறுப்பு வண்டு
ஒழிந்திருப்பது ஏன்!

**அம்மா**
விடிந்த பின்னும் என்னருகில்
விளக்கு எரிகின்றது
என்னவென்று பார்த்தேன்
அம்மா அமர்ந்திருந்தாள்

**நண்பன்**
விண்மீன் கேட்டால்
நிலவைத் தருவான்
நிலவைக் கேட்டால்
வானத்தைத் தந்துவிடுவான்.

**கோடை**
வீட்டு வேப்ப மரத்தில்
உட்கார்ந்து பாடும்
குயிலைக் காணவில்லை.

**பரீட்சை**
பெட்டிக்கடை போட்டுத்
தந்தார் அப்பா.
ஏன்? என்றேன்
நீ பெயில் என்றார்.

**ஏக்கம்**
வாழ்க்கையில்
விடை தெரியாத
சில வினாக்களின்
கேள்விக்குறி

**சொந்தம்**
நான் என்ற மரத்தில்
பணம் என்ற பழங்கள்
கனியும்போது
வந்தமரும் பறவைக் கூட்டம்

**உதவி**
தவிக்கும் ஒரு உள்ளமும்
இரங்கும் ஒரு உள்ளமும்
இணையும்போது ஏற்படும் உறவு

**வறுமை**
நான் படுத்திருந்து
வானம் பார்க்கிறேன்
மொட்டை மாடியில் அல்ல
முகடில்லாத வீட்டிற்குள்.

**முயற்சி**
தோளே இன்னும்
சிரம் தாங்கு
இதோ தெரிகிறது
உன் இலக்கு

**மடமை**
தூசி கூடியதால்
தும்மல் போட்டேன்
பாட்டி சொன்னாள்
தூரத்தில் யாரோ
நினைக்கிறார்களாம்

**நீர் வீழ்ச்சி**
நல்ல வேடிக்கை
பாறை முகடுகளில்
தண்ணீரைத் துவைத்து
காயப் போட்டிருக்கிறார்கள்.

*ஆக்கம் : மி. றஸ்மினி,*
*காத்தான்குளம்.*

# திருத்தந்தை 16ம் பெனடிக்ரின் 2006ம் ஆண்டிற்கான



# தவக்காலச் செய்தி



**“திரண்டிருந்த மக்களை இயேசு கண்டபோது, அவர்கள்மீது பரிவுகொண்டார்”**



அன்பான சகோதரர், சகோதரிகளே! இரக்கத்தின் ஊற்றாகிய இறைவனை நோக்கிச் செல்லும் உள்ளார்ந்த பயணத்திற்குத் தகுந்த காலம் தவக்காலமாகும். எமது ஏழ்மையாகிய பாலைவனத்தினூடாக இறைவன் எம்முடன் தொடர்ந்து வரும் ஒரு பயணமே இது.

நாம் உயிர்ப்பு விழாவின் மகிழ்ச்சியை நோக்கிச் செல்லும் எமது வழிப்பயணத்தில் அவர் எமக்கு ஊட்டமளிக்கிறார். “இருளின் பள்ளத்தாக்கில்” (தி.பா.23:4) என்று திருப்பா ஆசிரியர் கூறுவதுபோன்று, தீயவன் எமக்கு நம்பிக்கையின்மையை வருவிக்கும்பொழுது, அன்றேல் எமது சொந்தக் கரங்களினால் நாம் செய்யும் வேலைகளில் வீணான நம்பிக்கை வைக்க எம்மைத் தூண்டும்பொழுது, எம்மைப் பாதுகாக்க ஊட்டமளிக்கும் இறைவன் எம்முடன் இருக்கிறார்.

ஆம், இன்றும்கூட மகிழ்ச்சி, அமைதி, அன்பு போன்றவற்றிற்காக ஏங்கித் தவிக்கும் திரளான மக்களின் அழுகைக் குரலுக்கு இறைவன் செவிமடுக்கிறார். ஒவ்வொரு காலத்திலும், அவர்கள் கைநெகிழப்பட்டதாக உணர்கிறார்கள். அழிவுக்கான துன்பம், தனிமை, வன்செயல், பசி, பட்டினி போன்றவை எவ்வித பாகுபாடுமின்றி சிறுவர், வளர்ந்தோர், முதியோர் என்று அனைவரையும் வருத்துகின்றன. இருந்தும், இருள் வெற்றி கொள்வதற்கு இறைவன் ஒருபொழுதுமே அனுமதிப்பதில்லை. எனக்கு முன் பதவி வகித்தவரான அன்புக்குரிய திருத்தந்தை 2ம் யோண் பவுல் கூறியது : “தீமையின்மேல் சுமத்தப்பட்ட தெய்வீக எல்லை” ஒன்று உள்ளது. அதுதான் ‘இரக்கம்’. (நினைவும்; அடையாளமும். பக்.19) இந்த எண்ணங்களை மனதில் கொண்டு இந்த நற்செய்திப் பகுதியை எனது தவக்காலச் செய்தியாக தெரிந்தெடுத்தேன். *“திரண்டிருந்த மக்களை இயேசு கண்டபோது, அவர்கள்மேல் பரிவுகொண்டார்.” (மத்.9:36)*

நான் இவ்விடத்தில் தரித்து நின்று, இன்று அதிகம் விவாதத்திற்கு உள்ளாகியிருக்கும் ஒரு பிரச்சனையை இதன் ஒளியில் சிந்திக்க விரும்புகிறேன். அது *வளம்படுத்தல்* பற்றிய வினா. கிறிஸ்து தற்பொழுதுகூடத் தனது பரிவு நிறைந்த ‘பார்வை’யைத் தனிப்பட்டவர்கள்மீதும், மக்கள் அனைவரின்மீதும் தொடர்ந்து செலுத்திக் கொண்டேயிருக்கிறார். இறைவனின் தெய்வீக ‘திட்டம்’ அவர்களது மீட்புக்கான அழைப்பை உள்ளடக்கியுள்ளதை அறிந்த இயேசு, அவர்களை விழிப்புடன் காத்து வருகிறார். இந்தத் திட்டத்தை ஆபத்துக்குள்ளாக்கும் நிலைகளும் அவருக்குத் தெரிந்திருந்தமையால் அவர் அந்த மக்கள் கூட்டத்தின்மேல் பரிவுகொண்டார். ஓநாய்களிடமிருந்து அவர்களுக்குப் பாதுகாப்பளிப்பதற்காகத் தனது சொந்த உயிரையே விலையாகக் கொடுத்தலைத் தெரிவுசெய்தார். அவரது பார்வை தனிப்பட்டவர்களையும், திரளான மக்கள் கூட்டத்தினரையும் தழுவி நின்றது. அவர் தன்னையே பாவப் பரிகாரப் பலியாக ஒப்புக் கொடுத்து அவர்கள் அனைவரையும் தந்தையின் முன் கொண்டு வந்தார்.

இந்தப் பாஸ்கா உண்மையினால் தெளிவுபெற்று, நாம் வளம்படுத்தலை அதன் முழுமையை நோக்கி முன்னெடுத்துச் செல்ல வேண்டுமெனில், மனுக்குலத்தின் மட்டிலான எமது சொந்தப் ‘பார்வை’ கிறிஸ்துவின் அளவுகோல் கொண்டு அளக்கப்படல் வேண்டும் என்பது திருச்சபைக்குத் தெரியும். உண்மையிலேயே மக்களின் உலகியல், சமூகவியல் தேவைகளுக்கான பதிலை அவர்களது இதயத்தின் ஆழமான ஆவல்களின் நிறைவிலிருந்து வேறுபடுத்துவது முற்றிலும் இயலாத காரியம். விரைவாக மாற்றமடைந்து வரும் இன்றைய உலகில் ஏழைகள் மட்டிலான எமது கடமை என்றுமில்லாதவாறு, இன்று அதிகம் தெளிவாகவும், உடனடித் தேவையாகவும் தோன்றுகிறது என்பது அழுத்திக் கூறப்படுதல் வேண்டும்.

எனது வணக்கத்திற்குரிய முன்னைய திருத்தந்தை 6ம் பவுல் வளம்படுத்தலின்மை என்னும் இடறல் மனுக்குலத்திற்கு எதிரான ஒரு கொடுமையாயிருக்கிறது என்று திட்டவட்டமாகக் கூறியுள்ளார். இந்த வகையில் “தமது வாழ்க்கைக்கு அத்தியாவசியமான தேவைகளில் மிகக் குறைந்தளவைக்கூடப் பெற்றுக்கொள்ள முடியாதிருப்பவர்கள், சுயநலத்தினால் சிதைக்கப்பட்ட ஒழுக்கக் குறைபாடுடையவர்கள், சமூக அமைப்புக்களினால் அடக்கி ஒடுக்கப்படுபவர்கள், சொத்துரிமையினால் அன்றேல் சக்தியின் பலத்தால் துஷ்பிரயோகம் செய்யப்படுபவர்கள், வேலையாட்கள் சுரண்டப்படுதல் அன்றேல், அநீதியான செயற்பாடுகள் ஆகியவற்றை தனது “மக்கள் முன்னேற்றம்” (Populorum Progressio) என்னும் சுற்றுமடலின் மூலம் கண்டனம் செய்கிறார்.

இத்தகைய தீமைகளுக்கு மாற்று மருந்தாக மற்றவர்களுக்கு அதிகூடிய மாண்பை அளித்தல், ஏழ்மை மனநிலையை நோக்கித் திரும்புதல், பொது நன்மைக்காக ஒன்றிணைந்து உழைத்தல், அமைதிக்கான விருப்பும், ஆவலும் மட்டுமல்ல, மாறாக உயர் மட்டத்தில் உள்ளவர்களால் ஏற்றுக்கொள்ளப்படல், இறைவனே அவர்களது வாழ்வின் ஊற்றும், இறுதியுமாக இருக்கிறார் போன்றவை திருத்தந்தை 6ம் பவுல் அவர்களால் முன்வைக்கப்பட்டன.

இத்தகைய மனநிலையில் இறுதியாகவும், யாவற்றிற்கும் மேலாகவும் விசுவாசம் என்பது இறைவனால் அளிக்கப்பட்டு, நல்மனதுள்ள மனிதரால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு கொடை. கிறிஸ்துவின் அன்பில் ஐக்கியம் உண்டு என்பது பற்றியும், திருத்தந்தை தொடர்ந்து கூறினார். மக்கள் கூட்டத்தின் மட்டிலான இயேசுவின் ‘பார்வை’ இந்த ‘நிறைவான மனிதத்துவத்தின்’ உண்மையான திருப்தியை உறுதிசெய்ய எம்மை உந்தித் தள்ளுகிறது. “முழு மனிதனதும், சகல மனிதரதும் முழுமையான வளம்படுத்தல்” என்று திருத்தந்தை 6ம் பவுல் கூறியவற்றுள் இது அடக்கப்பட்டுள்ளது. இக்காரணங்களை முன்னிட்டு மானிட வர்க்கத்தினதும், மக்களினதும் வளம்படுத்தலுக்காகத் திருச்சபை அளிக்கும் ஆரம்ப பங்களிப்புகள் வெறும் உலக பொருட்களிலோ, அன்றேல் தொழில்நுட்ப தீர்வுகளிலோ அடங்கியிருக்கவில்லை. மாறாக இது மனச்சான்றைப் பயிற்றுவித்து, மனிதரதும், உழைப்பினதும் உண்மையான மாண்பை எமக்கு எடுத்துரைப்பவரான கிறிஸ்துவின் உண்மையை அறிவிப்பதில் ஈடுபாடு காட்டுகிறது. அதாவது மனுக்குலம் எழுப்பும் வினாக்கள் அனைத்திற்கும் உண்மையான விதத்தில் பதிலிறுக்கும் பண்பாட்டை வளர்த்தல் என்பதாகும்.

உலக மக்கள் தொகையில் அதிகமானவர்களைத் தாக்கும் ஏழ்மையின் பயங்கரமான சவால் மற்றும் அலட்சியப்படுத்துவதும், தன்னை மையப்படுத்துவதுமான தனிமை ஆகியவை இயேசுவின் “பார்வை”க்கு முற்றிலும் முரண்பாடான விதத்தில் அமைந்துள்ளன. தவக்காலத்திற்கென திருச்சபை முன்வைக்கும் செபத்துடன் கூடிய உபவாசம், தானதருமம் செய்தல் ஆகியவை நாம் இந்தப் “பார்வை”யுடன் ஒத்திருப்பதற்குப் பொருத்தமான வழிவகைகளாயுள்ளன.

புனிதர்களின் எடுத்துக்காட்டான வாழ்வு, திருச்சபையின் மறைபரப்புச் செயற்பாடுகளின் நீண்ட வரலாறு போன்றவை வளம்படுத்தலுக்கு ஆதரவு நல்கும் விலைமதிக்க முடியாத செயற்பாடுகளைப் பயனுள்ளவிதத்தில் வழங்குகின்றன. பூகோளமயமாக்கலில் தங்கிவாழும் இந்த யுகத்தில்கூட பொருளாதார, சமூக செயற்பாடுகள், அரசியல் திட்டங்கள் போன்றவை பிறர் அன்பை வெளிப்படுத்தும் வகையில் ஒருவர் தன்னை மற்றவருக்கு அளிக்கும் செயற்பாட்டைப் பிரதியீடு செய்யமுடியாது. நற்செய்தி வழிகாட்டல்களுக்கேற்ப செயற்படுபவர்கள், மனுவுருவெடுத்த இறைவனுடன் கொள்ளும் நட்புறவு போன்று விசுவாசத்தை வாழ்வதோடு, அவரைப் போன்று தங்கள் அயலாரின் உலக, ஆன்மீக சுமைகளைத் தாங்கிக்கொள்வார்களாக. அவர்கள் இதனை ஒரு மறைபொருளாகவும், அளவிடற்கரிய கரிசனைக்கும், அக்கறைக்கும் தகுதியான ஒன்றாகவும் காண்கிறார்கள். இறைவனுக்கு அளிக்காதவர்கள் மிகவும் குறைவானதையே அளிக்கிறார்கள் என்பது இவர்களுக்குத் தெரியும். ஆகவே கிறிஸ்துவின் பரிவு நிறைந்த திருமுகத்தில் இயேசுவைக்காண நாம் ஏனையவர்களுக்கு உதவிபுரிதல் வேண்டும். இத்தகைய அத்திவாரம் ஆட்டம் காணும்.

வளம்படுத்தலை நோக்காகக் கொண்டு பலதரப்பட்ட பிறரன்புப் பணிகள் திருச்சபையில் தலைதூக்கியுள்ளன. அவை வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்கள், தொழில் வழிகாட்டல் கல்லூரிகள், மற்றும் சிறிய அளவிலான வியாபாரம் போன்றவை. இவற்றை முன்னெடுத்துச் செல்லும் ஆண்களுக்கும், பெண்களுக்கும் எமது நன்றிகள். இத்தகைய ஆரம்பங்கள் நற்செய்தி அறிவுரைகளால் உந்தித்தள்ளப்பட்டு, உண்மைத்தன்மையான, பரிவுமிக்க அக்கறைக்கு உருக்கொடுக்கின்றன. இவை ஏனைய சமூகநல செயற்பாடுகளைவிட அதிகளவு முன்னனியில் திகழ்கின்றன.

இந்தப் பிறரன்புச் செயற்பாடுகள் மனித வர்க்கத்தின் உண்மையான நலனில் அக்கறைகொண்டு, தனது பார்வையைச் செலுத்தக்கூடியதும், அதன் மூலம் உண்மையான அமைதியை நோக்கிச் செல்லக்கூடியதுமான கோளமயமாக்கலை அடைவதற்கான வழிகளைக் காட்டுகின்றன. மக்கள் திரள்மேல் பரிவுகொண்ட இயேசுவைப்போன்று இன்று திருச்சபையானது ஆண், பெண் ஒவ்வொருவரதும் மாண்புக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக்கொண்டு, அரசியல் தலைவர்களிடமும், மற்றும் பொருளாதார வளம், நிதிவளம் போன்றவற்றை கொண்டிருப்பவர்களிடமும், வளம்படுத்தலை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமென்று கோருவது தனது கடமை என்பதைக் கவனத்தில் கொண்டுள்ளது. அவர்களது முயற்சிகளின் வெற்றிக்கு முக்கியமான பரீட்சைக்களமாய் அமைவது மதச் சுதந்திரம் ஆகும்.

இது கிறிஸ்துவை அறிவிப்பதற்கும், கொண்டாடுவதற்குமான சுதந்திரமென்று சாதாரணமாக விளங்கிக்கொள்வதல்ல, மாறாக பிறர் அன்பால் ஒளிமயமாக்கப்பட்ட ஒரு உலகைக் கட்டியெழுப்புவதற்கான சந்தர்ப்பமேயாகும். இந்த முயற்சிகள் மனிதனின் ஆழமான அக்கறைக்குப் பதிலிறுக்கும் உண்மையான மத விழுமியங்களின் பங்களிப்பை இனம்காணுதலையும், அத்துடன் அவனது தனிப்பட்ட, சமூக கடமைகளுக்கு நீதிநெறி சார்ந்த கருத்துக்களை வழங்குதலையும் சேர்த்துக்கொள்ளல் வேண்டும். கிறிஸ்தவர்கள் தங்கள் அரசியல் தலைவர்களுடைய அரசியல் திட்டங்களை மதிப்பீடு செய்யும் அளவுப்பிரமாணம் இதுவே.

இயேசுவின் சீடர்கள் என்று கூறிக்கொள்வோர் பல தவறுகளைப் புரிந்துள்ளனர் என்ற உண்மையை நாம் அசட்டை செய்துவிட முடியாது. அடிக்கடி பாரிய பிரச்சனைகளைப்பற்றி அவர்கள் எடுத்துக்கூற வேண்டியநிலை ஏற்படும்போது நாம் முதலில் இந்த உலகை முன்னேற்ற வேண்டுமென்றும், அதன் பின்னர்தான் ஏனையவைபற்றி சிந்திக்க வேண்டுமென்றும், அவர்கள் எண்ணுவதுண்டு. இதிலுள்ள சோதனை யாதெனில் அவசர தேவைகள் என்ற ரீதியில் முற்றிலும் அவசியமானது, வெளிப்படையான அமைப்புகளை மாற்றுவது என்று நம்பப்படுகிறது. இவை சிலவற்றின் விளைவு யாதெனில் கிறிஸ்தவம் ஒருவகை ஒழுக்கக் கோட்பாடாக கூறப்பெற ‘விசுவாசம்’ ‘செயலுடன்’ சேர்த்து முன்னிடத்தில் வைக்கப்பட்டது. ஆகவே எனக்கு முன் பதவிவகித்தவரான திருத்தந்தை 2ம் யோண் பவுல் அவர்களின் மடல்களிலிருந்து கவனிக்க வேண்டியது கிறிஸ்தவத்தை வெறும் மனித ஞானமாகிய நன்றாயிருத்தல் என்ற அளவுக்குக் குறைக்க வேண்டும் என்பதே இன்றைய சோதனை.

இன்றைய இலௌகீக உலகில் “ஒரு படிப்படியான மதச்சார்பற்ற மீட்பு” இடம்பெறுகிறது. அதனால் மக்கள் தம் நலனுக்காகப் போராடுகிறார்கள். ஆனால் ஒருங்கிணைந்த மீட்பைக் கொண்டுவரவே இயேசு வந்தார் என்பது எமக்குத் தெரியும். எம்மை வருத்தும் ஒவ்வொரு தீமையின் மேலும் கிறிஸ்து கொண்ட வெற்றியைத் தவக்காலம் எமக்குச் சுட்டிக்காட்டி இந்த ஒருங்கிணைந்த மீட்பை எம்முன் வைக்கிறது. தெய்வீக எசமானிடம் திரும்பிச் செல்லுதல் மூலமும், மனமாற்றம் அடைதல் மூலமும் ஒப்புரவு அருட்சாதனத்தின் ஊடாக அவரது இரக்கத்தை அனுபவிப்பதன் மூலமும், எமக்குள்ளே ஆழமாகச் சென்று, திரளான மக்கள் கூட்டத்திற்கும், எம் ஒவ்வொருவருக்கும் புதிய வாழ்வை அளிக்கும் “பார்வை”யைக் கண்டறிவோம்.

இது பணிய மறுப்பவர்களுக்கு நம்பிக்கையை மீண்டும் பெற்றுக்கொடுப்பதோடு, நித்திய பேறுகளையும் அவர்கள்முன் வைக்கிறது. வரலாறு முழுவதும் பகைமை வெல்லுவதுபோல் தோன்றியபோதும்கூட அவரது அன்பின் ஒளிமயமான சான்று ஒருபோதும் குறைவுபடவில்லை.

“எமது நம்பிக்கையின் ஊற்றாகிய” மரியாளிடம் எமது தவக்காலப் பயணத்தைக் கையளிப்போம். அப்பொழுது அவள் எம்மைத் தனது மகனிடம் அழைத்துச் செல்வாள்.

ஏழ்மையினால் வாடுபவர்களையும், உதவிக்காகவும், ஆதரவுக்காகவும் அழுகைக்குரல் எழுப்புபவர்களையும் அவள்முன் கொண்டுவருகிறேன். இந்த மனநிலையுடன் எனது விசேட அப்போஸ்தலிக்க ஆசீரை அளிக்கிறேன்.

*வத்திக்கான் 29. தை 2006.*



# சிறுவர் பொழிவு





## உயிர்ப் பிச்சை

### - சிறுவர் கதை -

2ம் உலகப் போர் நடந்த நேரம் ஜேர்மனியில் சிறைகள் நிறைந்து வழிந்தன. ஒரு குறிப்பிட்ட சிறை முகாமில் கூடுதலாக இருக்கும் கைதிகளில் சிலருக்கு மரண தண்டனை கொடுத்து, எண்ணிக்கையைக் குறைக்க முடிவானது. கைதிகள் எல்லோருக்கும் எண்கள் கொடுக்கப்பட்டன. தினமும் சில எண்கள் அழைக்கப்பட்டன. அந்த எண்ணுக்குரியவர்கள் மரண மேடைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அப்படியொரு நாள் ரிச்சேர்ட் என்ற ஒரு கைதியின் எண் அழைக்கப்பட்டது. அவன் சாக விரும்பவில்லை. எனவே நடுக்கத்துடன் ஒளிந்திருந்தான். அவனுக்குப் பக்கத்தில் கைதியாக வந்திருந்த ஓர் இளம் குருவானவர் இருந்தார். "உனக்கு சாக விருப்பமில்லையென்றால், நம் எண்களை மாற்றிக்கொள்வோம். உன் இடத்தில் நான் போகின்றேன்" என்றார். அதற்குச் சம்மதிப்பது ரிச்சேட்டுக்கு உறுத்தலாக இருந்தாலும் உயிர்மீது இருந்த ஆசை உடன்பட வைத்தது.

குருவானவர் மரணமேடைக்கு எந்தத் தயக்கமும் இல்லாமல் போனார். சுட்டுக்கொல்லப்பட்டார். அன்று இரவே அந்தப் பகுதியில், ஜேர்மனி போரில் தோற்றது. கைதிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.



ரிச்சேர்ட் அதற்குப்பின் பல வருடங்கள் உயிர் வாழ்ந்தான். அவனுடைய உயிர் இன்னொருவர் போட்ட பிச்சை என்ற எண்ணம் அவன் மனதை வாட்டியது. அந்தக் குருவானவர் அவனுடைய நண்பர் அல்ல. உறவினர் அல்ல. அவர் பெயர்கூட ரிச்சேட்டுக்குத் தெரியாது. எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், அடுத்தவருக்காகத் தன் உயிரையே விருப்பத்துடன் கொடுக்க அவரால் எப்படி முடிந்தது! அந்தக் குருவானவர் இறந்துவிட்டாலும், வாழ்க்கையை முழுமையாக வாழ்ந்துவிட்டார். தான் உயிருடன் பிழைத்திருந்தாலும், முழுமையாக வாழவில்லை என்று ரிச்சேர்ட் உள்ளுக்குள் உணர்ந்தான்.

*சிந்தனைக்கு : "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு வேறு இல்லை" என்ற நம் ஆண்டவராகிய இயேசுகிறீஸ்து தந்த உயிர்ப்பிச்சையே நாம் வாழும் இந்த வாழ்க்கை. நாம் பாவிகளாயிருக்கையில், கிறீஸ்து நமக்காக இறந்ததாலே கடவுள் நம்மேல் வைத்த தமது அன்பை எண்பித்தார்.*

*(உரோமர் 5:8)* ***- சி.சுஜீவன், சுண்டிக்குளி, முருங்கன்.***

## சிறுவர் தொடர் கதை

### புனித பதுவை அந்தோனியார்

அங்கம்-16

61. ஆனால் பதுவை மாநிலத்தில் எப்போதும், அமைதியிருக்காது. இரு கட்சிகள் அடிக்கடி சண்டையிட்டு, அதில் பலர் மடிந்தனர். இப்படிப்பட்ட ஒரு கட்சியின் தலைவன், ட்ரவீசாவின் அதிபரான எஸ்ஸலீனோ. அவன் மிகவும் கொடியவன்.

62. அவன் ஒரு கொள்ளைக்காரனும், கொலைகாரனும்கூட. ஒரு தடவை அந்தோனியாரின் உற்ற நண்பராகிய டீசோ அரசனின் பேரனாகிய இளவரசன் போனிபாசை பட்டப்பகலில் கைப்பற்றினான். இதைக் கேள்வியுற்ற அந்தோனியார் நேராக எஸ்ஸலீனோ முன் சென்றார்.

63. அவனுடைய கொடுமைகளையும், குற்றங்களையும் வன்மையாகக் கண்டித்தார். சிறைப்பிடிக்கப்பட்டவர்களைக் கொல்ல வேண்டாமென்றும், அமைதியான வாழ்க்கையைக் கடைப் பிடிக்கவும் அவனுக்குப் போதித்தார். எஸ்ஸலீனோ கடுங்கோபம் கொண்டான்.



பத்துமுறை அந்தோனியாரைக் கொல்லும்பொருட்டுத் தன் வாளை எடுத்தவன், அவருடைய தைரியத்தைக் கண்டு, அதிர்ச்சியடைந்தவனாய், பத்துமுறையும் தன் வாளை உறையில் போட வேண்டியதாயிற்று.

64. இதற்கிடையில் மக்கள் அந்தோனியாருக்காகச் செபித்தனர். ஏனெனில் எஸ்ஸலீனோ அவரைக் கொல்வது உறுதி என்று பயந்தனர். உண்மைதான். எஸ்ஸலீனோ, அந்தோனியார் கேட்டவைகளில் ஒன்றையும் கொடுக்காவிட்டாலும், அவரை உயிரோடு வெளியே போக அனுமதித்தான். அவர் வெளியே வந்தவுடன் மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்தார்கள். ஆனால் இவ்வளவாவது எஸ்ஸலீனோவைத் திருத்த முடிந்ததே என்று அந்தோனியார் கண்ணீர்விட்டு அழுதார்.







## கவிதைப் பூக்கள்

### புகழ்ந்திடுவீர் புண்ணியனை

விடிகாலைப் பொழுதினிலே விசிலடித்து விளையாடும்
வானத்துப் பறவைகள் உன் பெருமைதனைப் பாடிடுதே!

காலையிலே நான் எழுந்து காலைக்கடன் முடிக்க முன்னே
கண்ணா உன் படைப்பினங்கள் கவியெல்லாம் பாடிடுதே.
நாலு மணி ஆனவுடன் நானெழும்பி நரம்பிசைக்க
நக்கலுடன் நகைக்கிறதே நாதா உன் பறவையினம்!

ஸரிகம பதநி என சங்கீதம் பலவெழுப்பி
சிந்திக்க வைத்திடுதே உன் சுந்தரக் குயிலினங்கள்.
பறவையினம் புகட்டிடுதே பலவகைப் பாடங்களை
பிறகும் ஏன் இத்தயக்கம் புகழ்ந்திடுவீர் புண்ணியனை!

***யே. ஜீவறாஜ், புனித கிளாரட் குருமடம், நீர்கொழும்பு***

### கல்விச் செல்வம்



துள்ளித் திரியும் பருவம் இது
தூய்மையாய்க் கல்வியைக் கற்றிடுவோம்.
பள்ளிக்கூடம் சென்று நாம்
பண்பாய் பயின்று உயர்ந்திடுவோம்.

கல்வியை நாளும் கற்று களிப்புடன் வாழ்வில் உயர்ந்திடுவோம்.
கற்றல் எங்கள் கடமையே கடமை மறத்தல் மடமையே
முற்றி வளர முன்னமே முயன்று கற்றுக் கொள்வோம் நாம்.

***கி. ஐதுஷா, குமானாயங்குளம், ஆட்காட்டிவெளி.***

### அன்பியத்தின் அருள் உறவு



மன்னார் மறை வட்டம் - அது
மாபெரும் இறைத் திட்டம்
அன்பியத்தின் அருட் திட்டம்
ஆர்வமுடன் ஊற்றெடுக்கும்.
விவிலியத்தின் விழிப்புணர்வில்
அர்த்தமுடன் நடந்திடுவோம்.
அன்பியத்தின் அருள் உறவை
அயலவர் மத்தியில் வாழ்ந்திடுவோம்.
வீட்டினிலும் றோட்டினிலும்
வடிவாக நடக்கிறது அன்பியமே!

**வே. சியாமளா, வாழ்க்கைப்பெற்றான்கண்டல்.**

### எழுந்து வா!



வாழ்க்கை என்பது யாருக்கு? – அது
வாழத் தெரிந்த மனிதருக்கு!
நேற்று நடந்தது நமக்கெதற்கு?
இன்று நடப்பதை உவகையாக்கு.
காலையில் மலரும் பூக்களுக்கு
மாலையில் மடியும் விதியிருக்கு.
இந்த உண்மை தெரிந்தும் அதற்கு
இன்பமாய் வாழும் துணிவிருக்கு!
வாழ்க்கை என்னும் படியிருக்கு
வளமாய் ஏறு உயர்விருக்கு
இந்த உண்மை புரிந்தும் உனக்கு
இன்னுமா சோர்விருக்கு?
வல்லமை இன்னும் உனக்கிருக்கு
வல்லவன் துணையும் உனக்கிருக்கு
வறுமையை நாளை ஒளிப்பதற்கு
எழுந்து வா மனிதா எழுந்து வா!

***கி. தசனிக்கா, தரம் 08, குருவில், வட்டக்கண்டல்.***

### சிறுவர்களை வேலைக்கு அமர்த்தாதே!

சின்னஞ்சிறு வயதில் சிறுவர்களுக்கோ சித்திரவதை
சின்ன சின்னக் கதை பேசி சித்திரமாய் நடை நடந்து
பள்ளிப் படிப்பதனில் பெறும் பரிசோ ஆஹா எத்தனை
அத்தனையும் மறந்து அரைப்படிப்பு போதுமென
மூட்டை சுமக்கின்றார்கள் தம் முதுகெலும்பு நோக.
கிட்டி அடித்துத் தினம் கிளித்தட்டு விளையாடிய
வெட்டவெளி எல்லாம் இன்று வெறிச்சோடிக்கிடக்க
நம் சின்னஞ் சிறார்களோ சேர்வதுதான் வேலைக்கு
வாழ்க்கை என்னும் பாதையில் வந்துவிட்ட வறுமையால்
வதையுண்டு தவிக்கின்றார்கள் உலகமே ஒரு கணம் பார்.
கோடி பணம் சேர்க்க எவனோ நாடி வரும் சிறார்களை
வேடிக்கையாய் வேலைக்கு அமர்த்துவதால்
நாளைய உலகின் தலைவர்கள் நசுக்கப்படுகின்றார்கள்!
ஆதலால் இன்றே வறுமையை ஒழித்திட வழிவகுத்திடுவோம்.
சிறுவரை வேலைக்கு அமர்த்தும் சிறுமையை நீக்கி
கல்வியில் அவர் உயர கலங்கரையாய் இருந்துவிடுவோம்.

***செ. மரிய நாயகி (சுகந்தினி), நறுவிலிக்குளம், திருகுபுரி, வங்காலை.***

## கொஞ்சமாச் சிரிங்க...!

**முதலாளி :** தம்பி, வேலைக்கு வாறியா சம்பளம் தாறேன்.
**வேலைக்காரன் :** ச்சீ .... ச்சீ ........ நான் சம்பளம் என்றால் வரமாட்டேன். காசு தந்தால்தான் வருவேன்.

***S. மெல்வின், ஆலங்குளம், வட்டக்கண்டல்***

**தம்பதிகள்:** ஐயா! எங்களை ஆசீர்வதியுங்கள்.
**பெரியவர்:** பதினாறும் பெற்று, பத்தை விற்று, ஐந்தை கார்ப்பரேசன் குழாயில் போட்டுவிட்டு, ஒன்றை மட்டும் வைச்சுக்குங்க .........
**தம்பதிகள்:** எல்லாத்தையும் போட்ட பிறகு, ஒன்று மட்டும் எதுக்கு?
**பெரியவர்:** உங்களை முதியோர் இல்லத்தில் சேர்க்கத்தான்.

**S. பிரவீன், ஆலங்குளம், வட்டக்கண்டல்.**

**தாய் :** உங்க கடையில வேலை செய்யிற பையனால என் மகள் முழுகாம இருக்கிறா... கூப்பிடு அவனை.
**கடைக்காரர்:** உண்மையாகவா? அவன் நல்ல பையனாச்சே! அப்படியெல்லாம் தப்பு செய்யமாட்டானே!
**தாய்:** பெரிசா ஒண்ணுமில்லையா! ஷம்போ ஒன்று கடனாகக் கேட்டாள் கொடுக்கமாட்டேன்னு சொல்லியிருக்கான்.

**S.S. காஜனா, ஆலங்குளம்.**



நோயாளி : "எதுக்கு டொக்டர் ஒப்ரேஷன் பண்ணும்போது என்கிட்ட ஒரு கத்தியைக் கொடுக்கிறீங்க!"
டொக்டர் : "நான் நிராயுதபாணியா யாரையும் கொல்ல மாட்டேன் .........."

"உங்க சம்சாரத்துக்கு நீங்க மரியாதை தருற மாதிரி அவங்க உங்களுக்குத் தருவாங்களா?
"ம்...ம்.... 'அவ.. மரியாதை' தருவா?"





"விளையாட்டைப்பத்தி தெரியாத நம்ம தலைவருக்கு விளையாட்டுத் துறை அமைச்சர் பதவி கொடுத்தது தப்பாப் போச்சு ...." "என்னாச்சு ........."
"சீட்டு விளையாட்டை ஊக்குவிப்பதே என் முதல் இலட்சியம் என்று அறிக்கைவிட்டிருக்கார் .....!"

---

"ஒலிம்பிக் ஜோதியை தூக்கிக் கொண்டு ஓடி வந்தவங்களை நீ வழி மறிச்சியாமே .... நிஜமா?"
"அட நீங்க வேற ..... பீடிக்கு நெருப்பு கேட்கலாம் என்றுதான் போனேன் .......... தப்பா நினைச்சு பிடிச்சுக்கொண்டு வந்துட்டாங்க சேர் .."

---




"உன் புருஷன் நோய்வாய்ப்பட்டுக் கிடக்கிறாராமே.... .!"
"பப்பி கடிச்சிடுச்சு ......... நாய்வாய்ப்பட்டுக் கிடக்கிறாரு!"

---

"மகளீர் விழாவில நம்ம தலைவர் பேசின பேச்சு, பெரிய சலசலப்பையே ஏற்படுத்திச்சு.....!" "எப்படி ........?"
"நாட்டில் பல ஆண்கள் தங்கள் மனைவியை ஒரு வேலைக்காரியாக பாவிக்கிறார்கள். நான் வேலைக்காரியையே மனைவியாக பாவிக்கிறேன்" என்று பேசிட்டார் ..........!

---



ஆவி 1: அவன் ஏன் வருத்தமா இருக்கான்?
ஆவி 2: "இந்தத் தடவை வாக்காளர் பட்டியலில் அவன் பெயர் இல்லையாம் அதுதான்."


---



நீங்கள் தந்த ஓடியோ கசட்டில ஒலியே இல்லையே?
அது மௌன சாமியாரின் உபதேசம் ஆச்சே!



ஒரு பெண்: பாட்டி எதுக்கு உங்கட பேத்தி சங்கீத வகுப்புக்கு கலர் பெட்டி. கலர் பென்சில் எல்லாம் கொண்டு போறா?
பாட்டி: இப்ப வர்ணம் சொல்லிக் குடுக்கினமாம்.



# தவக்காலத்தில் திருச்சபை தரும் வாசகங்கள் - ஓர் பார்வை



"தவக்காலத்தின் விசேட இரு செயற்பாடுகளான திருமுழுக்கு அழைப்பை நினைவுக்குக் கொண்டுவருதல் - அதற்கு ஆயத்தம் செய்தல் மற்றும் தவம் ஆகிய இரண்டும் திருவழிபாட்டிலும், திருவழிபாட்டு மறையுரைகளிலும் அதிகம் அழுத்தம் பெறவேண்டியவையாகும். திருச்சபைத் தாயானவள் இவற்றின் வழியாகவே இறைமக்களை உயிர்ப்பு விழாவுக்கு ஆயத்தம் செய்கின்றாள். அடிக்கடி இறைவார்த்தையைக் கேட்பதன் மூலமும், அதிக நேரத்தைச் செபத்திற்கு அர்ப்பணிப்பதன் மூலமும் அவர்கள் இதற்கு ஆயத்தம் செய்கின்றார்கள்." (SC 109) இதனால் திருவழிபாட்டுக் கொள்கைகளிலும், திருச்சபையின் தவக்கால அனுசரிப்பிலும், மறையுரைகளிலும் புதுப்பித்தல் தேவையென்று 2ம் வத்திக்கான் சங்கம் அழுத்திக் கூறியுள்ளது.

சமுதாயம் முழுவதன் நலனுக்காக வழமையாக வாசிக்கப்படும் தொடர் வாசகப் பகுதிகள் திருமுழுக்கு ஆயத்த நிலையினருக்கு நன்மை பயக்கும் வகையில் மீள் அறிமுகம் செய்யப்படல் வேண்டும். இதன்மூலம் திருமுழுக்குப்பெறும் நம்பிக்கையுடன் இருக்கும் திருமுழுக்கு ஆயத்தகாரருக்கு, திருமுழுக்குப்பற்றி அழுத்தம் கொடுப்பதில் தவக்கால வாசகங்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மற்றும் பல்வேறுபட்ட கிறிஸ்தவ முன்னெடுப்புகளுக்கும் அவை அழுத்தம் கொடுக்கின்றன. ஏற்கனவே திருமுழுக்குப் பெற்றவர்கள் தமது சொந்தத் திருமுழுக்கையும், அதனால் ஏற்படும் பொறுப்புக்களையும், நினைவுக்குக் கொண்டுவருவதோடு அவர்கள் தவமுயற்சிகளிலும் ஈடுபடவேண்டும். ஆகவே விவிலியப் பகுதிகளைத் தெரிவு செய்யும்போது அவை "முதன்மைக் கருத்தின் அடிப்படையால்" (Thematic Principle) வழிநடத்தப்படல் வேண்டும்.

## தவக்கால ஞாயிறு தினங்கள்

இது தவக்காலத்தின் ஐக்கியத்தையும், ஒத்த தன்மையையும் எடுத்துக்காட்டுகின்றது. ஆனால் இறைவார்த்தை ஆண்டு காலச்சக்கரத்திற்கு ஏற்ற இந்தத் தொடர்களிலுள்ள வேறுபாடுகளுக்கேற்ப அவற்றை கையாளுவதன் மூலம் உண்மையிலேயே ஒவ்வொரு ஆண்டுக் காலச்சக்கரத்தின் தரத்தையும் முன்வைக்கின்றது. ஆண்டு A மத்தேயு, ஆண்டு B மாற்கு, ஆண்டு C லூக்கா, யோவான் நற்செய்தி சக்திமிக்க ஊற்றாக இருக்கின்றது. திருச்சபைத் தாயானவள் உயிர்ப்பு ஞாயிறு தினத்தின் ஆழமான அர்த்தத்துள் இட்டுச்செல்லும் ஒரு உட்பார்வைக்காக யோவான் நற்செய்தியின் பக்கமாகத் திரும்புகின்றாள்.

ஆண்டு A தவக்கால 3ம், 4ம், 5ம் ஞாயிறுகளின் நற்செய்தி வாசகங்கள் திட்டமாகப் பாரம்பரிய முறைகளிலேயே அமைந்துள்ளன. மூன்று பெரும் திருமுழுக்குப் பகுதிகளான சமாரியப்பெண், பிறவியிலேயே பார்வையற்றவர், இலாசர் உயிர்பெற்றெழுதல் ஆகியவை திருமுழுக்குப் பெறுவதற்குத் தம்மை ஆயத்தம் செய்யும் திருமுழுக்கு ஆயத்தகாரர் அங்கு இருப்பார்களேயானால் ஆண்டுக் காலச்சக்கரங்களின்படி இந்த வாசகங்கள் கட்டாயமாக வாசிக்கப்படல் வேண்டும்.



இவ்வருடம் நாம் ஆண்டு Bயில் இருப்பதால் ஆண்டு Bயைக் குறிக்கும் வாசகங்களில் எமது கவனத்தைத் திருப்புவோம். முதல் இரண்டு ஞாயிறு வாரங்களுக்குமான பாரம்பரிய தொடர்கள் பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆனால் மாற்குவின் வர்ணனையைக் கையாண்டு, ஆண்டின் தரம் பேணப்பட்டுள்ளது. (1:12-15+9:2-10) இவ் ஆண்டின் 3ம், 4ம், 5ம் ஞாயிறுகளுக்கு நாம் யோவானின் பக்கம் திரும்பியுள்ளோம். அந்தப் பந்திகள் சிலுவை வழியாகவும், உயிர்ப்பு வழியாகவும் இயேசுவின் வருங்கால மகிமை என்பதைப் பற்றி பேசுகின்றன.

**ஆகவே ஒழுங்குக்கிரமமாக தவக்கால வாசகங்களை இவ்வாறு நோக்கலாம்:**

**தவக்கால ஞாயிறு 3** : யோவான் 2:13-25 - ஆலயத்தைத் துப்பரவு செய்தலும் புதிய ஆலயத்தைப் பற்றிய அறிவிப்பும்.

**தவக்கால ஞாயிறு 4** : யோவான் 3:14-21 - மனுமகன் "மேலே உயர்த்தப்படுதல்" என்பதனை விசேடமாகக் குறிப்பிட்டு நிக்கோதேமுவுடன் உரையாடல்.

**தவக்கால ஞாயிறு 5** : யோவான் 12: 20 - 33 - கோதுமை மணி பலன் கொடுக்க வேண்டுமானால் அது மடிய வேண்டும் என்பதைப் பற்றி விசேடமாகக் கூறுதல்.

திருச்சபையின் தவக்கால மறையுரைகளின் மேலான உந்து சக்தியாயிருக்கும் தவக்கால ஞாயிறு தின முதல் வாசகம் "மீட்பின் வரலாற்று" மையத்திற்கு எம்மை இட்டுச்செல்கின்றது. வருடந்தோறும் அவர்கள் ஆரம்பத்திலிருந்து புதிய உடன்படிக்கையின் வாக்குறுதிவரை அந்த "வரலாற்றின்" முக்கியமான படிகளைக் கோடிட்டுக் காட்டியுள்ளனர்.

**ஆண்டு Bயில் ஒழுங்குக்கிரமம்:**

**தவக்கால ஞாயிறு 1:** தொடக்க நூல் 9:8 – 18 வெள்ளப் பெருக்கின்பின் இறைவனுக்கும், நோவாவுக்கும் இடையிலான உடன்படிக்கை.

**தவக்கால ஞாயிறு 2:** தொடக்க நூல் 22: 1-2, 9 – 13, 15 – 18 ஆபிரகாமின் விசுவாசம், தனது அன்பான மகனைப் பலியிடக்கூட ஆயத்தமாயிருத்தல்.

**தவக்கால ஞாயிறு 3** - விடுதலைப் பயணம் 20:1 – 17 பத்துக்கற்பனை - இறைவனுக்கும் இஸ்ராயேலருக்கும் இடையிலான உடன்படிக்கையின் முத்திரை.

**தவக்கால ஞாயிறு 4** - 2 கொரிந்தியர் 36:14 – 16, 19 – 23 இறைவனின் மக்கள் பிரமாணிக்கம் தவறியபோதும் இறைவன் தனது உடன்படிக்கைக்குப் பிரமாணிக்கமாயிருக்கிறார்.

**தவக்கால ஞாயிறு 5** – எரே. 31:31 -34 – புதிய உடன்படிக்கையின் வருகைபற்றிய வாக்குறுதி.

தவக்கால ஞாயிறுகளில் 2வது வாசகங்கள் முதன்மைக் கருத்தின் அடிப்படைகளில் இருந்து (Thematic Principle) தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. அவை நற்செய்தி வாசகம், 1ம் வாசகம் ஆகிய இரண்டு வாசகங்களுடனும் ஒத்துப்போகக்கூடியதாக எபிரேய வேதாகமத்திலிருந்து (பழைய ஏற்பாடு) தெரிந்தெடுக்கப்பட்டுள்ளன. இவ்வருடம் அவை 1பேதுரு, உரோமையர், 1கொரிந்தியர், எபேசியர் மற்றும் எபிரேயர் ஆகியவற்றிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. அவை முதன்மைக் கருத்தின் அடிப்படையில் தெரியப்பட்டாலும், கொடுக்கப்பட்ட எந்த ஒரு ஞாயிறு தினத்தினதும் வார்த்தையின் கொண்டாட்டம் முழுவதினதும் நிலைப்பாட்டைக் குறிப்பிட்டுக் காட்டுகின்றன.

## தவக்கால வாரநாட்கள்

தவக்கால வாரநாட்களின் வாசகங்கள், இந்தக் குறிப்பிடப்பட்ட காலம் முழுவதினதும் பிரதான கருப்பொருளான திருமுழுக்கினதும், தபக்கிரிகைகளினதும் நாளாந்த விசேட குணவியல்புகளிலிருந்து விடுவிக்கின்றன. இந்த வாசகங்கள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகக்கூடியதாகவுள்ளன. அதன்மூலம் பல்வேறுபட்ட கருப்பொருள்கள் முழுமையாகவும், தெளிவாகவும் வெளிப்படுத்தப்படுகின்றன. ஆயினும் 4ம் வாரம் திங்கட்கிழமையிலிருந்து ஞாயிறு தினங்களின் திருமுழுக்கு மறையுரைகளைப் பலப்படுத்துவதற்காக யோவான் நற்செய்தி வாசிக்கப்படுகின்றது.

## முடிவுரை

தவக்கால வேதாகம வாசக ஒழுங்குமுறைகளுக்கான காரணங்களையே நாம் இங்கு காண்கிறோம். நாம் அதிகமான நேரத்தைச் செபத்துடன்கூடிய வார்த்தையுடன் செலவிட வேண்டும். பாஸ்கா மறைபொருள் பற்றிய உண்மைகள் அதிகளவு விசுவாசத்தில் வெளிப்படுத்தப்படும். இதனால் வார்த்தைகளுடன்கூடிய செபத்தில் எமது சிந்தனைகள் எமது காலத்துக்குரிய இறைவாக்குரைக்கும் குரலாக மாற்றம் பெறும். பண்பாட்டு மயமாக்கல், அமைப்பு மயமாக்கல் ஆகியவற்றிற்கான ஒரேவழி இதுவே.

## பொன்விழா வாழ்த்து



**திரு. திருமதி. அந்தோனிப்பிள்ளை மாகிரெட் தம்பதியினர் - மாந்தை**



**07.04.2006**



இல்லறச் சோலையிலே இனிதாய் ஐம்பது ஆண்டுகளை இறைமகன் இயேசுவின் இனிய ஆசீருடன் இன்பமாய் வாழ்ந்திட்ட எம் அன்பு பெற்றோருக்கு! உம் பணிதனை நாமும் தொடர எமக்கு நித்தம் வழிகாட்டி கலங்கரை விளக்காய் திகழ்ந்தீரே! இவ் இனிய நந்நாளில், லூர்து அன்னையின் ஆசீர் தொடர்ந்து கிடைக்கவும், இனிவரும் நாட்களிலும் உடல், உள நலம்பெற்று வாழ இறைபரன் இயேசுவின் அருள்வரம் வேண்டி வாழ்த்தி நிற்கின்றோம்.

*அன்புப்பிள்ளைகள்: லூட்ஸ்மேரி, பூவதி, வதி, ரதி, லோறன்ஸ், மருமக்கள்: மனுவல், அமலதாசன், அன்ரன் ஜெயராஜா, அலோசி, யூட்ஸ். பேரப்பிள்ளைகள்: பவீந்திரன், வோக்சன், இவோண், சிரோமி, தரோணிஸ்ரா, ஜொய்ஸ்ரன், டினேஷ், சியாந்தனா, தீபிகா, நிவேத்திகா, லயூறினா, நிவேதனன், இவாஞ்சலின், டுவுராண், மரிகா.*

*தகவல்: மகள்.*

## அன்பை மையப்படுத்தி .....

3ம் பக்கத் தொடர்ச்சி

ஆதியிலே உலகு அழகாகவும் இருந்தது. அத்துடன் அவலட்சணமாகவும் இருந்தது. இந்த உலகின் அழகையும் அவலட்சணத்தையும் ஆக்கவும் அழிக்கவும் இறைவன் மனிதனுக்கு வல்லமையைக் கொடுத்தார்.

அன்பை மையப்படுத்தி வாழ்கிறவன் மனிதன். இறைவன் தனது அளவு கடந்த அன்பைத் தனது ஒரே பேறான மகனை இவ்வுலகில் மனுவுரு எடுக்க வைத்ததன் மூலமும், அந்த ஒரே மகனை சாவுக்குக் கையளித்ததன் மூலமும் வெளிப்படுத்தினார். எனவே ஆசிரிய சமூகமாகிய நாமும் அன்பின் சாட்சிகளாக வாழ அழைக்கப்பட்டுள்ளோம். வன்செயல் நிறைந்த இவ்வுலகில் சமகால நிகழ்வுகளுக்கு முகம் கொடுத்து வாழ இந்த அன்புக்கொடை கட்டாயம் வாழப்பட வேண்டிய தேவை இன்று உள்ளது. ஆசிரியத்துவமும் இதையே நாடி நிற்கிறது. இதை நாம் எமக்குள்ள வளங்களைப் பகிர்ந்து வாழ்வதன் மூலமே வாழ்ந்து காட்ட முடியுமென்று ஆயர் கூறினார்.

## திருப்பாலத்துவ சபை .....

3ம் பக்கத் தொடர்ச்சி

இதில் ஆரம்ப நிகழ்வாக ஆயர் அவர்களும் மற்றும் இணைப்பாளர்களும் மன்னார் ஊக்குவிப்பாளர்களினால் மாலை அணிவிக்கப்பட்டு கௌரவிக்கப்பட்டனர். பின்னர் குத்துவிளக்கு ஏற்றும் வைபவம் இடம்பெற்றது. அதன்பின் ஆரம்ப செபத்துடன் அனைத்து நிகழ்வுகளும் ஆரம்பமாகின. அருட்தந்தை அவிதப்பர் அடிகள் வரவேற்புரை வழங்க ஆயரினால் ஆசியுரையும் வழங்கப்பட்டது. ஊக்குவிப்பாளர்களினால் இசைக்கப்பட்ட கிறிஸ்மஸ் கீதங்கள் அன்றைய நாளின் முக்கிய நிகழ்வாக இருந்தன.

இந்த ஒன்றுகூடலில் மறைமாவட்டம் முழுவதிலும் இருந்து 138 திருப்பாலத்துவசபை ஊக்குவிப்பாளர்களும் மறைக்கோட்ட இணைப்பாளர்களும் பேராலயப் பங்குத் தந்தையர்களும் அருட்சகோதர சகோதரிகளும் பங்குபற்றினர். இதில் ஊக்குவிப்பாளர்களுக்கு தலைமைத்துவம் பற்றிய உரை அருட்சகோதரர் பப்ரிஸ்ற் குரூஸ் அவர்களினால் நிகழ்த்தப்பட்டது. அதன்பின் மறைக்கோட்டங்களாக பிரிக்கப்பட்டு விளையாட்டுகளும் நடாத்தப்பட்டபின் கிறிஸ்மஸ் பரிசில்கள் வழங்கும் வைபவம் இடம்பெற்றது. மதிய உணவு பரிமாறப்பட்டன.

## யாழ் திருமறைக் .......

3ம் பக்கத் தொடர்ச்சி

கடந்த 25 வருடங்களாக இயங்கி வந்த கவின்கலைகள் பயிலகமே திருமறைக்கலாமன்றத்தின் 40ஆவது வருட நிறைவில் கலைத் தூது அழகியல் கல்லூரியாக இயங்கவுள்ளது.

இக்கல்லூரியின் பிரதான பாடங்களாக வாய்ப்பாட்டு, நடனம் (கதகளி), வயலின், ஓர்கன் (கீபோட்), மிருதங்கம், நாடகமும் அரங்கியலும் (நாடகப் பயிலகம்) நடனம் (பரதம்), வீணை, கிற்றார், புல்லாங்குழல், சித்திரம் என்பனவும் சிறப்புப் பாடங்களாக கூத்து, சினிமாவும் தொழில் நுட்பமும், கண்டிய நடனம் என்பன இடம்பெற உள்ளன.

## சீர் சமைத்த சிற்பி .....

4ம் பக்கத் தொடர்ச்சி

பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் மேல்நாட்டு நடுத்தர வர்க்க, வர்த்தக முதலாளித்துவத்தால் உருவாக்கப்பட்ட முதல் சுதேச ஆயர், மண்ணில் வேரூன்றிக்கொண்டிருந்த சுதேச திருச்சபையின் சவால்களுக்குத் துணிவுடன் முகங் கொடுத்தமையையும் அதில் அடைந்த வெற்றி தோல்விகளையும் இந்நூலில் அழகாகவும் ஆழமாகவும் நீங்கள் காண முடியும் என்று கூறி நூலை அறிமுகப்படுத்தினார்.

யாழ் ஆயர் அவர்கள் இந்நூலை வெளியிட்டு வைக்க முதற் பிரதியை கௌரவ விருந்தினர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து அவர் மதிப்பீடு செய்து ஆய்வுரை நிகழ்த்துகையில் "பேராசிரியர் கைலாசபதி அவர்கள் யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தமிழீழ மக்கள் மத்தியில் ஆற்றப்பட்ட பணிகள் மற்றும் அவைகளை ஆற்றிய பெரியோர்கள் பற்றிய ஆய்வுகள் சிறப்பாக மேற்கொள்ளப்பட முதன்மையிடம் வழங்கவேண்டும் என அன்று ஆய்வுத்துறைத் தலைவராக இருந்த் என்னைக் கேட்டுக்கொண்டார். இதனடிப்படையில் இந்த முதுமெய்யியல்மாணி ஆய்விற்கு நான் உயர் பட்டப்படிப்புகள் பீடாதிபதியாக இருந்த வேளையில் இந்நூலின் ஆசிரியருக்கு அனுமதி அளித்தேன். முதல் சுதேச ஆயருடைய பணித்தகமைகள் வாழ்வின் ஆளுமைப் பண்புகள் போன்றவற்றை ஆதாரங்களுடனும் பலருடைய நேர்காணல்கள் மூலமாகவும், விளக்கிக் காட்டியுள்ளார் என்று பல விடயங்களைச் சபைமுன் வைத்தார்.

# பரிசுத்த தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் வெளியிடப்பட்டுள்ள

## முதலாவது சுற்றுமடல்

## கடவுள் அன்பாய் இருக்கின்றார்

## Deu Caritas est

*தமிழாக்கம் :*
*அருட்சகோதரி கனிஷியஸ் (தி.கு.)*
*மன்னார்.*

"கடவுள் அன்பாய் இருக்கிறார்" என்னும் கருப் பொருளில் பரிசுத்த தந்தை 16ம் ஆசீர்வாதப்பரால் வெளியிடப்பட்டுள்ள 1வது சுற்றுமடலின் சுருக்கமே இங்கு தரப்படுகின்றது. இச்சுற்றுமடல் 2005ம் ஆண்டு மார்கழித் திங்கள் 25ம் நாள் கிறிஸ்து பிறப்பு விழா அன்று வெளியிடப்பட்டது. இச்சுற்றுமடல் இரு நீண்ட பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. *முதலாவது பகுதி* "படைப்பினதும், மீட்பினதும் வரலாற்றில் அன்பின் ஒன்றிப்பு" என்னும் தலையங்கத்தைக் கொண்டது. இது 'அன்பு' என்ற சொல்லின் இறையியல், மெய்யியல் சிந்தனைகளைப் பல்வேறுபட்ட பரிமாணங்களில் முன்வைக்கிறது. "உணர்வு மயமான அன்பு" (Eros), "அறிவு மயமான அன்பு" (Philia), "பகிர்வு மயமான அன்பு" (Agape) ஆகிய இவை மூன்றும் "இறைவன் மனிதன்மேல் கொண்ட அன்பும், அத்தகைய அன்பு மனித அன்போடு கொண்டுள்ள இயற்கையான இணைப்பும்" பற்றியும் இப்படிப்பட்ட பலவித இன்றியமையாத விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கின்றது.

*இரண்டாவது பகுதி* "திருச்சபை அன்பின் சமூகம் என்ற நிலையில் அன்பைச் செயற்படுத்துதல்" என்னும் தலைப்பைக் கொண்டது. இது அயலாரை அன்பு செய்யுங்கள் என்னும் கட்டளையை அமுல்படுத்துவதில் கவனம் செலுத்துகிறது.

### பகுதி I :

"அன்பு" என்னும் வார்த்தை இன்றைய உலகில் அதிகம் உபயோகிக்கப்படுவதும், அதிகம் துஷ்பிரயோகம் செய்யப்படுவதுமான ஒரு வார்த்தை ஆகும். அன்பு என்ற வார்த்தைக்குப் பரந்த அர்த்தம் உண்டு.

புராதன காலக் கிரேக்கம் இந்த அதிகளவான அர்த்தங்களில், ஆணுக்கும், பெண்ணுக்கும் இடையிலான சமத்துவத்தில் தலைசிறந்ததாகத் தோன்றும் முக்கியத்துவம் பெற்ற இந்த அன்புக்கு "உணர்வு மயமான அன்பு" (Eros) என்ற அர்த்தத்தைக் கொடுத்துள்ளது. வேதாகமத்தில், விசேடமாகப் புதிய ஏற்பாட்டில், "அன்பு" என்னும் எண்ணக்கரு அதிகம் ஆழமானதும், வளம் பெற்றதுமான ஒரு அர்த்தத்தைக் கொடுக்கின்றது. இது "உணர்வு மயமான அன்பு" (Eros) எனும் வார்த்தையை மறுத்து, "பகிர்வு மயமான அன்பு" (Agape) எனும் வார்த்தையை முன்வைப்பதன் மூலம் எல்லையற்ற அன்பை வெளிப்படுத்துகின்றது.


கிறிஸ்தவத்திற்கு மிகவும் அதியாவசியமான இத்தகைய புதுமையான அர்த்தத்தைக் கொண்ட அன்பு, "உணர்வு மைய அன்பு" (Eros). இது உடலுடன் தொடர்புடைய அனைத்தும் முற்றிலும் எதிர்மறையான அர்த்தத்தைக் கொண்டவை என்று அதிகம் கருதியதில்லை. இந்த வகையில், இயல்பான சார்புகள் இருப்பினும், இதன் அர்த்தம் முற்றிலும் வேறுபாடானது. "உணர்வு மைய அன்பு" (Eros) படைப்பாளராகிய இறைவனால் மனிதனது இயல்புக்குள்ளேயே உட்புகுத்தப்பட்டது. இதன் ஆரம்ப மாண்பை இழக்காமலும், தூய்மையான பாலுணர்வின் தரத்தைக் குறைத்து, அதனை வெறும் வியாபாரச் சரக்காக மாற்றாமலும் இருக்க இதற்குக் கட்டொழுங்கு, தூய்மை, முதிர்ச்சி ஆகியவை தேவை.

கிறிஸ்தவ விசுவாசம் மனிதனை எப்பொழுதும் ஒரு படைப்பாகக் கருதுகின்றது. அவனுக்குள் இயற்கையாகவே ஆவியும், உடலும் பரஸ்பரம் இரண்டறக் கலந்து, அதிலிருந்து ஒரு புதிய மாண்பு பெறப்பட்டது. மனிதனின் உடலும், ஆன்மாவும் முழுமையான அமைதியில் இருக்கும்பொழுது, "உணர்வு மைய அன்பின் (Eros) சவால் அதனை மேற்கொள்ளலாம். அப்பொழுது அன்பு உண்மையாகவே "தன்னை மறந்த நிலையை" (Ecstasy) அடைகிறது. "தன்னை மறந்த நிலை" எனும்போது நடந்தது என்னும் கருத்தில் கடந்து செல்லும் ஒரு கணப்பொழுதில் நடப்பவைபற்றிக் கூறுவதில்லை. மாறாக, "நான்" என்பதோடு நெருக்கமாகவுள்ளவற்றில் இருந்து, நிரந்தரமாக விலகி, தன்னை அளிப்பதற்கான சுதந்திரத்தை நோக்கியும், தன்னை மீளவும் கண்டறிதலை நோக்கியும், அன்றேல், இறைவனை மீளவும் கண்டறிதலை நோக்கியும் திட்டமான வழியில் செல்லுதல் என்னும் அர்த்தத்தில் கூறப்பட்டுள்ளது. "உணர்வு மைய அன்பு" (Eros) "தன்னை மறந்த நிலையில்" (Ecstasy) மனிதனை இறைவன்பால் எழுப்ப முடியும்.

இறுதியாக அவசியமானது யாதெனில், "உணர்வு மைய அன்பும்" (Eros) "பகிர்வு மைய அன்பும்" (Agape) ஒன்றிலிருந்து மற்றொன்று முற்றிலும் பிரிக்கப்பட முடியாதவை. உண்மையாகவே எவ்வளவு தூரத்திற்கு இரண்டும் வெவ்வேறுபட்ட பரிமாணங்களைக் கொண்டிருக்கின்றனவோ, அவ்வளவுக்கு அன்பின் உண்மை இயல்பு உணரப்பட்டு, தமது சரியான சமநிலையைக் கண்டறிகின்றன. ஆரம்பத்தில் "உணர்வு மைய அன்பு" (Eros) மற்றவரை அணுகும்போது, யாவற்றிற்கும் மேலாக விரும்பப்பட்டாலும், இது தன்னைப்பற்றி தானே ஒரு சில வினாக்களை எழுப்பும். அத்துடன் மற்றவர்களில் அளவிடற்கரிய மகிழ்ச்சியைத் தேடும். இது தன்னைத் தானே அளித்து, "அங்கு மற்றவருக்காக இருக்க விரும்பும். இதனால் ஒருவர் மற்றவரின் ஒரு பகுதியாக மாறுவார். அந்தக் கணத்தில் "பகிர்வு மைய அன்பு" முற்றுப்பெறும்.

இயேசுவின் மனிதாவதார அன்பான இயேசுக் கிறிஸ்துவில் "உணர்வு மைய அன்பும் - பகிர்வு மைய அன்பும்" அதிகம் முழுமையான உருவைப் பெறுகின்றன. இயேசு மனிதனை மீட்பதற்காகச் சிலுவை மரணத்தின் வாயிலாகத் தன்னையே கையளித்தார். இதன் மூலம் அதி மேலான விதத்தில் தனது அன்பை வெளிப்படுத்தினார்.

இயேசு நற்கருணையை ஏற்படுத்தியதன் மூலம் தான் இறுதி வரை எம்முடன் பிரசன்னமாக இருப்பதை உறுதிப்படுத்தினார். அப்ப, இரச வடிவில் புதிய மன்னாவாகத் தன்னையே அளித்து, எம்மைத் தன்னுடன் ஒன்றிணைக்கிறார். நற்கருணையில் பங்கு பெறுவதன் மூலம் அவரது சக்திமிக்க கையளித்தலில் நாமும் பங்குபெறுகின்றோம். நாம் அவரோடு ஒன்றிணைகின்றோம். அதேவேளை யாருக்காகத் தன்னைக் கையளித்தாரோ அவர்கள் அனைவருடனும் ஒன்றிணைகின்றோம். இதன் மூலம் நாம் அனைவரும் ஒரே உடலாகின்றோம். இந்த வகையில் இறைவன் மட்டிலான அன்பும், அயலார் மட்டிலான அன்பும் உண்மையிலேயே ஒன்றுடன் ஒன்று கலக்கின்றன. இந்த இருமடியான கட்டளை இறைவனின் "பகிர்வு மைய அன்புடன்" கொண்ட சந்திப்புக்கு நன்றி கூறுகிறது. காரணம் இனிமேல் இது ஒரு வேண்டுகோள் அல்ல. மாறாக, அன்பு ஒரு கட்டளை. ஏனென்றால் இது முதலில் கொடுக்கப்பட்டது.



### பகுதி II :

அயலார் மட்டிலான அன்பு, இறை அன்பில் ஊன்றப்பட்டுள்ளது. மேலும் இறைமக்கள் ஒவ்வொருவரும் தமது பிறர் அன்புச் செயற்பாடுகளில் மூவொரு இறைவனின் அன்பைத் தியானிப்பது அவர்கள் ஒவ்வொருவரது கடமையாகவும், முழுத் திருச்சபையினதும் கடமையாகவும் இருக்கிறது. இந்தக் கடமையின் மட்டில், விழிப்புணர்வை ஏற்படுத்துவது திருச்சபையின் ஆரம்பத்திலிருந்தே முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது. சில குறிப்பிடப்பட்ட அமைப்புக்கள் அந்தச் செயற்பாடுகளைச் சக்தி வாய்ந்தவையாக ஆக்குவதற்கு வெகு விரைவில் இந்தத் தேவை மிகத் தெளிவாகத் தென்பட்டது.

இதனால் திருச்சபையின் அடிப்படையான அமைப்புக்குள் "பணி புரிதல்" என்பது மற்றவர்கள் மட்டிலானதொரு அன்பின் சேவையாக அதாவது கூட்டாகவும், ஒழுங்கு முறையிலும் செயலில் காட்டப்படும் ஒரு அன்பாகத் தோன்றியது. வெளிப்படையான சேவை, அதே வேளை அது ஒரு ஆன்மீக சேவை. திருச்சபையின் முன்னேற்ற வளர்ச்சியில் அன்பின் செயற்பாடு அதன் அத்தியாவசிய தேவையாக உறுதிப்படுத்தப்பட்டது. திருச்சபையின் மூவித கடமைகளான இறைவார்த்தையை அறிவித்தல், அருட்சாதனக் கொண்டாட்டம், அன்புப் பணிகள் ஆகியவை மூலம் அதன் இயல்பு வெளிப்படுத்தப்பட்டது. இப்பணிகள் ஒன்றிலிருந்து மற்றொன்றைப் பிரிக்க முடியாத அளவுக்கு இயற்கையாய் அமையப் பெற்றுள்ளன.

19ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் திருச்சபையின் பிறர் அன்புப் பணிகளுக்கு எதிராக முக்கியமான தடைகள் பல எழுந்தன. இத்தகைய பணிகள் நீதிக்கு எதிராகச் செயற்பட்டு இறுதியில் தமது சமூக அந்தஸ்தைக் காப்பாற்றுவதில் முடிவடையும் என்று கூறப்பட்டது. மற்றும் தனிப்பட்ட பிறர் அன்புச் செயற்பாடுகளில் ஈடுபடுவதன் மூலம் திருச்சபை நடைமுறையிலிருக்கும் அநீதியான முறைமைகளைக் காப்பாற்றுவதற்குத் துணை புரிகிறது என்றும், இதன் மூலம் அந்த அநீதிகளை ஏதோ ஒரு வகையில் தாங்கக் கூடியதாகச் செய்கிறது என்றும் இந்த அநீதிகளுக்கு எதிராக எழும் எதிர்ப்புகளுக்கு மற்றும் சக்திமிக்க சிறந்ததொரு உலகைக் கட்டியெழுப்புவதற்கும் தடையாயுள்ளது என்றும் காரணம் கூறப்பட்டது. இதனால் மாக்சிசம் உலகப் புரட்சியைத் தோற்றுவித்தது. அத்தகைய புரட்சிக்கான ஆயத்தங்கள் சமூகச் சீரழிவுக்கு ஓர் நிவாரணிபோல் தோன்றியது. அது இற்றைவரை உடைக்க முடியாதிருக்கும் ஒரு கனவு.

திருத்தந்தை 13ம் சிங்கராயரால் வெளியிடப்பட்ட "தொழிலாளர் சாசனம்" ( Rerum Novarum ) (1891) என்னும் சுற்றுமடலுடன் "திருத்தந்தை ஆசிரியம்" (Pontifical Magisterium) ஆரம்பமாகிறது. பின்னர் திருத்தந்தை 2ம் ஜோண் போலினால் வெளியிடப்பட்ட சமூக சுற்றுமடல்களான : I. "மனிதனின் உழைப்பு" (Laborem Exercens) (1981) II. "சமூக அக்கறை" (Sollicitudo Reisocialics) (1987) III. "நூறாவது ஆண்டு" (Centesimus Annus) (1991) ஆகியவை மிகக்கவனமுடன் சமூக வினாக்களை ஆய்வு செய்தன. புதிய பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்தமையானது மிகவும் சிக்கலான சமூகக் கொள்கைகள் எழுவதற்குக் காரணமாயின. இந்தச் சமூகக் கொள்கைகள் திருச்சபைக்கு அப்பால் மிகவும் சிறந்த வழிகாட்டல்களை முன்வைத்தன.



சமுதாயத்திலும், நாட்டிலும் நீதியான ஒழுங்குகளை உருவாக்குவது அரசாங்கத்தின் முதன்மையான கடமையே ஒழிய, அது திருச்சபையின் உடனடியான பணியல்ல: கத்தோலிக்க சமூகக் கொள்கை அரசியலின் மீது அதிகாரம் செலுத்த விரும்பவில்லை. மாறாக! சாதாரணமாக காரணங்களைப் புனிதப்படுத்தி, தெளிவுபடுத்துவதற்காகவும், மனச்சாட்சி உருவாக்கத்திற்காகவும், தனது பங்களிப்பை நல்குகிறது. இதன்மூலம் நீதிக்கான உண்மைக் கோரிக்கைகள் கண்டறியப்பட்டு, இனம் காணப்பட்டு, செயல்படுத்தப்பட முடியும். அன்றியும், இவை அளவுக்கதிகமான பிறர் அன்புப் பணிகளில் ஈடுபடுவதற்கான அரச சட்டங்கள் எதுவும் இல்லை. தான் அனைத்தையும் அளிக்க வேண்டுமென்று, அரசு விரும்பும்பொழுது, அது ஒரு அலுவலக இயந்திரம் போலாகிவிடும். அதனால், துன்புறும், மனிதனுக்கும், மனுக்குலம் முழுவதற்கும் தேவையானவைகளை அதாவது உண்மையான, தனிப்பட்ட, அர்ப்பணிப்பான, அத்தியாவசியத் தேவைகளை வழங்க முடியாது. யாராவது அன்பை அளிக்க விரும்பினால், மனிதரைத் தேடிச் சென்று அளிக்கட்டும்.

எமது நாட்களில் உலக மயமாக்கலின் தாக்கம் சாதகமான செயற்பாடாகத் தோன்றுகிறது. காரணம், இது மற்றவர்கள் மட்டில் கொண்டுள்ள அக்கறை, தேசிய சமூகங்களின் எல்லைகளைக் கடந்து, முழு உலகினதும் எல்லைவரை பரந்து செல்கிறது. அரசியல் அமைப்புக்கள், மானிட கழகங்கள் ஆகிய இரண்டும் பல்வேறுபட்ட வகைகளில் ஆதரவு வழங்குவதால், இவற்றிற்கிடையேயான ஒன்றிப்பு சமூகத்தால் வெளிப்படுத்தப்படுகிறது. இதனால், பல பிறரன்புக் குழுக்களும், தயாள சிந்தையுள்ள குழுக்களும் செயற்பாட்டில் இறங்கியுள்ளன. பரந்துபட்ட அளவில், ஒழுங்குசெய்யப்பட்ட பிறர் அன்புப் பணிகளின் பின்புலத்திற்கு, எதிராக இழந்து போனவற்றிற்கு, மற்றுமொரு மாற்றீடாகத் திருச்சபையின் பிறரன்புப் பணிகள் தமது சொந்த அடையாளத்தை இழக்காதிருத்தல் அவசியம். எவ்வாறாயினும், இது கிறிஸ்தவத்தினதும், திருச்சபையினதும், பிறரன்புப்பணிகளின் சாராம்சத்தின் சிறப்புக்கள் அனைத்தையும் காப்பாற்றுதல் வேண்டும்.

✱ கிறிஸ்தவப் பிறரன்புச் செயல், தனது பதவிநிலைத் தகுதிக்கு அப்பால், விசுவசிப்பவர்களின் இதயங்களைத் தொட்டு, அயலார் மட்டிலான அன்பை அவர்களது இதயங்களில் பிறப்பிக்கும் தெய்வீக அன்பைக்கொண்டு கிறிஸ்துவுடன் கொள்ளும் ஆட்தன்மையான உறவின் அனுபவத்தைக் கொண்டு அமைந்ததாயிருக்க வேண்டும்.

✱ கிறிஸ்தவ பிறரன்புப் பணியானது கட்சிகள், அரசியல் போன்றவற்றிற்கு அப்பால் சுயாதீனமானதாயிருக்க வேண்டும். கிறிஸ்தவர்களின் திட்டம், நல்ல சமாரித்தனின் திட்டம், இயேசுவின் திட்டம் ஆகியவை ஒரு "சந்திப்பு மையமாய்" அமைந்துள்ளன. இந்தச் சந்திப்பு மையமானது, அன்பின் தேவை எங்குள்ளது என்று கண்டறிந்து, அதற்குத் தக செயற்படும்.

✱ மேலும் இன்று கூறுவதுபோல் கிறிஸ்தவப் பிறரன்புப் பணியானது, மதமாற்ற செயற்பாடு அல்ல. அன்பு ஒரு கொடை: ஏனைய இலக்குகளை அடைவதற்காக இதனைப் பயன்படுத்த முடியாது. எனினும் பிறரன்புப் பணி எனும்போது, அது இறைவனையும், கிறிஸ்துவையும் ஒரு பக்கமாக ஒதுக்கிவிட வேண்டுமெனும் கருத்தைக் கொண்டதல்ல. இறைவனைப்பற்றிப் பேசுவதற்குத் தகுந்த நேரம் எதுவென்றும், எப்பொழுது அன்பைப் பேசவிட்டுத் தாம் மௌனம் காக்க வேண்டும் என்பதும், கிறிஸ்தவர்களுக்குத் தெரியும். புனித பவுல் எழுதிய அன்பின் கீதமானது, திருச்சபையின் பணிகளை ஒரு கேவலமான செயற்பாடாக எண்ணி, அவமதிக்கும் ஆபத்திலிருந்து காப்பாற்றும் 'கொள்கைப் பிரகடனமாக' (Magna chata) இருக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் முகம் கொடுக்க நேரிடும் மதச்சார்பற்ற நிலையும், அர்ப்பணத்துடன் செயற்படும் பல கிறிஸ்தவ பிறரன்புப் பணிகளுக்கு அபாயகரமான நிலையாயிருப்பதால், நாம் செபத்தின் முக்கியத்துவத்தை மீள வலியுறுத்த வேண்டும். தனிமனித செயற்பாட்டினால் செய்ய முடியாத அளப்பரிய சேவைகளைக் கிறிஸ்துவுடன் ஒன்றித்த வாழ்வு உறுதிப்படுத்துகிறது.

இன்னொரு வகையில் பிறரன்புப் பணியில் ஈடுபடுவோரை இலட்சியங்களினால் உந்தித்தள்ளி, வெளிப்படையாக இறைவனாலும் நிறைவேற்ற முடியாத அளவுக்குச் சோதனைக்குட்பட்டு மந்த நிலைக்கு விட்டுவிட நேரிடும் நிலைமைகள் செயற்பாட்டிற்கே அழைப்புவிடுப்பதுபோல் தோன்றினாலும், செபிப்பவர்கள் தமது நேரத்தை வீணாக்குவதோ, அன்றேல் இறைதிட்டத்தை மாற்றியமைத்துத் திருத்துவதோ இல்லை. மாறாக அவர்கள் தற்கால உலகில் காணப்படும் இருளையும், சுயநலத்தையும் தோற்கடிப்பதற்கான ஒளியையும், அன்பின் பலத்தையும் இறைவனிடமிருந்து பெற்றுக் கொள்வதற்காக மரியாளினதும், புனிதர்களினதும் மாதிரிகையை கண்டுபாவிப்பதையே நோக்கமாகக் கொண்டுள்ளார்கள்.

# மன்னார் மறைமாவட்ட

# மறையாசிரியர் தினம் 19.03.2006

## நமது வாழ்க்கை திறந்த பாடப்புத்தகமாக இருக்கட்டும்!

### மன்னார் மறைமாவட்ட மறைக்கல்வி இயக்குனர்
### அருட்பணியாளர் பா. கிறிஸ்து நேசன் அடிகளாரின் செய்தி

நிறை வாழ்வை நோக்கிய, இறை அரசுப் பணியில் இனிதாய்ப் பங்கேற்கும் மறையாசிரியர்களே, எனது அன்பையும் தோழமையையும் உங்களுக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

இன்று மன்னார் மறைமாவட்டத்தில் ஏறக்குறைய 700 மறையாசிரியர்கள் பல்வேறு பங்குத்தளங்களில் பணிபுரிகின்றார்கள் என்பது மகிழ்ச்சியான நற்செய்தியாகும்.

மறையாசிரியராகிய நீங்கள் எந்தவிதமான ஊதியமும் எதிர்பார்ப்பும் இன்றி, தொண்டு அடிப்படையில் உங்கள் மறைக்கல்விப் பணியை ஆற்றிவருகின்றீர்கள். மறைக்கல்விப் பணியோடு பங்குத் திருச்சபையின் பல்வேறு பணிகளிலும் உங்களை ஈடுபடுத்தி உழைத்து வருகின்றீர்கள். உங்கள் அர்ப்பணத்தை ஆண்டவர் அறிவார். அவரே உங்களை ஆசீர்வதிக்கின்றார். அவரே உங்களுக்கான கைமாறும் அருள்வார்.

நாம் மாணவர்களுக்கு பாடப் புத்தகங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக்கொடுக்கின்றோம். ஆனால் மறையாசிரியராகிய நம் ஒவ்வொருவருடைய வாழ்வும் திறந்த பாடப்புத்தகமாக இருக்க வேண்டும். நமது நடை, உடை, பாவனை அனைத்துமே நம்மிடம் கற்க வரும் மாணவர்களுக்கு பாடமாக அமைய வேண்டும். அதுவே அவர்கள் உள்ளத்தில் அழிக்கமுடியாத நினைவாக என்றும் நிலைத்து நிற்கும்.

சென்ற ஆண்டில் உங்களுக்கு மறையாசிரியர் சீருடைகளை வழங்கினோம். இந்த ஆண்டிலும் மீண்டும் அவற்றை வழங்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம். நீங்கள் சிறப்பான, தனித்துவமான ஒரு பணிக்கு அழைக்கப் பட்டிருக்கின்றீர்கள் என்பதை உங்கள் சீருடை உங்களுக்கு நினைவூட்டட்டும். *ஆள் பாதி ஆடை பாதி* என்பார்கள். நீங்கள் அணியும் சீருடை உங்கள் பணியின் மேன்மையை உங்களுக்கு உணர்த்துவதாக அமையட்டும்.

பணி வாழ்வு என்பது எப்போதும் பரவசமானது அல்ல. பல வேளைகளில் ஏச்சும், பேச்சும், சொல்லெறியும், கல்லெறியும் நிறைந்த பாடுகளின் பாதையே அது. ஆனால் நம்மை பணி வாழ்வுக்கு அழைத்தவர் எல்லாச் சூழ்நிலைகளிலும் நம்மை நடத்திச்செல்கின்றவராக இருக்கின்றார். ஆகவே பணிவாழ்வின் சவால்களைக் கண்டு பின்வாங்காமல் இறைவனின் அருளோடு தொடர்ந்து முன்னேறிச் செல்வோம்.

பணிவாழ்வின் சோர்வுகளை அகற்றி புதிய உற்சாகத்தோடு பணி செய்ய 'செப அனுபவம்' நமக்குத் தேவை. ***செபிக்கும் மனிதர்களே சந்தோசமான மனிதர்கள்*** என்பதை மறக்காதீர்கள். இறைவார்த்தையை வாசித்து இறை உறவில் வளர முயற்சி செய்யுங்கள். இறைவன் உங்கள் பணியை பலப்படுத்தி, வலுப்படுத்துவாராக!



## மறையாசிரியர் தினம் பற்றிய அறிவித்தல்

மன்னார் மறைமாவட்டத்தில் புனித சூசையப்பருடைய தினம் (மார்ச் 19) மறையாசிரியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது. இம்மறையாசிரியர் தினத்தை இம்முறை பங்கு மட்டத்தில் அர்த்தமுள்ளமுறையில் கொண்டாடும்படி கேட்டுக்கொள்கிறோம்.

பங்கு மட்டத்தில் துணைப்பங்கு மறையாசிரியர்களையும் இணைத்து, மறையாசிரியர் ஒன்றுகூடல்கள், கருத்தரங்குகள், கலை நிகழ்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்யலாம்.

19ம் திகதி ஞாயிறு திருப்பலியை மறையாசிரியர்கள் பொறுப்பேற்று சிறப்பிக்கலாம். இத்தினத்தை 19ம் திகதி கொண்டாட வசதி இல்லாதவர்கள் பொருத்தமான வேறு ஒரு நாளை தெரிவுசெய்யலாம். - (இயக்குனர்)

# மறைக்கல்வியும் மறையாசிரியரும்

செல்வி. பொலிசியா பெனாண்டோ,
தேசிய மறைக்கல்வி நிலையம், கொழும்பு

### *மறைக்கல்வி என்பது என்ன?*

மறைக்கல்வி என்பது வெறும் கல்வியல்ல. அது ஆன்மீக வாழ்வையும், நடைமுறை வாழ்வையும் சீராக்கி, மனிதனை மனிதனாக இறைவிருப்பத்தின்படி வாழ்விக்கும் ஓர் உன்னத வாழ்க்கை நெறியாகும்.

அன்று கிறிஸ்து தான் வாழ்ந்ததை, தான் செயலில் காட்டியதை, தான் போதித்ததை, உலக மக்கள் அனைவருக்கும் போதிக்கும்படி தம் சீடருக்கு எடுத்தியம்பினார்.

கிறிஸ்துவைப் பற்றிய கல்வியை படிமுறைகளின்படி கொடுக்க வேண்டும், அதன்படி வாழவும் வேண்டும். கிறிஸ்துவைப்பற்றிக் கூறும்போது அவர் யார் என அறிமுகப்படுத்தாது கூறினால் அது பயன்விளைவிக்காது.

அன்று கடவுள் "உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகையை உண்டாக்குவோம்" (தொ. நூல் 3:15) எனத் தீமையிடம் கூறினார். அந்த வித்துதான் இந்தக் கிறீஸ்து. மனிதனாக இவ்வுலகில் பிறந்து மனுக்குலத்திற்காக வாழ்ந்தவர்தான் கிறிஸ்து. தன் வாழ்விலும் செயலிலும் இறைத் தந்தையின் விருப்பத்தின்படி வாழ்ந்து காட்டினார். அவரே மறைக்கல்வியாகினார்.

ஓர் உன்னத முன்மாதிரிகையான மறையாசிரியர் கிறிஸ்து ஆவார். *"இவரே என் அன்பார்ந்த மகன் இவரின் நான் பூரிப்படைகிறேன்"* என இறைதந்தையினால் சான்று பகரப்பட்ட கிறிஸ்துவும், "மகனே ஏன் இப்படிச் செய்தாய். இதோ பார் உன் தந்தையும் நானும் உன்னை மிகுந்த கவலையோடு தேடிக்கொண்டிருந்தோமே" (லூக்:2-48) என மரியாளின் வழியாக சான்று பகரப்பட்ட கிறிஸ்துவும் ஒருவரே.

இறைதந்தையின் செய்தியை இவ்வுலகிற்குக் கொடுக்க மனுவுரு எடுத்து பெண்ணிடம் பிறந்தார். மனிதன் படும் துன்ப துயரங்களை தானும் பட்டு பாவநிலையிலிருக்கும் வழிதவறிச் சென்ற மானிட சமூகத்தை மீட்டுக்கொண்டார். பிறரின் மீட்புக்காக, விடுதலைக்காக தன் வாழ்வை அர்ப்பணித்தார். முழு நேரத்தையும் செலவிட்டார். எல்லோரின் கஸ்ரங்களையும் ஏற்றுக்கொண்டார்.

தன் தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுமுகமாக தானே வழியும், உண்மையும், உயிருமாக வாழ்ந்தார். பிறர் செல்லும் வழியாக வாழ்ந்தார். பிறர் கற்கும் சத்தியமாக விளங்கினார். தன் வாழ்வை பிறர் படிக்கும் நூலாக மாற்றினார். மறைபோதகத்தின் மையமாக விளங்கினார்.

மறைக்கல்வியும், மறையாசிரியரும் ஒருவரேயாவார். இதை இயேசுவின் வாழ்விலிருந்து நாம் அறியலாம்.

இறையரசைக் கட்டியெழுப்புவதற்கு கல்வியறிவற்ற மீன்பிடித்தொழிலாளர்களையும், வரிவசூலிப்பவர்களையும் தன்னுடன் சேர்த்துக்கொண்டு கால்நடையாகச் சென்று இறையரசைப் போதித்தார். இறையரசின் விழுமியங்களின்படி வாழ்ந்து காட்டினார்.



தம் சீடருள் தம்மைத் தெரியாது என மறுதலித்த பேதுருவை தம் பணிக்கு தலைவராக ஏற்படுத்தினார். அவரைத் திடப்படுத்தினார். தனக்குப்பின் தன் பணி அழியாதிருக்க இன்னொரு குழுவை ஆயத்தப்படுத்தினார். அவர்களைப் பயிற்றுவித்தார். தான் பயிற்றுவிக்கும் அக்குழுவினரை ஊக்குவித்தார். அவர்களின் பணிவிடைக்காரராக மாறினார். பல சந்தர்ப்பங்களில் அவர்கள் சொல்லுவதை ஏற்றுக்கொண்டார். விசுவாசத்தில் அவர்களைத் திடப்படுத்தினார். சிறிது சிறிதாக அவர்களை மறைபோதகத்தில் ஊறச்செய்து கட்டியெழுப்பினார். அன்பின் வழிகொண்டு அவர்களை வழிநடத்தினார்.

*"நற்செய்தி அறிவிப்பாளனின் பாதங்கள் எத்தனை அழகானவை"* என்ற எசாயாவின் கூற்றுப்படி கிறிஸ்துவின் பாதச்சுவடுகள் உண்மையாகவே அழகானவையாகக் காணப்பட்டன. தன் பாதச்சுவடுகளை சரியான முறையில் அமைத்துச் சென்றார். அதன்வழி நாம் செல்வது கடினமான செயலாகும். இருப்பினும் அதன்வழி நடந்தால் நிச்சயமாக மகிழ்ச்சியான, அழகான நித்திய வான்வீட்டை அடையலாம் என்பதை வலியுறுத்தினார்.

ஒவ்வொரு செயலைத் தொடங்குவதற்கு முன்னும் இறைவனோடு உரையாடிச் செபித்தார். இறைவனோடு நெருங்கிய உறவைக் கொண்டிருந்தார். எல்லா வகையிலும் இறைவனின் பதிலை எதிர்பார்த்தார். பத்துக் கட்டளையை இரண்டு கட்டளைகளாக மாற்றி அதைத் தன் வாழ்வில் செயல்படுத்தினார்.

அன்பை அடிப்படையாகக் கொண்டார். குழந்தைகளை வாழ்க்கையில் முன்மாதிரிகையாகக் கொண்டு வாழச் சொன்னார். அன்றாட வாழ்வின் தத்துவங்களை மக்களுக்கு எடுத்துரைத்தார். ஆன்மீக ரீதியில் மட்டுமல்ல சாதாரண வாழ்வில் மனிதன் எவ்வாறு வளர்ச்சியடைய வேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டினார்.

மறைக்கல்வியின் உறுதியான நோக்கமானது – கிறிஸ்துவின் மூலம் இவ்வுலகில் இறையரசை நிலைநாட்டுவதாகும். அதன் மூலம் கிறிஸ்துவுடன் ஆழமான உறவை வளர்ப்பதுமாகும். இன்று மனிதன் இறைவழி விட்டு விலகி, பாதைமாறி எங்கோ அலைந்து திரிகின்றான். அவ்வாறு அலையும் மனிதனை ஆன்மீகத்தில் ஊறச்செய்து, இறையுதவியின்றி எம்மால் எதுவும் செய்ய முடியாது என்ற உண்மையை அவன் உணரச் செய்யவேண்டும். இதை உணர்த்துவது மறைக்கல்வியின் பாரிய பணி.

ஒரு சமூகம் கட்டியெழுப்பப்பட வேண்டுமாயின் இறைவார்த்தையானது உணவாக அளிக்கப்படல் வேண்டும். இறைவார்த்தையை நாம் வாசித்து நாம் அதன்படி வாழ முயற்சிக்க வேண்டும். மனம் வருந்தி நாம் செய்த பாவங்களுக்கு மன்னிப்புப் பெற்று புது மனிதராக வாழ வேண்டும்.

இன்று பல சமயத்தவர்கள் வினா எழுப்புகின்றனர் - எப்படி கிறிஸ்து உயிர்த்தார் என்று. உயிர்ப்பு என்ற அந்த நிகழ்வு யாராலும் புரிந்துகொள்ள முடியாத ஒரு நிகழ்வாகும். அந்தப் பாஸ்கா மறைபொருளுக்கு மறைக்கல்வியானது சான்று பகரும் கல்வியாக அமைய வேண்டும்.

கிறிஸ்து அன்று பாவக்கட்டுக்களில் கட்டுண்ட மனித சமூகத்தை விடுதலைபெறச் செய்தார். மறைக்கல்வியும் அவ்வாறே முழுமனித விடுதலைக்காக செயலாற்றக்கூடியதாக இருக்கவேண்டும். விடுதலை பெற்ற மக்கள் சமூகத்தைத் தூய்மையாக்க வேண்டும். நற்செய்தி என்ற மீட்பின் செய்தியை அனைவருக்கும் பறைசாற்ற வேண்டும். இவற்றை அடிப்படை நோக்கமாகக் கொண்டே மறைக்கல்வியானது நடைபெறுகின்றது, பயணிக்கின்றது, வீறுநடை போடுகின்றது.

### *யார் இந்த மறையாசிரியர்?*

**மறை + ஆசிரியர் –**

மறையாசிரியர் என்ற இச்சொல்லைப் பிரித்தோமாயின் இதில் வரும் ***மறை*** என்னும் சொல்லடியினுள் பல அர்த்தங்கள் மறைந்து கிடக்கின்றன. கிறிஸ்துவை மூலாதாரமாகக் கொண்டு, கிறிஸ்துவின் பாதை சென்று கிறிஸ்துவின் சொல்லை தன் வாழ்வின் கேடயமாகக் கொண்டு வாழ்பவரே மறையாசிரியர் ஆவார்.

இன்று மறையாசிரியர்கள் பல்வேறு வகையான சவால்களைச் சந்திக்கின்றனர். ஆனால் பணி வாழ்வு என்பது எப்போதுமே மகிழ்ச்சியான வாழ்வு அல்ல. சில வேளைகளில் கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதையாகும். "என்ன நேர்ந்தாலும் வெட்கமுற மாட்டேன். இன்றும் என்றும் வாழ்விலும், சாவிலும் முழுத்துணிவுடன் கிறிஸ்துவை என் உடலால் பெருமைப்படுத்துவேன். இதுவே என் பேராவல். இதுவே என் எதிர்நோக்கு" (பிலி: 1-20) என்ற புனித பவுலடியாரின் மனநிலை மறையாசிரியர்களாகிய நமக்குத் தேவை.

# வாழ்வுதயம்

VALVUTHAYAM (Caritas - Mannar)

"நான் தாகமாய் இருந்தேன் என் தாகத்தை தணித்தீர்கள்"

VALVUTHAYAM (Caritas - Mannar)

போஷகர்
அதிவந்தனைக்குரிய
ஆயர் இராயப்பு யோசப் ஆண்டகை

இயக்குனர்
அருட்தந்தை பி. ஜேசுராஜா.

Mannar Diocesan Centre For Justice, Peace And Human Development - Valvuthayam (Caritas - mannar), No. 17, Main Street, Mannar - Sri Lanka T.P: 023 - 2232140, Fax: 023-2232893, E-mail: valvum@slthet.lk


## மக்கள் அமைப்பை வலுப்படுத்தி முன்னேற்றத்திற்காக உழைப்போம்

### வவுனியா செட்டிகுளம் பிரதேச மக்கள் அமைப்பு ஒன்றுகூடலில் வாழ்வுதய இயக்குனர் பி. ஜேசுறாஜா அடிகளார்

மக்கள் அமைப்பை வலுப்படுத்தி அதன் ஊடாக சமூக, பொருளாதார, கலாச்சார முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும் என வாழ்வுதய இயக்குனர் பி. யேசுராஜா அடிகளார் தெரிவித்தார். மன்னார் மறைமாவட்டத்தில் வாழ்வுதய நிறுவனத்தின்கீழ் தற்பொழுது 136 கிராமிய விழிப்பூட்டல் குழுக்கள் சமூக, பொருளாதார, கலாச்சார மேம்பாட்டை மையமாக வைத்து செயற்பட்டு வருகின்றன. வாழ்வுதயம் பிரதேச ரீதியாக ஐந்து அல்லது ஆறு குழுக்களை ஒன்றுசேர்த்து "மக்களமைப்பு" என்ற பெயரில் நிலையங்களை உருவாக்கி வருகின்றது. இம்மக்கள் அமைப்பு ஒன்றுகூடலிலேயே வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை ஜேசுறாஜா அடிகளார் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், "நாம் கடந்த யுத்தச் சூழலினால் உடல், உள, பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டு பின்தள்ளப்பட்டிருக்கின்றோம். தற்பொழுது தற்காலிகமான சமாதானச் சூழலில்கூட இயல்பு வாழ்க்கை எமக்கு நிறைவாகக் கிடைப்பதில்லை. எனவே நாம் எமது பலத்தில் மட்டுமே நம்பிக்கைகொண்டு வாழவேண்டியுள்ளது. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு அனைவரும் ஒன்றிணைந்து சமூக முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டும். அப்போதுதான் நாம் முன்னேறுவதற்கு வழி பிறக்கும். வாழ்வுதயமானது கிராமிய குழு உறுப்பினர்களின் வளர்ச்சிக்காக பல்வேறுபட்ட விழிப்புணர்வு நிகழ்வுகளை நடாத்தி வருகின்றது. எனவே சிறு குழுக்களாக இயங்கும் நீங்கள் பிரதேசரீதியாக ஒன்றுபட்டு மக்கள் அமைப்பாக மாறவேண்டும்" எனக் கூறி தனது உரையை நிறைவு செய்தார். (தொடர்ச்சி 16ம் பக்கம்)

## வீட்டு மின்னிணைப்பு பயிற்சி நிறைவு




வாழ்வுதய நிறுவனத்தில் இயங்கும் 10 செயற்பாட்டுப் பிரிவுகளில் தொழிற்பயிற்சிப் பிரிவும் ஒன்றாக இயங்கி வருகின்றது. தேவையேற்படும் கிராமங்களில் பயிற்சி நிலையங்களை உருவாக்கி பாடசாலையை விட்டு விலகிய இளைஞர் யுவதிகளை இனங்கண்டு அந்தந்த பிரதேசத்தின் வளம் மற்றும் தேவைகளுக்கமைய பயிற்சி நெறிகளை நடாத்தி பயிலுனர்களின் வேலையில்லாப் பிரச்சனைக்கு முடிவுகட்டுவதும், அவர்களது பொருளாதார வளத்தை மேம்படுத்துவதும் இப்பிரிவின் செயற்பாடுகளாகும்.

கடந்த இரண்டு வருடங்களாக மேசன் தொழிற்பயிற்சி, உழவு இயந்திரம் திருத்தற்பயிற்சி, வெளி இணைப்பு இயந்திரம் திருத்தற் பயிற்சி, அச்சகப் பயிற்சி, மின்னிணைப்புப் பயிற்சி போன்ற தொழிற்பயிற்சிகளை வாழ்வுதயம் மாவட்டத்தின் பல கிராமங்களில் நடாத்தி வந்துள்ளது. இப்பயிற்சிகளின்போது அறிவூட்டல் பயிற்சியாக பால்நிலை அபிவிருத்தி மற்றும் வாழ்க்கைத்தரம் உயர்வு என்னும் தலைப்பிலான பயிற்சிகளும் வழங்கப்பட்டு வருகின்றன. இப்பயிற்சிகளானது தொழிற்பயிற்சியைப் பெறும் மாணவ, மாணவிகளுக்கும் மாணவர்களின் பெற்றோருக்கும் வழங்கப்படுகின்றது. (தொடர்ச்சி 16ம் பக்கம்)




மன்னார் பிரதேச மக்களமைப்பு ஒன்றுகூடல் வாழ்வுதய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது.



முசலிப் பிரதேச மக்களமைப்பு ஒன்றுகூடல் கொக்குப்படையான் ஆலய முன்றலில் நடைபெற்றபோது.

## பெற்றோரை இழந்த வறிய மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக உதவிக் கொடுப்பனவு

### கறிற்றாஸ் - போலந்து நிறுவனம் கல்விக்கான நிதி உதவி



*வாழ்வுதயப் பணியாளரால் மாணவர்களின் தேவைபற்றி அறிந்துகொள்ளப்படுகின்றது*

கறிற்றாஸ் போலந்து நிறுவனத்தின் நிதி உதவியுடன் கறிற்றாஸ் - சிறிலங்காவின் ஊடாக தேசிய மட்டத்தில் பெற்றோரை இழந்த வறிய மாணவ மாணவிகள் 1500 பேருக்கு அவர்கள் தமது கல்வியை நல்ல முறையில் தொடருவதற்காக நிதியுதவி வழங்கும் திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் மன்னார் மறைமாவட்டத்திலும் இவ்வுதவி தேவை என மன்னார் ஆயர் அதிவந்தனைக்குரிய பேரருட்திரு இராயப்பு ஜோசேப் ஆண்டகை அவர்களினதும் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுறாஜா அடிகளாரினதும் வேண்டுகோளுக்கிணங்க மன்னார் மறைமாவட்டத்தில் 79 மாணவர்களுக்கு இவ்வுதவி வழங்கப்பட்டு வருகின்றது.

பங்குத்தந்தையர்கள் மற்றும் அருட்சகோதரிகளது பராமரிப்பில் தங்கிக் கல்விகற்கும் மாணவர்களுக்கு உணவு வகைகள், விடுதிச் செலவுகள், சுகாதார செலவுகள், பீங்கான்கள், கட்டில்கள், வீட்டுப் பாவனைப் பொருட்கள், வேறு செலவுகள் போன்றவைகளுக்கும் இப்பணம் பயன்படுகிறது. மற்றுமொரு தொகுதியினர் உறவினர் வீடுகளில் இருந்து கல்வி கற்கின்றனர். இவர்களுக்கு பாடசாலைச் செலவுகள், மேலதிக வகுப்புச் செலவுகள், புத்தகங்கள், குறிப்புப் புத்தகங்கள், எழுது கருவிகள், சீருடைகள், மற்றும் ஆடைகள், பாதணிகள் பாடசாலைப் புத்தகப்பை போன்றவைகளுக்கும் இப்பணம் பயன்படுகின்றது. இவ்வாறாக இவ் உதவிகளை வழங்கி இம்மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக வாழ்வுதய கல்விப்பிரிவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இச்செயற்றிட்டங்களுக்கு இணைப்பாளராக செல்வன் சுவைக்கீன் பிரபாகரன் துரம் என்பவர் கடமையாற்றி வருவதும் குறிப்பிடத்தக்கது.

*உணர்வுகள் மனித வாழ்வுக்குத் தேவையானவை. இருப்பினும் இவ்வுணர்வுகளை ஆழ்மனதில் அடைக்காமல் வெளிக்கொணர்வது ஓர் ஆளுமை நிறைந்த மனிதனின் பண்பாகும்.*

*- S. றாஜன், இணைப்பாளர் கிராமிய விழிப்பூட்டல் பிரிவு, வாழ்வுதயம், மன்னார்.*

## முருங்கன் மாவிலங்கேணியில் நாட்டு சமாதானத்திற்கான திருவிழிப்பு பிரார்த்தனை



நாட்டில் ஏற்பட்டுள்ள முரண்பாட்டு முறுகல்நிலை அகன்று நிரந்தர சமாதானம் ஏற்படுவதற்கும் நீண்ட இடைவெளியின் பின்னர் நடைபெற இருக்கும் பேச்சுவார்த்தை நிரந்தர சமாதானத்திற்கு சாதகமான பதிலைத் தரவேண்டும் எனவும் வேண்டி முருங்கன் பிரதேசத்தின் மாவிலங்கேணி கிராமத்தில் இயங்கும் வாழ்வுதய கிராமிய விழிப்பூட்டல் குழு உறுப்பினர்கள் 80 பேருக்குமேல் திருவிழிப்பு வழிபாட்டில் கலந்து கொண்டனர்.

இத்திருவிழிப்பு ஆராதனை அளவக்கை பங்குத்தந்தை அருட்திரு சந்தியாகு அடிகளார் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. முதலில் அருட்தந்தையால் மாலை 7.00 மணியளவில் திருச் செபமாலையும், உளமாற்ற வழிபாடும், திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது. பின்னர் நற்செய்திப்பணியாளர்களால் புகழ்ச்சிக் கீதங்கள், மனமாற்ற வழிபாடுகள் போன்றவைகள் நடாத்தப்பட்டன. இத்திருவிழிப்பு ஒன்றுகூடலில் வாழ்வுதயப்பணியாளர்கள், கிராமப் பெரியார்கள் எனப் பலரும் கலந்துகொண்டு நாட்டின் சமாதானத்திற்காக உருக்கமுடன் பிரார்த்தனை செய்தனர். இத்திருவிழிப்பு வழிபாடானது இரவு 12.00 மணியளவில் நிறைவெய்தியது. இத்திருவிழிப்பு வழிபாட்டை வாழ்வுதய பணியாளர் திரு C.M.A. ஜெயதாஸ், செல்வன் S. பூட்டோ பெரேரா போன்றோர் ஏற்பாடு செய்து நடாத்தினர்.

## வாழ்வுதய முன்பள்ளிகளுக்கு விளையாட்டு உபகரணங்கள்



வாழ்வுதய நிறுவனத்தின் நிர்வாகக் கட்டமைப்பிற்குள் 126 முன்பள்ளிகள் சிறப்பாக இயங்கி வருகின்றன. இம் முன்பள்ளிகளுக்கு அறிவூட்டம் கொடுக்கக்கூடிய விளையாட்டு உபகரணங்கள் வாழ்வுதயத்தால் வழங்கப்பட்டு வருகின்றன. அண்மையில் வவுனியா, செட்டிகுளம், மடு ஆகிய பிரதேசங்களுக்கு பொறுப்பான ஆசிரியர்களிடம் இவ்விளையாட்டு உபகரணங்களை வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை பி. ஜேசுறாஜா அடிகளார் கையளித்தார். இவ்விளையாட்டு உபகரணங்கள் பாலகர்களின் அறிவைப் பெருக்கிக்கொள்வதற்கு உதவியாக அமையவுள்ளன. அத்தோடு இச்சிறார்கள் உற்சாகமாக ஒருவர் ஒருவருடன் இணைந்து, ஒற்றுமையை சிறு பராயத்தில் இருந்தே கற்றுக்கொள்வதற்கும் இவ்விளையாட்டு உபகரணங்கள் பேருதவியாக அமையும். வாழ்வுதயத்தினால் 4235 சிறார்களுக்கு சத்துணவு வழங்கப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. இச்சத்துணவானது பாலகர்களின் போஸாக்கை வளப்படுத்துவதோடு அவர்களது பாடசாலை வருகையையும் ஊக்குவிக்கிறது.

# மன்னா விளம்பரப் பலகை

இந்த விளம்பரப் பலகை உங்களுக்கானது. இதில் நீங்களும் எழுதலாம். இதுபோல 'சுருக்' 'நறுக்' சுவையாய் ...... எழுதி அனுப்புங்கள்.

முகவரி :
**மன்னா விளம்பரப் பலகை**
**மன்னா பணியகம்,**
**மறைக்கல்வி நிலையம்,**
**புனித செபஸ்ரியார் பேராலய வீதி,**
**மன்னார்.**

"ஊரை அடித்து உலையில் போடும் உலகில் உலை அரிசியையும் குருவிகளுக்குப் போட்டவன் பாரதி"
(க. திருச்சங்குவின் இக்கவிதை பி.பி.சியில் ஒலித்தது)
*- இ. டக்ஷினி, உப்புக்குளம், மன்னார்.*

"சிரங்கு பிடிச்சவன் கையும், செல்போன் பிடிச்சவன் கையும் சும்மா இருக்காது"
*- அ. மதுசா, மன்னார்*

"காலணிகளை மிகச் சரியான வரிசையில் நேர்த்தியாக வைப்போம். ஒழுக்கம் இங்கேயே தொடங்கட்டும்"
*(ஒரு வீட்டின் முகப்பிலுள்ள வாசகம்)*
*- எஸ். கொன்சி குரூஸ், தலைமன்னார்.*

"முதுகுக்குப் பின் ஒரே ஒரு காரியம் செய்யலாம். அது முதுகைத் தட்டிக் கொடுப்பது"
(மாவீரன் நெப்போலியன்)
*- தீபா, ஆவணம், நானாட்டான்*

"சுடும்வரை நெருப்பு, சுற்றும்வரை பூமி, போராடும் வரை மனிதன், நீ மனிதன்"
(கவிப்பேரரசு வைரமுத்து)
*- புவனேஸ்வரி, மன்னார்.*

"சின்னச் சின்னப் பிரச்சனைகளைக் கண்டு கவலைப்படக்கூடாது. ஏனெனில் அது நம்மை ஒன்றும் செய்து விட முடியாது. பெரிய பெரிய பிரச்சினைகளைக் கண்டும் கவலைப்படக்கூடாது. ஏனெனில் அதை நாம் ஒன்றும் செய்து விட முடியாது"
(ஓர் உரையில் கேட்டது)
*- வெ . சசிகலா, எமில்நகர், மன்னார்.*

"மனிதன் பறவையைப்போல் பறக்கக் கற்றுக் கொண்டான். மீனைப்போல் நீந்தக் கற்றுக்கொண்டான். ஆனால், மனிதனைப் போல் வாழக் கற்றுக் கொள்ளவில்லை"
(மார்டின் லூதர்கிங்)
*- ஸ்ரீ ரேகா, பேசாலை.*

"வாழ்க்கையின் மொத்தக் கணக்கு இதுதான். சோம்பலைக் கழிக்க வேண்டும். சுறுசுறுப்பைக் கூட்ட வேண்டும். உழைப்பைப் பெருக்க வேண்டும். உயர் வாழ்வை வகுக்க வேண்டும்"
*- அ. ரேகா, தலைமன்னார்.*

"பிரச்சனைகள் உங்கள் தலைக்கு மேல் வட்டமிடுவதைத் தடுக்க முடியாது. ஆனால் உங்கள் தலையில் கூடு கட்டாமல் தவிர்க்க முடியும்" (சீனப் பழமொழி)
*அ. லவ்சன், மன்னார்.*

"வெற்றி என்பது தானாக வருவதில்லை. அது வியர்வைத் துளிகளின் விளைச்சல்".
*- ஜோசப் யூட், மன்னார்*

"கவலைகளையும், காலணிகளையும் வெளியே விட்டு விட்டு உள்ளே வரவும்". *(மருத்துவமனை நுழைவாயிலில் கண்டது)*
*- கென்றி, சிறுத்தோப்பு, பேசாலை*

"காலுக்கு செருப்பு எப்படி வந்தது? முள்ளுக்கு நன்றி சொல்."
*(கவர்ந்த திரைப்பட பாடல் வரிகள்)*
*- சிந்து, பனங்கட்டுக் கொட்டு மேற்கு, மன்னார்*

நூல்களை நூலகங்களில் உறங்க விடாதீர்கள். வீட்டுக்கு அழைத்துச் சென்று உறவாடுங்கள்.
*(நூலகத்தில் நடந்த சொற்பொழிவில் கேட்டது.)* சுதனி, சாவற்கட்டு, மன்னார்

# நாவண்ணன் எழுதும் வித்தான காவியம்

**மன்னார் வேதசாட்சிகளின் வரலாற்றைக் கூறும்**

## காவியத் தொடர் – 8

### சாட்சிகள்

மாதோட்டம் ஓடினராம் சிலபேர் மாந்தை நகர் ஏகினராம் சிலபேர்
"மாதேட்டம் நமக்கிந்தச் சாவு மறுதலியோம்" என்பாராம் பலபேர்
"சங்கிலியன் கொலைப் படைகள் வரட்டும் சாவினையே எங்களுக்குத் தரட்டும்
எங்களுயிர் வெல்லமல்ல எமக்கு எம் முடிவும் ஏற்ப"மென்றார் அவர்கள்.

ஐயாயிரம் வீரர் கொண்ட படையும் அரசனுடன் அணிவகுத்து வரவும்
ஐயமில்லா விசுவாசம் கொண்டோர் ஆவிதர வேதுணிந்து நின்றார்
உள்ளவரை ஓரிடத்தில் சேர்த்து உறுமலுடனே அவரைப் பார்த்து
எள்ளளவும் ஈரமில்லா நெஞ்சன் எள்ளி நகையாடினானவ் வஞ்சன்

அன்பு மறை போதித்த துறவி ஆனவராம் பிரான்சிஸ்கு சவேரி
துன்புறவே முன் இழுத்து வந்து துணிந்தார்கள் தலை உடலை வேறாய்
போதித்தோன் போன நிலை கண்டு பொல்லாத சாவினுக்கு அஞ்சி
மீதிப்பேர் மிரண்டு போயிருப்பர் மிச்சமின்றி புதுமறையை மறுப்பர்

சாவினுக்கும் அஞ்சாதோர் உண்டே சரணடைவர் எமது பக்கம் சார்வர்
தீவினைக்கு அஞ்சிடுவர் என்று திடமாக நம்பலுற்றான் மன்னன்.
வீரர்களுக் காணையிட்டான் "விசாரணைகள் செய்திடுங்கள் நீங்கள்
ஆரெவரும் கிறிஸ்தவர்கள் என்றால் அடுத்த கணம் அறுத்திடுவீர் அவரை"

ஒவ்வொருவராய் வீரர் பிடிப்பார் ஒரு வினாவை மட்டுமேதான் விடுப்பார்
அவ்விடையோ, அவர்க்கெதிர தானால் அரிந்தனராம் விசுவாசிகள் தலையை
தாயுடனே பிள்ளை யிருப்பானாம் தா பதிலை என்று கேட்க வீரர்
தாயவளே சொல்லுவாள் 'ஆம்' என்று தலை உருளும் மறுகணமே மண்ணில்

பெண்களோடு ஆண்களுமே மாண்டார் பிள்ளைகளும் முதியவரும் மாய்ந்தார்
மாண்புடைய மறைக் குயிரை நல்கி மன்னாரில் வேதசாட்சி ஆனார்.

**(வேறு)**
வெட்டித் தலை கொட்டித் தரையினில் பட்டுத் துடித்திட்டு நிறைந்திட
பச்சைத்தரை செக்கச் சிவந்திட சொரி .... சோரி ...
எட்டிப் பிடித்திட்டுத் தறித்திட கெட்டித் திடம் பற்றித் துணிந்துயிர்
விட்டுப் புகழ் பெற்றுத் தளிர்த்தவெம் முதியோரே ......

குத்திக் கிழித்திட்டுக் குருதியும் குப்புக் குபு குப்புக் குபுவென
தத்தித் தரை மெத்தப் பரந்திட சித்தப்பித் துற்றுத் திமிருடன்
வெற்றிகளிப் புற்றுக் குதித்தன் கொடியோரே .....

**(வேறு)**
மன்னி நகர் காவலனாய் வாழ்ந்த மாட்சிமை சேர் இளஞ்சிங்கன் இளவல்
சென்னி தறி பட்டு மண்ணில் மாய்ந்தான் செய்வித்தவன் செகராச மன்னன்
அரசுக்கெதிர் சதிகாரன் என்ற அவப் பெயரை அவனுக்குச் சூட்டி
சிரசதனைச் சேதம் செய்வித்தான் செகராச சேகரனாம் சங்கிலி

அன்னை மண்ணில் ஆகமத்தைச் சொல்லி அத்துமீறி அடியதனைப் பதிக்க
அந்நியர்க்கு ஆதரவு கொடுத்தான் என்ற அவப் பெயரதனைப் பதித்தான்
முன்னை மறை சைவமதை அழிக்க முனைந்ததற்கு தண்டனையைக் கொடுக்க
தன்னைக் குற்றம் கூறிடாத வகையில் தண்டனையைத் தந்திட்டார் அரசன்.

(காவியம் நீளும்)

# கதையும் கருத்தும் களமும்

**அருட்பணியாளர். அன்புராசா அ.ம.தி**

ஓர் ஆணும் பெண்ணும் மருத்துவமனைக்கு முதன் முதலாக வந்திருந்தார்கள். முதன் முதலாக வைத்தியசாலைக்கு வந்திருந்ததனால் அங்கு நடைபெறுகின்ற சிகிச்சை முறைகளைப் பார்த்து உண்மையில் மலைத்துப் போனார்கள். அங்கு நடந்தவைகளைக் கண்டு இருவரும் தங்களுக்குள் வியப்பாகப் பேசிக்கொண்டார்கள்.

மருத்துவ பரிசோதனைக்கு மேற்சொன்ன இப்பெண் அழைக்கப்பட்டாள். மிக மகிழ்ச்சியாகத் துள்ளிக் குதித்துச் சென்றாள். அடுத்ததாகத் தன்னை அழைக்கப்போகிறார்கள் என்ற மகிழ்ச்சியில் அவன் இருந்தான். போனவள் ஒரு கையால் மற்றைய கையை இறுக்கப்பிடித்தபடி கண்ணீரோடு வெளியே வந்தாள். அவன் அதிர்ச்சி அடைந்தவனாக, "நல்ல சந்தோஷமாகத்தானே போனீங்க!.. அழுதுகொண்டு வாறீங்க... என்ன நடந்தது...?" என விபரத்தைக் கேட்டான். அவளோ, வேதனையில், "பிளட்.... ரெஸ்ற் (Blood Test) என்று சொல்லி எனது விரலொன்றை குத்திக் கிழித்து இரத்தம் எடுத்தாங்கள்".. என்றாள். இப்போது அவன் ஓவென்று அழ ஆரம்பித்தான். அவள் "அதற்கு ஏன், நீங்க அழுறீங்க?... எனக் கேட்க, "நான் யூறின்.. ரெஸ்ருக்கு (Urine Test) வந்திருக்கிறேன். எனக்கும் அதே கதிதானோ.." எனப் பரிதாபமாகக் கேட்டான்.

"மனிதனின் எதிரிகள் இரண்டு. ஒன்று பயம், மற்றது கவலை. பயம் வலுப்படைத்த வியாதி. கவலை மெல்ல மெல்ல அரிக்கும் நோய். பயத்தாலும் கவலையாலும் மனிதன் தன் வாழ்வை நரகமாக்கிக்கொள்கிறான்" எனக் கூறும் எம் எஸ். உதயமூர்த்தி, "நோயினால் சாகுமுன், சாவின் பயத்தால் மனிதர்கள் செத்திருக்கிறார்கள். எதிரியால் தோற்கடிக்கப்படுமுன் வெறும் பயத்தால் படைகள் நாட்டைப் பறிகொடுத்திருக்கின்றன" என்பார். பயத்திற்கான காரணம் உண்மையாயிருக்கலாம் அல்லது கற்பனையாயிருக்கலாம். அநேகமான சந்தர்ப்பங்களில் கற்பனைப் பயங்களையே உருவாக்கி ஒளிந்து மறைந்து கிடந்துவிடுகின்றார்கள். பயந்த சுபாவம் உடையவர்கள் ஏதாவது ஒன்றைக் கூறிப்பயப்படுத்திக்கொண்டே இருப்பார்கள். "அதைச் செய்தால் அப்படி நடக்கும். இதைச் செய்தால் இப்படிப் போகும்" எனச் சொல்லி எந்த ஒரு முயற்சிக்கும் தடையாகவே இருப்பார்கள். இவை போன்றவர்களுக்குத்தான்,

*"வேப்பமர உச்சியில் பேயொன்று ஆடுதுன்னு*
*விளையாடப் போகும்போது சொல்லிவைப்பாங்க - உன்*
*வீரத்தைக் கொழுந்திலேயே கிள்ளி வைப்பாங்க,*
*வேலையற்ற வீணர்களின் மூளையற்ற வார்த்தைகளை*
*வேடிக்கையாகக்கூட நம்பிவிடாதே – நீ*
*வீட்டுக்குள்ளே பயந்து கிடந்து வெம்பி விடாதே"*

எனப் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் பாடுகிறார்.

பயத்தைப் போக்குவதற்கு பின்வரும் ஆலோசனையை எமர்சன் என்ற அறிஞர் சிபார்சு செய்கிறார். "எதைக்கண்டு பயப்படுகிறார்களோ அதைச் செய்யத் துவங்கும்போது பயம் பறந்துபோகும்" என்கிறார். எதற்கும் பயப்படவேகூடாது. யாருக்கும் பயம் வரவேகூடாது எனக் கூறவில்லை.

மனம் தீமையை நாடுகின்றபோது அதனால் விளையப்போவது தீமை என்ற பயம் அத்தீமையைச் செய்யாமல் தடுக்கிறது. ஒருவருக்குத் தேவையான ஒன்றை கள்ளமாக, கபடமாகக் கவர்ந்து கொள்வது தீமையானது என்ற பயம் களவு என்ற தீய செயலை அவருடைய வாழ்விலிருந்து நிராகரிக்கின்றது. அதிவேகமாக, "கண் மண் தெரியாமல்' வாகனத்தைச் செலுத்தினால் ஆபத்து நேரிடும் என்ற பயம் வாகனத்தை அவதானமாகச் செலுத்தத் துணை புரியும். வேலையை ஒழுங்காகச் செய்யவில்லை என்றால் சம்பளம் கிடையாது என்ற பயம் ஒருவருக்குக் கொடுக்கப்பட்ட வேலையை திறம்படச் செய்ய உதவுகிறது.

கல்வி இல்லை என்றால் வாழ்க்கை இல்லை என்ற பயம் கல்வியில் வளரத் தூண்டுகோலாகின்றது. ஆக, பயப்படவேண்டிய விடயங்களுக்குப் பயப்பட வேண்டும். இதனைத்தான் "அஞ்சுவது அஞ்சாமை பேதமை" என்றான் வள்ளுவன். அவற்றை விடுத்து எவரைப் பார்த்தாலும் பயம், எதைச் செய்தாலும் பயம், எடுத்ததெற்கெல்லாம் பயம் என்பது பேடியின் செயலென்பார் எம். எஸ். உதயமூர்த்தி.

சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு ஏறக்குறைய ஒரு வருட நினைவை நினைவுகூரும் சந்தர்ப்பத்தில் என்னுடைய நண்பர் ஒருவரை சந்தித்தபோது, "வீட்டில் இருந்தா மாமிக்குப் பயம். றோட்டில நிண்டா ஆமிக்குப் பயம். இப்ப கடக்கரைக்குப் போனா சுனாமிக்குப் பயம். கடைசியா ஆறுதல் கிடைக்கும் எண்டு ஆலயத்துக்கும் போனா அங்க சாமியாருக்குப் பயம்" என்று சுவாகரசியமாகச் சொன்னார். "அருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்" என்று கிராமிய நடையில் கூறுவார்கள். பயந்தவனுடைய மனநிலையும் அப்படித்தான்!.. பயந்தவனுடைய கண்ணுக்கு சம்மனசுகூட பூதமாகத்தான் தோன்றும்.

ஒரு ஞானியின் முன் சுண்டெலி ஒன்று வந்து நின்றது. "உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என ஞானி கேட்டபோது "பூனையைப் பார்க்கிற போதெல்லாம் பயமாக இருக்கிறது என்னைப் பூனையாக மாற்றினீர்கள் என்றால் உங்களுக்குப் புண்ணியம் கிடைக்கும்" என்றது.


சுண்டெலி விரும்பியபடியே அது பூனையானது. சில நாட்களின் பின்னர் பூனையான சுண்டெலி வந்து, "நாய் என்னை விடுகிற பாடில்லை. ஆகவே, என்னை நாயாக மாற்றினால், உங்களுக்குக் கோடி புண்ணியம் கிடைக்கும்" என்றது.

ஞானி, பூனையை நாயாக மாற்றினார். இன்னும் சில நாட்களின் கழித்து நாய் வந்து ஞானியின் முன் நின்று, "புலி என்னை வாழவிடுகிறதில்லை. என்னைப் புலியாக மாற்றுங்கள்" என்று மன்றாடியது. அதுவும் நிறைவேறியது. மேலும் சில நாட்கள் செல்ல, "வேடன் என்னை விட்டபாடில்லை. என்னை வேடனாக ஆக்குங்கள்" எனப் புலி வேண்டியது. புலி வேண்டியவாறே, அது வேடனானது. மேலும் சில வாரங்கள் உருண்டோடின. வேடன் ஞானி முன் தோன்றி, "மனிதர்களைப் பார்க்க பயமாக இருக்கிறது. தயைகூர்ந்து, என்னை மனிதனாக... என்று சொல்லி முடிப்பதற்குள்... ஞானி குறுக்கிட்டு, "ஏய் சுண்டெலியே! நீ எதுவாக மாறினாலென்ன?.. உனக்கு சுண்டெலியின் இதயம்தான் இருக்கிறது. நீ சுண்டெலியாக இருக்கத்தான் தகுதியுடையவன்!...." எனக் கூறி, சுண்டெலியை அனுப்பினார். பயத்தைப்பற்றி யோகானந்த பரமஹம்சர் கூறிய கதை இது. பயம் வர படபடப்பு வருகிறது. படபடப்பு வர உள்ளத்தில் பதட்டம் ஏற்படுகிறது. பதட்டம் ஏற்பட ஒன்றையுமே செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

பயப்படும்போது, உடலும், உள்ளமும், ஆன்மாவும் பலவீனப்படுகிறது. பலவீனமாய் இருக்கும்போது காரியங்களை சாதிக்க முடியாமல் போகிறது. அப்படியே, பயத்தோடு சாதிக்க முயற்சித்தாலும் முடிவில் தோல்வியே ஏற்படுகிறது. ஆக பயத்தின் மாற்று மருந்து நம்பிக்கை ஆகும். பயம் நஞ்சுபோல உடலில் உள்ளத்தில் பரவுகிறது என்றால், நம்பிக்கை 'அன்ரி பயற்றிக்' ஆக (Antibiotic) உள்ளத்தில் சுவறும்போதுதான், பயத்தைப் போக்கி, பயனுள்ள காரியங்களைச் செய்ய முடியும்.

"அஞ்சாதீர்கள்... நான் உங்களோடு இருக்கின்றேன்." (எசா 41:10) என்ற இறைவார்த்தைகள் நம்பிக்கை ஊட்டுகின்றன. காரணம், கடவுளே நம்மோடு இருக்கும்போது, எதற்கு பயப்பட வேண்டும்? யாருக்குப் பயப்பட வேண்டும்? என்ற உணர்வு பிறக்கிறது. இயேசு பல சந்தர்ப்பங்களில், "அஞ்சாதீர்கள் ..... பயப்படாதீர்கள்" (மத்.10:26-28, லூக்.12:2-7, மத். 28:10) என சீடர்களுக்கு நம்பிக்கை ஊட்டுவதைப் பார்க்கிறோம். பயத்தால் உனதாற்றல் பாழாய்ப்போம். துணிந்தால் உனதாற்றல் துளிர்க்கும், பூக்கும், காய்க்கும், கனிதரும். என்ன, இனியும் பயப்படப் போகிறீர்களா?

# திருமணத்திற்கு முன்....



உலகமெல்லாம் அன்பிற்கு ஒரு விழா எடுக்கின்றனர் என்றால் அது பெப்ரவரி 14 காதலர் தினவிழாதான். காதல் என்பது வெறும் உடல் கவர்ச்சி என்றே நம்பத் தொடங்கிவிட்டது இன்றைய இளைய சமுதாயம். பட்டணம் தொடங்கி, பட்டிதொட்டி எங்கும் பரவி கொடிகட்டிப் பறக்கும் நிகழ்ச்சி 'காதல்' என்றால் அது மிகையாகாது.

காதல் என்பது 'குற்றம்' என்ற கண்ணோட்டம் மாறி, காதல் என்பது 'இயற்கை' என்ற நேர்மறையான கண்ணோட்டம் உருவாகியுள்ளது. கண்ணில் தொடங்கி, இதயத்தில் இடம்பிடித்து, உணர்வுடன் கலந்து உயிரானதுதான் காதல் என்கின்றனர். காதல் என்பது இயல்பானதும், இயற்கையானதும் என்கின்றனர் உளவியலாளர்கள்.

மலரைவிட மென்மையானது என்றாலும், மலையையும் தகர்க்கும் ஆற்றல் மிக்கது காதல். காதல் பார்ப்பதை இரசிக்கவும், நலம் விரும்பவும், பாராட்டவும் மனிதனைத் தூண்டும் குணம் எனலாம். "அன்புதான் மனித வாழ்வின் அத்தனம்" என்கிறார் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் தனது முதல் சுற்றுமடல் *அன்பே கடவுளில்.*

தமிழ் இலக்கியங்களில் தன் கண்ணுக்குள் இருக்கும் காதலனுக்கு எரியக் கூடாது என்று காதலி கண்ணுக்கு மையிடாத பாசக் காதலும், சூடான பாலைக் குடித்தால் இதயத்திலுள்ள காதலனைச் சுட்டுவிடும் என்று சூடான பாலைக் குடிக்க மறுக்கும் காதலியின் கற்பனைக் காதலும் காணக்கிடைக்கின்றன.

"உண்மையான காதல், உள்ளம் கலந்து புலன், மனம், மறை, மனம் தாண்டி, ஒளி மனத்திற்குள் ஒருவனைச் செலுத்துவது" என்கிறார் முனைவர் பாக்கியா. விழியில் விழுந்து, இதயம் நுழைந்து, உயிரில் கலந்து பின்வரும் தலைமுறைகளுக்கு உரமாகி நிற்பதுதான் உண்மைக் காதல். இச்சைகளைத் தீர்த்துக் கொள்ளும் கொச்சையான நிலையல்ல காதல்.

பள்ளிப் பருவத்தில், பருவத்தின் தொடக்கத்தில் உருவாகும் உணர்வுக் கிளர்ச்சிகளுக்கு ஆட்பட்டு, உடல் சார்ந்த ஈர்ப்பை முதிர்ச்சிக்கு உள்ளாக்கி ஆளுமை சக்தியை அடைய முற்படாமல், அறியாப் பருவத்தில் ஏற்படும் அனைத்தையும் அறியத் துடிக்கும் வேகத்தில், மாணவ மாணவியர்கள் பள்ளிக்கு *பிரியாவிடை* சொல்லிவிட்டு, படிப்பில் கவனமில்லாமல், எதிர்காலத்தைத் தொலைக்கின்றோம் என்று உணராமல், ஊர் சுற்றுவதை காதல் என்று சொன்னால் காறி உமிழத்தான் தோன்றுகிறது.

ஆனால், இப்பருவப்பட்ட பள்ளிப் பருவக் காதலுக்கும், காலித்தனங்களுக்கும் தூபம் போடுவதுபோல் திரைப்படங்களும், ரி. வி. நிகழ்ச்சிகளும், பத்திரிகை ஊடகங்களும் செயற்படுவதுதான் வேதனையான விசயமாகும். உண்மைக் காதல் மறைக்கப்பட்டு, கவர்ச்சிக் காதல் ஊக்குவிக்கப்படுகிறது. சுதந்திரம் என்ற பெயரில் மீறுதல்கள் நடக்கின்றன. மீறுதல்கள் என்பது வேறு சுதந்திரம் என்பது வேறு. 'கற்றலின் கேட்டல் நன்று அதனினும் காணுதல் நன்று' என்பார்கள். இன்று காதல் என்னும் மென்மை பத்திரிகையில் தொடங்கி, வானொலியில் வளர்ந்து, தொலைக்காட்சியில் தொடரும் பாலியல் பண்டம் ஆகிவிட்டது. இந்த ஊடகங்களின் பாலியல் புகுத்தல்கள், பாலியல் மீறல் எண்ணங்களுக்கு இளைய சமுதாயத்தைத் திசை திருப்பி வருகின்றன. இப்படி ஊடகங்கள் ஏற்படுத்தும் மனத் தூண்டுதல்களினால் ஏற்படும் மீறல்களின் விளைவுகள் சமுதாயத்தில் பல தலைமுறைகளுக்கும் கருவமைப்புப் பதிவின் வழியாய் உருவாகும் குழந்தைகளால் மீறுதல்கள் என்பது சர்வ சாதாரணம் என்னும் சூழ்நிலை உருவாகத் தொடங்குகின்றது என்றும் உளவியலாளர்கள் கூறுகின்றனர்.

உலக மயமாக்கலும், ஆணாதிக்கமும், சாதியமும் கலந்து காதலின் மெய்ப்பொருளைக் கொச்சைப்படுத்திவிட்டன.

உலகமயமாக்கல் காதலர் தினத்தன்று காதலர் வாழ்த்து அட்டைகளையும், ரோஜாக்களையும் எப்படி விற்கலாம், அதிகமாக விலையுயர்ந்த பொருட்களை பரிசாகக் கொடுக்கத் தூண்டலாம் என்று காதலைக் கரு மயமாக்கிவிடுகின்றது. ஆணாதிக்கம், பெண்களை தமது விருப்பம்போல் ஆணுக்கு அடிபணியச் செய்து, பெண்களைச் சிந்திக்கவிடாமல், தங்களது அத்துமீறல்களுக்கு ஆட்படச் செய்துவிடுகிறது. சாதியம் என்ற சாக்கடை காதலின் புனிதம் அறியாது, உயர்ந்த சாதி, உயர்ந்த சாதியைக் காதலிக்கும் பாணியை கட்டிப்பிடித்துக் காப்பாற்றி வருகிறது.

காதல் மானிட வாழ்வை வளப்படுத்த வேண்டியது, மனிதத்தை வளர்த்தெடுக்க வேண்டியது என்பதெல்லாம் சிந்தனையளவில் நின்றுவிடுகிறது. காதல் பணத்தைவிட குணத்தையும், மனதையும் விரும்புவது. அந்தஸ்து, அழகைவிட அறிவையும், ஆளுமையையும் விரும்புவது. உடைமைகளைவிட உள்ளத்தையும், உயிரையும் விரும்புவது.

'அன்பு' என்றால், ***'நன்மை விரும்புதல்"*** என்கிறது கிறிஸ்தவம் அதனால்தான் யோவான் 4:16இல் 'அன்பே கடவுள்' என்று கூறப்பட்டுள்ளது. நன்மை விரும்புதல் என்றால் நாம் விரும்புகிறவர்களுக்கு, விரும்பிய நேரத்தில், விரும்பிய இடத்தில் நன்மை விரும்புவது அல்ல. மாறாக, எல்லோருக்கும், எப்போதும், எங்கும் நன்மை விரும்புவதாகும்.

இறைவனால் மட்டுமே எல்லோருக்கும், எப்போதும், எங்கும் நன்மை விரும்ப முடியும் என்றாலும் உண்மையான காதல் காதலர்களை ஒருவருக்கொருவர் எப்போதும், எங்கும்? நன்மை விரும்பத் தூண்டுகிறது. காதலர்களில் ஒருவரால், மற்றவருக்கு ஆபத்து, பாதிப்பு, அசிங்கம், அவமானம் ஏற்படுகின்றதென்றால் அக்காதல் கவர்ச்சிக் காதலே ஒழிய உண்மைக் காதலாக இருக்க முடியாது.

## திருச்சபை என்ன சொல்கிறது

### திருமணத்திற்கு முன் உறவு? திருச்சபை என்ன சொல்கிறது?

யாரிடத்தில் குறை இல்லை? தோலில்லாத வாழைப் பழமோ, தோல் இல்லாத நிலக்கடலையோ, உமி இல்லாத நெல்லோ உலகில் இல்லை. வாழும் மனிதர்கள் நாம் வானதூதர்கள் அல்ல, மனிதர்களே! ஒருவனை அல்லது ஒருத்தியை அன்பு செய்வது என்பது அவரது குறைகளோடுதான் என்பதை மறந்துவிடக் கூடாது. குறையுள்ள மனிதர்கள் நாம் இணைந்து பழகும்போது எச்சரிக்கையாக இருக்க வேண்டாமா? காதல் வயப்படும் காதலர்கள் தங்கள் அன்பை வெளிப்படுத்த உரையாடலில் தொடங்கி, உடலுறவுவரை சென்றுவிடுகின்றனர். உடலுறவு என்ற வினை திருமணமான தம்பதியர்கள் தங்கள் அன்பை பகிர்ந்து, அதன் பயனாக மக்களைப் பெற்றெடுக்கும் நோக்குடன் ஒருவருக்கு ஒருவர் தங்களையே தற்கையளிக்கும் செயலாகும். திருமணத்திற்கு முன் உடலுறவு பற்றி திருச்சபையின் அறநெறி ஆன்மீகம் என்ன சொல்கிறது என்று பார்ப்பது நல்லது.

கத்தோலிக்க அறநெறியின்படி, உடலுறவு என்பது திருமணத்தில் இணைந்த கணவன் - மனைவியரிடையே மட்டுமே நிகழ வேண்டிய மனிதச் செயலாகும். காரணம், உடலுறவு நிரந்தரமான திருமணக் கையளிப்பின் அடையாளம். காதலர்களோ அல்லது இனக் கவர்ச்சிக்கு ஆளாகும் இருபாலாரும் திருமணம் என்ற உடன்படிக்கையில் தங்களது நிரந்தரத் தற்கையளிப்பை உறுதி செய்யாததால், அவர்கள் உடலுறவில் ஈடுபடுவது தவறு மட்டுமல்ல, பெரும் பாவமுமாகும். தற்கையளிப்பை உறுதி செய்யாத திருமணத்திற்கு முன்பும், வெளியிலும் உடலுறவுக்கு அர்த்தமில்லை. நிரந்தரமான தங்களது தற்கையளிப்பைக் காட்டும் உடலுறவில் கணவனும், மனைவியும் இணைகின்றனர், ஒன்றாகின்றனர். இந்த ஒன்றிணைதலின் பயனாக பிள்ளைப்பேற்றினை அவர்கள் அடைகின்றனர். எனவே, அன்பில் இணைதலும், பிள்ளைப் பேறும் உடலுறவின் இன்றியமையாத நோக்கங்களாகும். இந்த இரண்டு நோக்கங்களும் காதலர்கள் மற்றும், திருமணமாகாதவர்களுக்கிடையில் உடலுறவு நிகழும்போது நிரந்தரக் கையளிப்பு உறுதி செய்யப்படாததால், திருமணத்திற்கு வெளியில் உடலுறவு ஒரு தவறாகவும், பாவமாகவும் கருதப்படுகிறது.

உண்மையான காதல், வாழ்வின் எதார்த்தங்கள்மீது கட்டப்பட்டால் மட்டுமே அந்த அன்பு உண்மைக் காதலாகும். முழு உடலோடும், முழு உள்ளத்தோடும், முழு ஆன்மாவோடும், முழு உணர்வோடும் ஒருவரைக் காதலிக்க வேண்டும். காதலில் ஒருவர் மற்றவரை ஜீவனாகப் பார்க்க வேண்டும். எல்லா உணர்வுகளும் உருவாகுமிடம் மூளை. இதயமல்ல. இதயத்தை ஆட்சி செய்வதும், மூளையே என்றால் காதல் உணர்வுகளை உற்பத்தி செய்வது மூளைதான். உடல், உள்ள, ஆன்ம வளர்ச்சி முழுமை பெற்றவர்களே காதலிக்க தகுதி படைத்தவர்கள். இம்முழு வளர்ச்சி மாணவ மாணவியருக்கு இல்லை. எனவே, பள்ளி மாணவர்களுக்கு உருவாவது உண்மைக் காதல் அல்ல. கவர்ச்சிக் காதலே. இது காமத்திற்கே இட்டுச் செல்லும். உடல் தகுதியைவிட உள்ளம், ஆன்மீகம் ஆகிய முதிர்ச்சி உண்மைக் காதலுக்கு இட்டுச் செல்லும். காதலிப்பது பாவமில்லை. காதலிக்கும் போது பாவம் செய்கின்றோமா என்பதுதான் முக்கியம்.

---

# இளைஞர் பொழிவு

## வெற்றியா? அதிர்ஷ்டமா? தலை எழுத்தா? வெறியா?

### சிந்தனைத் தொடர் – 16

**Fr. வின்னி யோசப் எழுதுகிறார்**

#### புத்தியுள்ள வெற்றி

"புத்தியுள்ள மனிதரெல்லாம் வெற்றி காண்பதில்லை, வெற்றி பெற்ற மனிதரெல்லாம் புத்திசாலி இல்லை" பழைய சினிமாப் பாட்டின் வரிகள் இவை. சும்மா கேட்டுவிட்டோ, இராகத்தோடு முணுமுணுத்துவிட்டோ இதை மறந்துவிடாமல் "வெற்றி" பற்றிச் சிந்திக்கும்போது, "புத்தி" பற்றியும் சிந்திக்க வேண்டும்.

#### "வெற்றி" என்றால் என்ன?

ஒரு மனிதனோ மனுஷியோ தனக்கென்று ஒரு இலட்சியத்தை வகுத்துக்கொண்டு, அதைக் குறிப்பிட்ட காலத்தில் நிறைவேற்றிவிட்டால், அது வெற்றியா? மற்றவரைவிட நான் மிகுந்த முயற்சி செய்தோ, முண்டிக்கொண்டோ முன்னேறி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டால் அது வெற்றியா? ஆயிரக் கணக்கான பார்வையாளர் மத்தியில் பாராட்டப்பட்டு விண்ணதிரக் கைதட்டுப் பெறுவது வெற்றியா? சமுதாயத்தில் பல பேருக்கு மத்தியில் நான் மட்டும் சிறப்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசு மேல் பரிசைத் தட்டிச்செல்வது வெற்றியா? பத்துப் பேர் பாராட்டாவிட்டாலும், "என் கடமைகளை நான் மனசுக்கு நிறைவாகச் செய்துவிட்டேன்" என்னும் ஆழ்ந்த சந்தோஷத்தை அனுபவிப்பது வெற்றியா?

இவ்வாறு வெற்றியைப்பற்றிப் புத்திசாலியாகச் சிந்திக்கும் முன், அதைப்பற்றிய இரு முகங்களையும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். 1. வெற்றிக்கு முன் 2. வெற்றிக்குப் பின் நமக்குள் என்னதான் நடக்கிறது என்னும் நிதானம் நமக்குத் தேவை.

#### வெற்றிக்கு முன் :

அதிஸ்ரலாபச் சீட்டுக் குலுக்கலிலோ, குதிரை பந்தயச் சூதாட்டப் போட்டியிலோ ஒருவர் வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டால், அதை வெறும் "வாய்ப்பு" என்றுதான் கூறமுடியும். ஒலிம்பிக் போட்டியிலோ, மாணவர்களுக்கான தேர்வுகளிலோ ஒருவர் வெற்றிப் பதக்கம் பெற்றால் அதை "முயற்சி" என்றுதான் கூற முடியும். வியாபாரத்தில் கள்ளத்தனம் செய்தோ, கலப்படம் செய்தோ கொழுத்த இலாபம் ஈட்டும் வணிகரின் வெற்றியைக் "கொள்ளை" என்றே சொல்லலாம்.

மேற்கண்ட "கொள்ளை", "வாய்ப்பு", "முயற்சி" போன்ற அனைத்திற்கும் ஒரே மாதிரியாக "வெற்றி" என்று பெயரிடுவது அபத்தமானது மட்டுமல்ல, ஆபத்தானதுமாகும்.

உழைக்காமலேயே அதிஸ்ரலாபச் சீட்டில் பணம் குவிப்பதையும், வாடிக்கையாளர்களிடம் கொள்ளையடிப்பதையும் "வெற்றி" என்று சொன்னால் அது "முயற்சி" என்பதைக் கொச்சைப்படுத்துவதாகும். இலங்கை, இந்தியா போன்ற நமது தெற்காசிய நாடுகளில், ஒருவர் தன் வாழ்வில் வெற்றி பெறுவதையோ, தோல்வியடைவதையோ பார்த்துவிட்டு, "அவரவர் தலைவிதிடா" என்று சொல்லுவதைக் கேட்டிருக்கிறோம். "தலைவிதி" என்பது சோம்பேறிகள் சுகமாக உட்கார்ந்து சாப்பிடவென்றே கண்டுபிடித்த சுலபமான தத்துவம்.

வெற்றியை அதிர்ஷ்டம் என்றும், தோல்வியை துரதிஷ்டம் என்றும் கூறுவது கையாலாகாதவர்களுக்குக் கைவந்த கலை. "சுலோமோஷன்" ஆமை, "மின்னல்" வேக முயலை வெற்றி கொண்டது எப்படி? கள்ளத்தனம் பண்ணியதாலோ, தலைவிதி மற்றும் அதிர்ஷடம் என்பதாலோ அல்ல. ஓட்டப்பந்தயக் களத்தில் ஒவ்வொரு அங்குலத்தையும் விடாமுயற்சியுடன் மூச்சைப்பிடித்துக் கொண்டு முரட்டுத் தீர்மானத்துடன் ஓடிக்கொண்டே இருந்ததால் தான் பாதி தூரம் பரபரப்பாக ஓடிய பிறகு, தனக்குப் பின் தூங்கிப் போன ஆமையை இளக்காரமாகப் பார்த்து, "தூங்கிக் கொண்டே ஜெயிப்பேன்" என்று கர்வம் பிடித்து, குறட்டைவிட்டுச் சாய்ந்துவிட்ட முயல் போட்டியில் சரிந்து விழுந்துவிட்டது.

*"நல்ல பொழுதையெல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள், நாட்டை கெடுத்ததுடன் தானும் கெட்டார்"* – என்றும், *"அல்லும் பகலும் வெறுங் கல்லாய் இருந்துவிட்டு, அதிர்ஷ்டம் இல்லையென்று அலட்டிக்கொண்டார். உழைத்த மனிதரெல்லாம் பிழைத்துக் கொண்டார் அங்கே குறட்டை விட்டோரெல்லாம் கோட்டை விட்டார்"* இவ்வாறு தூங்கி வழிந்துவிட்டு, வாய்ப்பை நழுவவிட்டு, படிக்க வேண்டிய நேரத்தில் படுபந்தாவாக பான்பராக் போட்டுவிட்டு, படம் பார்த்துக்கொண்டு இருப்பவர் பரீட்சையில் பாஸாக முடியுமா? ஏன்டா Fail ஆகிவிட்டே? என்று கேட்டால், *"பரீட்சையின் கேள்வித்தாள் சரியில்லை. ரீச்சர் சரியாகத் திருத்தவில்லை. அப்பா மோசம், அம்மா சரியில்லை."* ஆடத் தெரியாத நாட்டியக்காரி மேடை சரியில்லை என்று சாக்குச் சொன்னாளாம். முயற்சி செய்து படித்து முன்னேற விரும்பாத ஒருவன், தன்னைத் தவிர, உலகத்திலுள்ள எல்லாவற்றையும் குற்றம் சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்ப்பான். அப்படித்தான் பொறுப்பிலிருந்து, விலாங்கு மீன்போல நழுவிக்கொண்டு செல்பவன் ஒருக்காலும் வாழ்க்கையில் வெற்றி பெற முடியாது.

#### வெற்றிக்குப் பின் :



ஓட்டப் பந்தயத்தில் தங்கப் பதக்கமோ, தேர்வில் முதல் இடமோ, கிடைத்து வெற்றி பெற்ற பின் என்ன நடக்கிறது? என்னைப்போல வீரனோ, வீராங்கனையோ, அறிவாளியோ இந்த உலகத்தில் இல்லை என்னும் மமதையும், கர்வமும் வந்து விடுகிறது. அதாவது வெற்றி என்பது வெறியாக மாறிவிடுகிறது.

இந்த வெற்றி என்னும் போதை வெறி, தலைக்கு ஏறும்போது, தனக்குக் கீழ் இருக்கிறவர்களைக் குறைத்து மதிப்பிட்டு, அவர்களைக் கேவலமாகப் பேசி இழிவாக இறுக்கித் தள்ளும் ஆசை ஏற்பட்டுவிடுகிறது.

ஒரு இலட்சியத்தில் வெற்றி பெற்றபின், அடுத்த இலட்சியத்தை உருவாக்கி வெற்றி பெற உழைப்பதே புத்திசாலித்தனமாகும். அதைவிட்டு, ஏற்கனவே பெற்ற வெற்றியில் மட்டும் கர்வத்துடன் மூழ்கிப்போய் அந்த முயலைப்போலத் தூங்கிவிட்டால், கடவுள் நமக்குக் கொடுத்த எல்லாச் சக்திகளும் முடங்கிப் போய்விடும். ஒவ்வொரு வெற்றிக்குப் பிறகும் நமது முயற்சிகள் கூடவேண்டுமே தவிர, சூம்பிச் சுருங்கிவிட அனுமதிப்பது தற்கொலைக்குச் சமனாகும்.

"நான் மட்டும் வெற்றி பெற்றால் போதும். ஊரான் எக்கேடு கெட்டுப் போனால் என்ன?" இந்த மனநிலை இருக்கும்வரை வெற்றி பெற்றவர் புத்திசாலியாகவோ, மனிதராகவோ வாழ முடியாது!. "மற்றவரெல்லாம் அழிந்தால் என்ன?" என்னும் மனப்பான்மையுடன் நாம் பெற முயலும் வெற்றி உண்மையிலேயே நம்மை மனிதராக மாற்றுமா? இன்னொரு உயிரை தள்ளி, வீழ்த்தி, ஏறி மிதிக்கும் போட்டி மனப்பான்மையினால் எட்டிப் பிடிக்கும் வெற்றியை, வெறி என்றுதான் சொல்ல முடியும்.

மற்ற மனிதர்களுக்கும் நம்மைப் போல உணர்வு இருக்கிறது. அதைப் புரிந்துகொண்டு அவர்களுக்கும் நம்மைப் போன்ற வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டியது ஒவ்வொரு மனிதரின் கடமையாகும். அரசு வழங்கும் "ஸ்கொலர்ஷிப்பில்" படித்து, வெற்றிகரமாக டொக்டராகும் ஒருவர் ஏழை, எளிய நோயாளிகளைப் பார்ப்பதே அசிங்கம் என்று நினைத்தால் அவரது வெற்றியை, ஒரு வெற்றி என்று கொண்டாட முடியாது. மனித நேயத்தின் பரீட்சையில் அவர் தோற்றுப் போய்விட்ட பரிதாபமானவர் என்றே சொல்லலாம்.

சுருங்கக் கூறின் : வெற்றி என்பது முழு முயற்சியோடும், முனைப்போடும் தன் உடல், பொருள், ஆவியை அர்ப்பணித்து ஒவ்வொருவரும் தத்தம் கடமையை நிறைவேற்றுவதாகும்.

# மாணவர் பக்கம்



## க.பொ.த. சாதாரணதர மாணவர் பரீட்சை வழிகாட்டி - 2006

## கத்தோலிக்க திருமறை

**இவ்வினாக்களுக்கான விடைகள் தரப்படவில்லை. மாணவர்கள் தாமே விடைகளை தேடிக் கண்டுபிடிக்க வேண்டும்.**

*தொகுப்பு: திருமதி பயஸ் ரதி பீரிஸ்,*
*ஆசிரிய ஆலோசகர்,*
*வலயக் கல்விப் பணிமனை, மன்னார்.*

### பாடங்கள் அலகு 12, 13, 14.

### 1. மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க?

1. இயேசு தமது பகிரங்க வாழ்வை ஆரம்பித்த இடம் :
அ) சமாரியா ஆ) யூதேயா இ) கலிலேயா ஈ) இதுமேயா.

2. இயேசு நாசரேத்தூர் செபக்கூடத்தில் வாசித்த ஏட்டுச்சுருள் எந்த இறைவாக்கினரால் எழுதப்பட்டது?
அ) ஏசாயா ஆ) எரேமியா
இ) எசேக்கியேல் ஈ) ஆமோஸ்.

3. தளராத விசுவாசத்துடன் செபிக்க வேண்டும் என்பதைக் கூறி நிற்கும் உவமை பின்வருவனவற்றுள் ………. ஆகும்.
அ) காணாமற் போன ஆடு ஆ) விதைப்பவன் உவமை
இ) நேர்மையற்ற நடுவனும் கைம்பெண்ணும் உவமை.
ஈ) அறிவற்ற செல்வனின் உவமை.

4. இறையரசின் ஊற்றுக்களாக இயேசு எமக்குத் தந்தவை :
அ) அருட்சாதனங்கள் ஆ) திருச்செபமாலை
இ) திருமணித்தியாலம் ஈ) திருச்சிலுவைப்பாதை.

5. “அவள் செய்த பாவங்கள் பல மன்னிக்கப்பட்டன. அவள் காட்டிய பேரன்பே அதற்குச் சான்று” என இயேசு யாரைக் குறித்துக் கூறினார்?
அ). மரியாள் ஆ) சமாரியப் பெண்
இ) கூனிப் பெண் ஈ) பாவிப் பெண்.

6. இறையரசு மக்கள் மத்தியில் வந்துவிட்டது என்பதற்கு அடையாளமாக இயேசு செய்த புதுமை………. குணமாக்கியது
அ) நீர்க்கோவை நோயாளியை ஆ) சூம்பிய கையுள்ளவனை
இ) முடக்குவாதக்காரன் ஈ) கூனிப்பெண்.

7. தேவநற்கருணையின் முன்னடையாளமாக இயேசு செய்த புதுமை?
அ) அப்பங்களை பலுகச் செய்தது ஆ) புயலை அடக்கியது
இ) அசுத்த ஆவியை விரட்டியது ஈ) லாசரை உயிர்ப்பித்தது.

8.மேலான இறைவாக்கினர் எனக் கருதப்படுபவர்?
அ) திருமுழுக்கு யோவான் ஆ) மோசே இ) மீக்கா ஈ) ஓசே.

9. இறைபராமரிப்பின் உயிர்நாடி,
அ) விசுவாசம் ஆ) அன்பு இ) நம்பிக்கை ஈ) இரக்கம்

10. இறைவார்த்தையைக் கேட்டும் கவலை, செல்வம், வாழ்வில் வரும் இன்பங்கள் போன்றவற்றால் நெருக்கப்பட்டு முதிர்ச்சியடையாதிருப்போரைக் குறிப்பது :
அ) வழியோரத்தில் விழுந்த விதை
ஆ) கற்பாறையில் விழுந்த விதை
இ) நல்ல நிலத்தில் விழுந்த விதை
ஈ) முட்செடிகளுள் விழுந்த விதை.

### 2. இறைவார்த்தையைப் பூர்த்தி செய்க?

1. என்னைப் பின்பற்ற விரும்பும் எவரும்………………. தன் சிலுவையை நாள்தோறும் தூக்கிக்கொண்டு என்னைப் பின்பற்றட்டும்.

2. கலப்பையில் கைவைத்தபின் திரும்பிப் பார்ப்பவர் எவரும் ………………… உட்பட தகுதியுள்ளவர் அல்லர்.

3. அறுவடை மிகுதி வேலையாட்களோ குறைவு. ஆகையால் தமது அறுவடைக்குத் ……………… …………….. அனுப்பும்படி அறுவடையின் உரிமையாளரிடம் மன்றாடுங்க ள்.

4. அமைதியை ஏற்படுத்துவோர் பேறுபெற்றோர். ஏனெனில் ……………….. …………………… என அழைக்கப்படுவர்.

5. புறப்பட்டுப் போங்கள். ஓநாய்களிடையே ………………….. அனுப்புவதுபோல் உங்களை நான் அனுப்புகின்றேன்.

6. உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் …………………… உள்ளவராக இருங்கள்.

7. ஆண்டவருடைய ஆவி என்மேலே உளது. ஏனெனில் அவர் எனக்கு …………………… செய்துள்ளார்.

8. பிறர் குற்றவாளிகள் எனத் ……………………. அப்போதுதான் நீங்களும் தீர்ப்புக்குள்ளாகமாட்டீர்கள்.

9. இறையாட்சியை …………………… போல் ஏற்றுக் கொள்ளாதோர் அதற்கு உட்படமாட்டார்கள்.

10. கனிவுடையோர் பேறுபெற்றோர். ஏனெனில் அவர்கள் ……………………….. உரிமையாக்கிக் கொள்வர்.

### 3. சுருக்கமான விடை தருக?

1. இறையரசு என்றால் என்ன?
2. இயேசு சீடர்களுக்குக் கொடுத்த அதிகாரங்கள் எவை?
3. நற்செய்தியைப் பரப்புவதற்கான 2 நோக்கங்கள் தருக?
4. இயேசு இறையரசைப் பரப்பக் கையாண்ட வழிமுறைகள் எவை?
5. உவமை என்றால் என்ன?
6. இயேசு தமது போதனைகளை மக்களுக்கு விளக்குவதற்கு உபயோகித்த துணைக் கருவிகள் எவை?
7. செல்வந்தனும் - இலாசரும் என்ற உவமை மூலம் இயேசு வெளிப்படுத்தும் படிப்பினை என்ன?
8. தாவீது அரசனின் குற்றத்தைப் பயமின்றிச் சுட்டிக் காட்டிய இறைவாக்கினர் யார்?
9. தூதுரைப் பணியின் மூன்று அம்சங்கள் எவை?
10. இயேசு சீடருக்களித்த மறைத்தூதுரைப் பணியை நடத்திச் செல்வதற்கான வலுமிக்க ஊடகம் எது?

### 4. பின்வருவனவற்றிற்கு விடை எழுதுக?

1. இறையரசைப்பற்றிய உவமைகள் 5 எழுதி, அதில் ஒன்றைப்பற்றி விளக்குக? (பக்கம் 113)

2. திருமுழுக்கின் மூலம் கிறிஸ்தவ மாணவனாக / மாணவியாக அழைக்கப்பட்ட நீர் கிறிஸ்துவின் தூதுரைப்பணிக்கு எவ்வாறு பங்களிப்பீர்? (பக்கம் 121)

3. யூத மரபின்படி பெண்கள் ஆண்களுக்கு சரிநிகராக ஏற்கப்படவில்லை என்பதற்கு 3 உதாரணங்கள் தருக? (பக்கம் 104)

4. இன்றைய சமுதாயத்தின் நிலைமைகளுக்கு பின்வரும் புதுமைகள் விடுக்கும் சவால்களை அட்டவணைப்படுத்துக? (பக்கம் 131)
(அ) உடல் ஊனமுற்ற பெண் ஓய்வு நாளில் குணமடைதல் (லூக். 13:10-17)
(ஆ) நீர்க்கோவை நோயாளி குணமடைதல் (லூக். 14:1-6)
(இ) பார்வையற்ற ஒருவர் பார்வை பெறுதல் (லூக். 18:35-43)

5. இறைவாக்கினர் என அழைக்கப்படுபவர்கள் யார்? 10 வரிகளில் விளக்குக? (பக்கம் 123)

6. திருமுழுக்கின்போது ஆன்மீக ரீதியில் புதுவாழ்வுக்கு உட்படுதல் தொடர்பாக இயேசு முன்வைக்கும் முன்னடையாளங்கள் எவை? (பக்கம் 142)

7. உமது விசுவாச வாழ்வை வளர்க்க நீர் மேற்கொள்ளும் செயற்பாடுகள்பற்றி விளக்குக, (பக்கம் 141)

8. இயேசு மோசேயின் சட்டதிட்டங்களுக்கு ஏற்ப சமயச் சடங்குகளில் ஈடுபட்டமைக்கு 2 உதாரணங்கள் தருக? (பக்.141)

9. ஒப்புரவு என்னும் திருவருட்சாதனம் பற்றி உமது மனப்பாங்கு யாது? இதற்கு இயேசு முன்வைக்கும் அடையாளம் யாது? (பக்கம் 144)

10. இறைவாக்கினர், குலமுதுவர்களின் தூதுரைப்பணியில் உள்ளடங்கிய விடயங்களைத் தருக? (பக்கம் 134)

11. இயேசுவைச் சந்தித்ததனால் சக்கேயுவின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்கள் எவை? (பக்கம் 132)

12. இயேசுக்கிறிஸ்துவின் போதனை, முன்மாதிரிகை மூலம் உம்மால் இச்சமுதாயத்தில் நடைமுறைப்படுத்தக்கூடிய இரக்கச் செயற்பாடுகள் 2 தருக? (பக்கம் 131)

13. இறையரசின் வருகைக்கு எப்போதும் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்பதற்கு இயேசு கூறிய உவமையை லூக்கா நற்செய்தியில் இருந்து விளக்குக? (பக்கம் 118)

14. இயேசு கூறிய சமவெளிப் பொழிவில் இறையரசுக்குப் பொருத்தமானவர்கள், பொருத்தமற்றவர்களைத் தருக? (பக்கம் 108)

15. உண்மையான சீடத்துவம் பற்றி திருவிவிலியத்தில் புனித லூக்கா குறிப்பிட்டவற்றில் ஐந்து எழுதுக? (பக்கம் 106)

16. நாசரேத்தூர் செபக்கூடத்தில் இயேசு ஏட்டுச்சுருளை வாசித்த பின்பு, “நீங்கள் கேட்ட இந்த மறைநூல் வாக்கு இன்று நிறைவேறிற்று” எனக் கூறியதால், யூதர்களில் ஏற்பட்ட பலவிதமான மனநிலைகள் எவை? (பக்கம் 102)

17. அன்று இயேசு பெண்களுக்கு முதலிடம் கொடுத்த சந்தர்ப்பங்கள் 2 தருக? (பக்கம் 104)

18. இயேசு தாம் பணிக்கு அனுப்பி வைத்த சீடர்களுக்கு அளித்த விசேட போதனைகளையும், அதன் விளக்கங்களையும் அட்டவணைப்படுத்துக? (பக்கம் 105)

19. இறையரசை வெற்றிகொள்ளக் கிறிஸ்துவால் முன்வைக்கப்பட்ட சில உயர்ந்த கருத்துக்கள் 2 தருக? (பக்.110)


20. இறையரசின் மட்டில், செல்வந்தர்களுக்குள்ள சவால்கள் எவை? அது இன்றைய சமுதாயத்திற்கு எவ்வாறு பொருந்துகின்றது என்பதை விளக்குக? (பக்கம் 139)

# பரீட்சை எழுதும் மாணவர்களே....

## கவனம் இருந்தால் கவலை இல்லை!

பரீட்சை நாள் குறிக்கப்பட்டு விட்டது. இதுவரை விளையாட்டுத் தனமாக இருந்தவர்கள் தற்போது விழித்துக்கொண்டு முழுக் கவனம் செலுத்துவது நல்ல பெறுபேற்றுடன் வெற்றிபெற உதவும். உங்களது கவனத்தை சிதறச் செய்யும் காரணிகளைக் களைவது நல்லது. குறிப்பாக சத்தம் அதிகமாக உள்ள அறையில் அமர்ந்து படிக்காதீர்கள். நல்ல பெறுபேற்றுடன் வெற்றி பெற்ற மாணவர்கள் “நாங்கள் ரி.வி. பார்ப்பதில்லை, ரேடியோ கேட்பதில்லை. சினிமா பார்ப்பதில்லை” என்று கூறியுள்ளதை நினைவுகூர்ந்து மாணவர்களும், பெற்றோர்களும் அக்கறையுடன் செயல்பட வேண்டும்.

- ➢ பாடப் புத்தகங்களிலிருந்துதான் வினாக்கள் கேட்கப்படுவதால் வழிகாட்டி நூல்களை மட்டுமே நம்பி இருக்க வேண்டாம். பாட நூல்களை முழுமையாகப் படிக்க வேண்டும்.
- ➢ ரியூசனில் படித்தாலும்கூட வீட்டுக்கு வந்து பாடங்களைப் படிக்க நேரம் ஒதுக்குங்கள்.
- ➢ படித்த பாடங்களைத் திரும்பத் திரும்ப மனதில் கொண்டு வருவது நல்லது.
- ➢ சூத்திரங்கள், சமன்பாடுகள், கோட்பாடுகள் போன்றவற்றைக் குறிப்புகளாக எடுத்து வைத்துக்கொண்டு திரும்பத் திரும்ப பார்த்துப் பழகிக்கொள்ளுங்கள்.



- ➢ பரீட்சைக்கு முதல்நாள் நீண்ட நேரம் கண்விழித்துப் படிக்காதீர்கள். மறுநாள் பரீட்சை எழுதும்போது சோர்வு ஏற்படலாம்.
- ➢ பரீட்சை நாளில் பரீட்சை நடைபெறும் இடத்திற்கு உரிய நேரத்தில் சென்று தேவையற்ற பதற்றத்தைத் தடுங்கள்.
- ➢ பரீட்சை அறையில் நுழைந்தவுடன் உங்கள் எண்களைக் கண்டுபிடித்து உங்கள் இருக்கையில் அமருங்கள்.

### மதிப்பெண் கூடுதலாகப் பெற விடைகள் சீரும் செம்மையுமாக இருக்க வேண்டும்.

பரீட்சை எழுதும் மாணவர்கள் பயத்தினாலும், படபடப்பினாலும் சரியான விடை தெரிந்தும் அதை சீராகவும், செம்மையாகவும் எழுத முடியாததால் முழு மதிப்பெண் பெற முடியாமல் போகலாம். சரியான பதில் மட்டுமிருந்தால் போதாது, அதைச் சரியாகவும், செம்மையாகவும் எழுதுவது முக்கியமாகும்.

முதலில் ஒவ்வொரு வினாவுக்கும் விடையெழுதும்போது வினா எண்ணை மறக்காமல் எழுதி சரிபார்த்த பின் விடையெழுதத் தொடங்கவும். வினா எண் குறிக்கப்படாமல் எழுதப்படும் விடைகள் சரியாக இருந்தாலும் மதிப்பெண் வழங்கப்படமாட்டாது. இந்தக் கவனக் குறைவைத் தவிர்த்தாக வேண்டும்.

மேலும் வினாத்தாளில் கேள்விகள் உள்ள வரிசைப்படி விடைகளையும் எழுதுவது நல்லது. எடுத்துக்காட்டாக, ‘பகுதி அ’ கேள்விகளுக்குரிய விடைகளை வரிசையாக எழுதிவிட்டு பிறகு ‘பகுதி ஆ’ கேள்விகளுக்குரிய விடைகளை எழுதுவது திருத்துபவர்களை திருப்திப்படுத்தும் செயலாகும். அதை விடுத்து ‘பகுதி அ’ வினா வரிசையிலிருந்து ஒரு வினாவிற்கு பதில் எழுதியபின் ‘பகுதி ஆ’ வினா வரிசையிலிருந்து ஒரு வினாவிற்குரிய பதிலை மாற்றி மாற்றி எழுதினால் திருத்து பவருக்கு கடினம் ஏற்பட்டு கோபமுண்டாகி அது மதிப்பெண்களில் எதிரொலிக்கக்கூடும்.

ஆகவே, ஒரு வினாவிற்குரிய விடை எழுதி முடித்த பிறகு அதன் கீழே தெளிவாக கோடு போட்டுக்கொண்டு அடுத்த கேள்வியை தொடங்கவும்.

வினா எண்ணைக் குறிப்பது, கோடு போடுவது போன்ற சிறு காரியங்களை கடைசியில் பார்த்துக்கொள்ளலாம் என்று விட்டுவிட்டால் கவனக் குறைவாலோ, நேரமின்மையாலோ மதிப்பெண் முழுமையாக பெற முடியாமல் போகலாம்.

# அன்பின் கங்கை அன்னை தெரேசா

**விறு விறுப்புத் தொடர் 26**

*சொல்லின் செல்வர் அமுது*

## கத்தோலிக்கரின் தேன்கூடு

இரண்டாவது உலகப்போர் நடந்துகொண்டிருந்த வேளையில், அன்னை திரேசாவின் சகோதரர் லாசர் உயிர் தவறியதே ஆச்சரியமானது. அவரைச் சுட்டுத்தள்ளுமாறு, நாட்டைக் கைப்பற்றிய படைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்ட வேளையில் லாசரின் மனைவி மரியா கணவனின் உடலுக்கு மேலே விழுந்து கதறினார். எனவே துவக்கை நீட்டியவன் முதலில் மரியாவையே சுடவேண்டிய நிலையில் தயங்கினான். சில காரணங்களால், பின்னர் மனம் மாறிய எதிரிகள் லாசரை விட்டுப் பிரிந்துவிட்டனர். லாசர் தென் இத்தாலிய நாட்டுக்கு வந்து நாடு கடத்தப்பட்டவராக வாழ்ந்து வந்தார்.

அவருக்கு கத்தோலிக்கரின் ஆதரவில் துன்பந் துடைக்கும் சேவையாளர் துணைபுரிந்து வந்தனர். தாயார் திரானாவைப் பற்றியோ, சகோதரி ஏசன் என்பவரைப் பற்றியோ எந்த விபரமும் அவருக்குத் தெரியவில்லை. அல்பானிய நாட்டின் தலைநகரான தைறானாவில் அவர்கள் வாழ்ந்து வந்தனர். அந்த நாடு 1945ம் ஆண்டு, தொடக்கம் பொதுவுடமையாளரின் ஆட்சியில் வீழ்ந்ததால், அடக்கி ஒடுக்கப்பட்ட சீவியமும், பிறநாடுகளிலிருந்து ஒதுக்கி வைக்கப்பெற்ற வாழ்வுமே அங்கு நிலவியது. லாசர் தன் மனைவி மரியாவுடனும், 10 வயது மகளாருடனும் உரோமுக்குச் சென்று அன்னை திரேசாவைக் கண்டு ஆனந்தமடைந்தார். "பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ" என்பார்.

பழைய நினைவுகள் அங்கே பூத்துச் சொரிந்தன. தாயாரையும், சகோதரியையும் காணாத கவலை இருவரையும் வாட்டாமல் இருக்குமோ?

அன்னை திரேசாவை அவரது அன்புப் பணியாளர் சபையைப் பற்றிய சிந்தனையே மூடிக்கொண்டிருந்தது. மேலிடத்தின் இரண்டு உயர்மட்டப் பிரதிநிதிகளால் சபையைப் பற்றிய விபரங்கள் பரிசீலனை செய்ய வேண்டியிருந்ததை அன்னை அறிவார். சிஸ்ரைன் தேவாலயத்தில் பரிசுத்த பாப்பரசர் 23வது அருளப்பர் அவரை அழைத்து உரையாற்றினார். உள்ளே சென்று பாப்பரசரின் மோதிரத்தை முத்தி செய்யும்போதே இறைவனைத் தனக்குத் துணை செய்யுமாறு கேட்டுக்கொண்டார். பாப்பரசரின் முகத்தை உற்றுப் பார்த்தார். அவரின் அருளெல்லாம் முகத்தில் பாய்ந்தது. உரோமாபுரி கத்தோலிக்க சமயத்தின் தேன்கூடு.

அன்புப் பணியாளர் சபை அடியிடப்பட்டதையிட்டும், செயல்திட்டங்களையிட்டும் பாப்பரசரின் உதவியாளர்கள் ஏராளமான கேள்விகளைக் கேட்டனர். முறையான வருவாய் வரும் வாய்க்கால்கள் இல்லாமல், ஏழைகளிலும் ஏழைகளுக்கு பணிபுரியும் சக்தியைப்பற்றிக் கிளறிக் கிளறிக் கேட்டார்கள். அன்னை திரேசா தாங்கள் கடவுளில் மாத்திரம் நம்பிக்கை கொண்டிருப்பதாயும், அதனால் ஒரு சந்தர்ப்பத்திலாவது, ஏமாற்றம் அடையவில்லை என்றும் தெளிவாக்கினார். கன்னியர்களான உதவியாளர்களும் மிக எளிமையான சீவியத்தையே கடைப்பிடிப்பதாய் உணர்த்தினார். தங்கள் பணியின் வரலாறுகளைப் பற்றிய விபரத் திரட்டைக் கொடுத்த பின்னர் இந்தியாவுக்குப் பயணமானார். அவ்வேளையில், இந்தியாவிலேயே பணியை விசாலமாக்குவதற்கான செயல்திட்டங்களைப்பற்றி ஆராய்ந்து வந்தார். உரோமாபுரியிலிருந்து முடிவு வரும்வரையில் காத்திருந்தார்.

### கன்னியர் மணி ஒன்று கடவுளுக்குக் காணிக்கை

இராஞ்சியிலும், பட்னாவிலும் பணித்தளங்கள் பூத்தன. அவர்களுடைய சேவையை இரந்து, பல திசைகளிலும் இருந்து கை நீட்டினார்கள். பஞ்சாப்பு, உத்தரப்பிரதேசம், மகாராஷ்டிரம், மத்தியப் பிரதேசம் என்ற மாகாணங்களிலும், அன்புப் பணியாளர் சபையின் தொண்டுகள் வேர்விட்டன. கல்கத்தாவில் சபையினர் பழகிய பண்பு, மனநிலை, கட்டுப்பாடு, சூழ்நிலை என்பன இந்தியா என்ற விரிந்த கண்டத்தில் எந்தத் திசையிலும் புதிய பொறுப்புக்களைச் சுமக்க இலவம் பஞ்சுபோல் இலகுவாக்கின.



1962ல் ஒரு ஆச்சரியமான சம்பவம் நடைபெற்றது. ஆக்ரா எனும் பட்டினத்திலிருந்து ஒரு சகோதரி அன்னை திரேசாவிடம் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டார். அங்கே குழந்தை இல்லம் ஒன்று அமைக்க வேண்டியது மிக அவசியத் தேவையாயிருப்பதால், உடனடியாக, 50,000 ரூபாய் தேவையென்று கேட்டுக்கொண்டார். அன்னையிடமோ பணம் இல்லை. "நான் என்னிடம் காசில்லை என்று ஆக்ராவிற்கு அறிவித்தேன்" திரும்பவும் ஒரு தொலைபேசி அழைப்பு வந்தது. பிலிப்பைன்ஸ் தீவிலிருந்து அந்த அழைப்பு வந்தது. ஒரு பத்திரிகை ஆசிரியர் பேசினார். " எனக்கு மக்சேசே நடுவர்களின் பரிசளிப்பின் ஒரு நிதி கிடைக்க இருக்கின்றது" எனக் கூறினார். "எவ்வளவு?" என்று கேட்டேன். "50,000 ரூபாய்" என்றார். "நான் ஆக்ரா பணியாளர் சபைச் சகோதரியுடன் உடனே தொடர்பு கொண்டேன். 'உமது விருப்பம் நிறைவேற வேண்டுமென இறைவன் விரும்புகிறார்' என்றேன்." இரண்டு ஆண்டுகளால் அன்னையவர்கள் பயிற்சி பெற்ற கன்னியர் மடம் அமைந்த தார்ஜிலிங் என்ற இடத்திலும், திவாந்திரம் என்ற வடக்குக் கரையிலும் யாம்செட்பூர் என்ற பீகாரின் பக்கத்திலுள்ள இடத்திலும் பணிமனைகள் ஆரம்பமாயின.

இந்த மகிழ்ச்சியான வேளையில், ஒரு துன்பமான சேதியை அறிய நேரிட்டது. சகோதரிகள் மற்றோருக்குப் பணிபுரியும் போது, எதிர்பாராத அபாயங்களையும், தியாகத்தையும் சந்திக்க நேரிடுவதுண்டு. சகோதரி லியோனியா தகுதி பெற்ற ஒரு டொக்டர். இந்தியாவிலேயே முதற்தரமாகச் சித்தி பெற்றுத் தங்கப் பதக்கம் பெற்றவர். மத்தியப் பிரதேசத்தில் அமைந்த பணிமனைக்குத் தலைவியாய் நியமிக்கப் பெற்றவர். கல்கத்தாவில் நடைபெறும் கூட்டத்திற்குச் சமூகமளிக்க வந்த வேளையில் இந்தச் சகோதரியிடம் கவலைக்கிடமான வியாதியின் அறிகுறிகள் தோன்றின. காலையில் பல் மினுக்கிய போது, வறண்ட குரைக்கும் சத்தம் கேட்டது. திடீரென வலிப்பும் ஏற்படவே, வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றனர். அங்கே லியோனியாவிற்கு விசர்நாய்க்கடியால் வரும் நோய் வந்து முற்றிவிட்டது என்று தீர்மானித்தார்கள்.

சில மாதங்களுக்கு முன்பு ஒரு குட்டி நாயை, நாய்க் கூட்டத்திலிருந்து காப்பாற்றியபோது, ஒரு நாய் அவரைக் கடித்தது. அதனை அசட்டை செய்துவிட்டார் அந்தக் கன்னியர். 48 மணி நேரத்தில் அவருடைய உயிர் பிரிந்துவிடும் என்று வைத்தியர் கூறினார். சகோதரியின் படுக்கை அருகில் உட்கார்ந்தார் அன்னை. அவருடைய கையைப் பிடித்து தன் நெஞ்சுடன் அணைத்தார். "இயேசுவின் தொண்டு செய்ய நான் உம்மைத் தேர்ந்து எடுத்துக்கொண்டேன். அவரிடம் செல்வதற்கும் உம்மோடிருந்து உமக்கு உதவி புரிவேன்" என்று இரண்டு நாட்கள் உடனிருந்து செப வேண்டுதல்களால் லியோனியா உவகையோடு உலகைப் பிரியுமாறு செய்தார்.

(அன்பின் கங்கை தொடர்ந்து பாயும்)

## உங்களுக்குத் தெரியுமா?
## மறையறிவுப் பகுதி இல.34

சென்ற தைத்திங்கள் எமது மன்னார் மறைமாவட்டம் தனது 25வது வருட நிறைவில் பூரித்து நின்றது நம் எல்லோருக்கும் தெரியும். தை மாத மன்னா இதழும் வெள்ளிவிழாச் சிறப்பு இதழாக வெளிவந்தது. இம்மாதத்துக்கான வினாக்கள் யாவும் அவ்விதழிலிருந்துதான் தொகுக்கப்படுகின்றன.

1. அமலமரித்தியாகிகள் சபையின் ஆன்மீகக் கல்வி மையமாகிய ஞானோதயத்தின் பொறுப்பை அருட்பணி பிரான்சிஸ் டானியேல் பொறுப்பேற்கின்றார். இதற்கு முன் இவர் எங்கு என்ன பணியாற்றினார்?
2. 2005 டிசம்பர் மாதத்தில் ஐந்து கார்மேல் சபை அருட்சகோதரிகள் தமது நித்திய அர்ப்பணத்தைச் செய்தனர். இவர்களில் ஒருவர் கடந்த காலங்களில் JRS பணியாளராக எமது மறைமாவட்டத்தில் பணியாற்றியவர். இவர் யார்?
3. மன்னார் மறைமாவட்ட வெள்ளிவிழாவை முன்னிட்டு 18 பங்குகளில் அருட்பணியாளர் அகஸ்ரின் முண்டேகாட் அவர்களால் சிறப்புப் புதுப்பித்தல் தியானங்கள் நடாத்தப்பட்டன. இவர் எந்தத் தியான இல்லத்தைச் சேர்ந்தவர்?
4. மன்னார் மறைமாவட்டத்தின் முதல் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் எப்போது எங்கு ஆயராகத் திருநிலைப்படுத்தப்பட்டார்?
5. கிறீஸ்துவுக்காகத் தம் இன்னுயிரை ஈந்து, இரத்தம் சிந்திச் சாட்சிகளான அந்த 600க்கும் மேற்பட்ட கிறீஸ்தவ வேதசாட்சிகளின் நினைவுகளை மீட்கும் காவியமாகத் திகழ்கின்றது வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயம். இவர்கள் வேதசாட்சிகளான அந்நிகழ்வு எந்த ஆண்டில் நிகழ்ந்தது?
6. "சிதைந்து போன எம் உறவுகளின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்" இந்த வார்த்தைகள் எங்கே எப்போது யாரால் கூறப்பட்டன?
7. கிரேக்க தத்துவ ஞானி - சோக்கிரரீஸ் - விசம் அருந்திச் சாகவேண்டும் என்று தீர்ப்புப் பெற்றவர். அவரது சிந்தனைக் கீற்று ஒன்று. மிகுதியை நிரப்புங்கள்.
*மனிதனும் அடுத்திருப்பவர் மீது அன்பும் அக்கறையும் கொள்வதில்லை என்றால் அவனும் ..........................................*
8. "நீங்கள் கிண்ணத்தையும் தட்டையும் வெளிப்புறத்தில் தூய்மையாக்குகின்றீர்கள் ஆனால் அவற்றின் உட்புறத்தையோ கொள்ளைப் பொருட்களாலும் தன்னல விருப்புக்களாலும் நிரப்புகின்றீர்கள்" இவ்வார்த்தை நற்செய்தியில் எங்கு காணப்படுகின்றது?
9. இரு தசாப்த இலங்கையின் யுத்த வரலாற்றிலே மன்னாரிலே பலிகொள்ளப்பட்ட இரு அருட்பணியாளர்கள் யார்?
10. தற்போது தோட்டவெளியில் உள்ள வேதசாட்சிகளின் இராக்கினி ஆலயம் எப்போது திறந்து வைக்கப்பட்டது?

மாணவர் மறையறிவுப் பகுதி இல. 32இற்கான கேள்விகளுக்கு 21 பேர் விடையளித்திருந்தனர்.

**இவர்களுள் பரிசுக்குரியவராக தெரிவுசெய்யப்பட்ட அதிஸ்ரசாலி,**

**பா. டொறின் நிஷாந்தி, சுற்றுலா மண்டபம், மடு**

**பாராட்டுக்குரியவர்களாக தெரிவுசெய்யப்படும் 10 அதிஸ்ரசாலிகள்**

1. நா. சுபாசினி, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
2. ரி. றொஸ்னி, இல. 176, ஒல்லிமோட்டை, சவாறகட்டு, மன்னார்
3. அ. ஜஸ்மின் சறோன், ஆவணம், நானாட்டான்.
4. எஸ். லிபோன்சா பிகிறாடோ, பள்ளிமுனை.
5. எஸ். பௌசி பிகிறாடோ, லூசியா ம.வி. பள்ளிமுனை.
6. எஸ். நதின், 10ம் ஆண்டு, புனித சவே.ஆ. பாடசாலை, மன்.
7. திரு. பி. அன்ரன் துரை ராஜா, சுவிஸர்லாண்ட்.
8. எஸ். எஸ். கஜானா, ஆலங்குளம், பறப்பாங்கண்டல்.
9. எம். யூலி வலன்ரீனா, காத்தாங்குளம், வட்டக்கண்டல்.
10. கே. போல் சேவியர், டென்மார்க்.


## செபமாலைக் கன்னியர் சபை
## இறையனுபவ வாழ்வுக்கு உங்களை அழைக்கின்றது

- மரியன்னையின் வேண்டுகோளுக்கிணங்க நற்கருணை நாதர் முன்னிலையில் இரவு, பகல் தியானத்துடன் கூடிய செபமாலை இடைவிடாது செபிப்பதன் வழி...... இறைவனை மகிமைப்படுத்தவும்,
- மௌனமான, தாழ்மையான, ஏழ்மையான வாழ்வை வாழ்வதன் வழி...... மனுக்குலத்தின் பாவங்களுக்கு பரிகாரம் செய்யவும்,
- மறைந்த எளிமையான உழைப்பின்வழி ..... உலகிற்கு சாட்சியம் பகரவும்,

**இறைவன் உங்களை அழைக்கின்றார்**

தகமை – O/L சித்தி
வயதெல்லை – 18 – 30

இத்தகைய செப, தப தியாக வாழ்வில் அர்ப்பணிக்க இறை அழைப்பின் குரல் இதயத்தில் எழுந்தால் நீங்கள் கீழே உள்ள இரண்டு முகவரிகளில் ஏதாவது ஒன்றுடன் தொடர்புகொள்ளலாம்:

அருட்சகோதரி மில்றட்,
செபமாலைக் கன்னியர் இல்லம்,
35/36, துவண,
கொச்சிக்கடை.

## செபமாலைக் கன்னியர்சபை
## துணை அங்கத்தவர்கள்

செபமாலைக் கன்னியர் சபையானது தனது செப, தப வாழ்வில் பங்குகொள்ள பொதுநிலைப் பெண்களையும் இணைத்துக்கொள்கின்றது. இவர்கள் கன்னியருடன் தங்கியிருந்து அவர்களது செபங்களிலும் பணிகளிலும் பங்கேற்பர்.

30 - 50 வயதுக்குட்பட்ட பெண்கள் செப வாழ்வில் தம்மை உட்படுத்தி இறையரசுக்காக உழைக்கவும், செபமாலைக் கன்னியர் சபையின் உள்ளுயிருக்கேற்ப வாழவும், ஆவலுடையோர் விண்ணப்பிக்கலாம்.

திருமணமாகி, கணவனை இழந்தோர், ஏனைய குடும்பப் பொறுப்புக்களில் இருந்து விடுவிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும். மேலும் விபரங்களுக்கு கீழே உள்ள ஏதாவதொரு கன்னியர் இல்லத்துடன் தொடர்புகொள்ளவும்.

குழுத்தலைவி,
செபமாலைக் கன்னியர் இல்லம்,
பட்டிதோட்டம்,
மன்னார்.


**மக்களமைப்பை...** 12ம் பக்கத் தொடர்ச்சி

தொடர்ந்து இக்கிராமிய விழிப்பூட்டல் பிரிவுக்கு இணைப்பாளராக கடமையாற்றும் சு. அன்ரன் ராஜகாரியர் (றாஜன்) அவர்களினால் இக்கிராமிய விழிப்பூட்டல் பிரிவின் நோக்கு, இலக்கு என்பவை பற்றியும் மக்கள் அமைப்பின் நிர்வாக கட்டமைப்பும் செயற்பாடுகளும் பற்றிய விளக்கம் கொடுக்கப்பட்டது. இறுதியில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இந்நிகழ்வுகளில் மக்கள் தமது தேவைகளை எடுத்துக்கூறினர். வாழ்வுதயப் பணியாளர்கள் திரு. A. விமலநாதன், செல்வன் A. அமல்ராஜ், செல்வி J. அரினா போன்றவர்களும் கலந்துகொண்டனர். காலையில் செட்டிகுளம் பிரதேசத்தின் மெனிக்பாம் கிராமத்தில் இடம்பெற்ற மக்களமைப்பு ஒன்றுகூடலில் ஏறத்தாழ 60 உறுப்பினர்களும் அதே தினம் பிற்பகல் வவுனியா பிரதேசத்தின் பத்தினியார் மகிழங்குளம் கிராமத்தில் இடம்பெற்ற ஒன்றுகூடலில் 75 உறுப்பினர்கள் மட்டிலும் பங்குபற்றியமை இங்கு குறிப்பிடத்தக்கது.

**வீட்டு மின்னிணைப்பு** (12ம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த ஆறு மாத காலமாக ஆட்காட்டிவெளியில் வீட்டு மின்னிணைப்புப் பயிற்சியை மேற்கொண்டு தற்பொழுது பயிற்சியைப் பூர்த்திசெய்த மாணவர்கள் தமது நன்றி நவிலல் நிகழ்வினை 21.02.2006 அன்று நடாத்தினர். இதில் பயிற்சியை வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்த வாழ்வுதய இயக்குனர் அருட்பணி பி. ஜேசுறாஜா அடிகளார், வாழ்வுதயப் பணியாளர்கள், மற்றும் பயிற்சி வழங்கிய ஆசிரியர்கள், நிதி வழங்கிய WUSC நிறுவன அதிகாரிகள் போன்றோருக்கும் இப்பயிற்சியை பூர்த்திசெய்த மாணவர்கள் தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர். பயிற்சியைப் பூர்த்தி செய்த மாணவர்கள் 23 பேரும் பயிற்சிப் பொறுப்பாளர்கள் மற்றும் நெறியாளர்களுக்கு மதிய விருந்து வழங்கி தமது நன்றிகளைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# குடும்பக் குவலயம்

## அவள் சும்மா இருக்கிறாள்? (ஓர் உரையாடல்)

ஜூ. எட்மன் ரமேஸ் கொருதோர், கற்கிடந்தகுளம், முருங்கன்

**உமக்கு பிள்ளைகள் இருக்கிறார்களா? வைத்தியர் கேட்டார்.**

ஆம். நான் மிகவும் துரதிஷ்டசாலி. பிறந்த பன்னிரண்டு பேரில் உயிருடன் இருப்பது ஒன்பது பேர் என்று விடை கொடுத்தான்.

**உமது மனைவி வேலை செய்கிறாளா?** இல்லை, அவள் வீட்டில் சும்மா இருக்கிறாள்.

**அவள் வாழ்நாளை எப்படிக் கழிக்கிறாள்?**

காலையில் எழும்பி, வீட்டுக்கு தண்ணீரும், விறகும் எடுத்து வருவாள். அடுப்புக்கு நெருப்பு மூட்டி காலை ஆகாரத்தை தயாரிப்பாள். அதற்கு பிறகு மா இடித்து, வீட்டுக்கு அவசியப்படும் பொருட்களை வாங்குவதற்குக் கடைக்குப் போவாள். வீட்டுக்கு வந்து பகல் சாப்பாடு தயாரிப்பாள்.

**நீர் பகல் சாப்பாட்டிற்கு வீட்டுக்குப் போவீரா?**

இல்லை... இல்லை.... சாப்பாடு எனக்கு வயலுக்கு கொண்டு வந்து தருவாள். வீட்டில் இருந்து மூன்று கிலோ மீற்றர் தூரம் வயல் இருக்கும்.

**அதன் பிறகு?**

வீட்டில் வளர்க்கும் கோழிகளுக்கும், மாடுகளுக்கும் சாப்பாடு கொடுத்து, கோழிப் பண்ணையிலும், மாட்டுப் பண்ணையிலும் வேலை செய்வாள். அது மட்டுமல்ல. பிள்ளைகள் அனைவரையும் பார்த்துக்கொள்வதும் அவள்தான். இனி நான் வீட்டுக்கு வரும் போது இராச்சாப்பாடும் சமைத்து முடித்திருப்பாள்.

**- இரவு சாப்பாட்டுக்குப் பிறகு நித்திரைக்குப் போவது எத்தனை மணிக்கு?**

முதலில் நித்திரைக்கு செல்வது நான்தான் ..... அவளுக்கு இன்னும் இரண்டு மணித்தியாலங்கள்வரை வேலை செய்ய வேண்டியிருக்கும்.

**நீர் சொன்னீர் உமது மனைவி சும்மா இருக்கிறாள் என்று...?**

உண்மைதான் நான் சொல்வது அவள் வீட்டில் தங்கி இருப்பதனால்தான்.

---

*எங்கள் வீட்டில் இருக்கும் அம்மாவின் முகத்தில் சுருக்கங்கள் தெரிவது சும்மா இருந்ததினாலா? மென்மையான கரங்கள் கரடு முரடாகியது, நகங்களில் அழுக்கு சேர்ந்தது, அவள் வீட்டில் சும்மா இருந்ததினாலா? வீடு ஒளி பெற்றது, அன்பு பாலாக வழிந்தது, அவள் வீட்டில் சும்மா இருந்ததினாலா?*

*நண்பனே நினைத்துப் பார். தாய் செய்த பணிகளை நம்மை முன்னேற்றிய அவளின் அன்பை எப்போதாவது நாம் உணர்ந்தோமா?*



# பணம் என்னடா பணம்!



பணமானது இன்று மனிதனை பிணமாக மாற்றி வரும் காலமாக மாறிவிட்டது. இன்றைய யுகமானது கலியுகமாக மாறிவிடுவதற்கு இந்தப் பணப் பேயே காரணமாக உள்ளது. உறவை வளர்க்க உதவுவதும் பணம்தான். உறவைப் பிரித்துவிடுவதும் பணம்தான். நட்பை மலரச் செய்வதும் பணம்தான், நட்பை பிரிக்கச் செய்வதும் பணம்தான். அச்சடித்த தாளுக்கு இருக்கும் மகத்தான சக்தி இன்று மனிதனுக்கு இல்லாமல் போய்விட்டது!

சிலருக்கு பணம்தான் உலகம். பணம்தான் வாழ்க்கை.

ஏன், பணம்தான் உயிரும்கூட.....! பணமில்லையேல், வாழ்க்கையில்லை என்று வாழ்கிறார்கள்.

வாழ்க்கையில் சிக்கனத்தை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம்தான். ஆனால் இவர்கள் கடைப்பிடிப்பது சிக்கனத்தையல்ல, கஞ்சத்தனத்தை! அடுத்தவர்களுக்கு பண உதவி செய்வதென்றால், அப்படியே நடுங்கி விடுபவர்களும் இவ்வுலகில் உள்ளனர். நோட்டுக்களை தடவி, தமக்கு மட்டும் செலவு செய்யும் இவர்கள் எல்லாவற்றையும் அந்த ஆண்டவன் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்பதை ஏனோ உணர்வதில்லை. பிறருக்கு மனமுவந்து மனமகிழ்ச்சியுடன் விரும்பி உதவி செய்யுங்கள். அது வேறுவிதமாக பல மடங்காகவும் பெருகி மீண்டும் உங்களை வந்தடையும். இதுவே யதார்த்தமும்கூட.

ஆபத்துக் காலத்தில் அபலைகளுக்கு, அனாதைகளுக்கு, ஆதரவற்றவர்களுக்கு நீங்கள் செய்யும் சேவை இந்த ஆண்டவனுக்கு நேரடியாக செய்யும் சேவைக்கு சமனாகும். உங்கள் வருமானத்தில் ஒரு சிறிய தொகையை மற்றவருக்காக ஒதுக்குங்கள். தானதர்மங்களைச் செய்யுங்கள், மனநிறைவு பெறுங்கள்.

ஆண்டவன் பணத்தை உங்களுக்கு வழங்கியிருப்பது நீங்கள் மற்றவர்களுக்கு எந்தளவிற்கு உதவுகிறீர்கள் என்று சோதிக்கத்தான்.

*மத். 6:19-21 ல் "மண்ணுலகில் செல்வம் சேர்த்து வைக்க வேண்டாம். இங்கே பூச்சியும், துருவும் அழித்துவிடும். திருடரும் கன்னமிட்டுத் திருடுவர். ஆனால் விண்ணுலகில் செல்வம் சேர்த்து வையுங்கள். அங்கே பூச்சியும், துருவும் அழிப்பதில்லை. திருடரும் கன்னமிட்டுத் திருடுவதில்லை. உங்கள் செல்வம் எங்குள்ளதோ, அங்கே உங்கள் உள்ளமும் இருக்கும்.*

**ம. மேரி அஞ்சலா கோமஸ், கற்கிடந்தகுளம், முருங்கன்**

# சிந்தனைக்கு சில வரிகள்

- நீ எதையும் இழக்கத் துணியலாம். உன் பொறுமையைத் தவிர.
- உன் இலட்சியத்தை அடையும்வரை கடிவாளம் பூட்டிய குதிரையாக இரு.
- தோல்வியை தாங்கும் மனவலிமை மிக்கவனே வாழ்வில் வெற்றிபெற முடியும்.
- எதிர்ப்பவன் இழப்புக்களைச் சந்திப்பான்.
- உண்மையான சொர்க்கம் அன்னையின் அன்பும், அரவணைப்பும்தான்.
- குறிக்கோள் இல்லாத வாழ்க்கை வெறும் குப்பை மேடு தான்.
- நேற்று என்பது இனி வருவதில்லை. நாளை என்பது இன்னும் வரவில்லை.
- சிந்தனையின்பின் செயற்படு. செயற்பட்டபின் சிந்தியாதே.

*யே. பிரான்சிஸ்கா, தரம் - 10, ஒலிமடு, நானாட்டான்.*

# சிந்தனைத் துளிகள்

- சுயநலம் என்பது நெருப்பைப் போன்றது.
- நல்ல மனச்சாட்சி என்பது ஒரு மென்மையான தலையணையைப் போன்றது.
- ஒருவரின் அவசரம், அவன் செயல் அனைத்தையும் பாழாக்கிவிடும்.
- நல்ல சினேகிதியை ஆபத்தில் அறியலாம்.
- உழைப்பை நம்பு. ஆனால் கடவுளை மறந்துவிடாதே.

*ப. றதனி, மன். புனித லூசியா ம.வி. தரம் 6B, பள்ளிமுனை, மன்னார்.*

# சிந்தி – செயற்படு!

- தூயவரின் இதயங்கள் ஆவியானவரின் ஆலயங்கள்.
- விழித்திருப்பவர்களுக்கே இறைவனின் கொடைகள் வழங்கப்படுகிறது. தூங்குபவருக்கல்ல.
- திறந்த குடமே, நிறைவடைய முடியும்.
- பிறரை விமர்சிப்பது எளிது. சரியாக செயல்படுவது கடினம்.
- தோல்வி அடைவது குற்றமல்ல. இலட்சியம் இல்லாத வாழ்வே குற்றம்.
- நேர்மையுடன் கூடிய எளிமையே பிறரை மயக்கும் உண்மையான அழகு.
- பகையால் பகையை தணிக்க இயலாது. அன்பால் மட்டுமே இயலும்.
- கடவுள் அனுப்பிய நிகரற்ற நல்ல சமாரியன் இயேசுவே.

*யேசுதாசன் ஜெலன்றினா, தரம் - 7, 5ம் வட்டாரம், விடத்தல்தீவு.*

# மருத்துவப் பொழிவு

## ஒரு ஆயுர்வேத அணுகுமுறை

## நீரிழிவு நோயின் இன்னொரு பரிமாணம்

நீரிழிவு என்றால் சிறுநீர் அதிகமாக வெளியேறுவது என்ற பொருள். இந்நோயின் முக்கிய அறிகுறி இது என்றாலும், நம் உடலின் மொத்த பாகங்களையும் பாதிப்பு நிலைக்கு தள்ளி நீண்ட நாட்கள் நோயாளியை அவதிக்குள்ளாக்குகிற ஒரு நோய் இது எனலாம். நம் உடலின் செயல்களை கட்டுப்படுத்துகின்ற கபம், பித்தம், வாதம் என்ற மூன்று திரிதோஷங்களுக்கும் ஆற்றல் கொடுக்கின்ற ரதம் இரத்தம், மாமிசம், மேதஸ், அஸ்திசுக்லாம் என்ற ஏழு தாதுக்களையும் படிப்படியாக பாதித்து இந்நோய் உண்டாகிறது.

இந்நோய் பரம்பரை பரம்பரையாக உண்டாவது மற்றும் முறையற்ற ஜீவித நடவடிக்கைகள் என்ற இரண்டு வகையாகப் பிரிக்கலாம். பல நோய்களும் உண்டாகுவதற்கு பரம்பரையும் ஒரு அடிப்படைக் காரணமாக கருதப்படுகிறது. ஜீன்கள் வழியாக, பரம்பரை நோய் படர்வதை ஜெனிடிக்ஸ் அறிவின் மூலம் நன்கு அறியலாம். அதாவது, தாய் - தந்தை என்ற இவ்விரு வழிகளிலும் அவர்களுடைய முன்னோர் சர்க்கரை நோயாளிகளாக இருந்தால், இவர்களுக்கும் இவர்களுடைய தலைமுறைக்கும் இந்நோய் உண்டாவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம். இருப்பினும், குழந்தை பிறந்த உடனேயே நோயின் அறிகுறிகள் தெரிய வேண்டும் என்ற அவசியம் இல்லை.

அக்குழந்தை சிறுவயது முதலே சர்க்கரை நோயை உற்சாகப்படுத்துகின்ற விதத்தில், உணவுப் பழக்கவழக்க முறைகளைக் கொண்டிருக்கும் பட்சத்தில் மூன்று, நான்கு வயது முதலே இந்நோயின் அறிகுறிகள் காணத் தொடங்கும். மனநிலை தடுமாற்றங்கள் வேறு. ஏதேனும் நோயின் கடினத் தாக்குதல்கள் மற்றும் விபத்துக்கள் ஆகியவற்றின் மூலமும் இந்நோய் இவர்களை பாதிக்க வாய்ப்புண்டு. முன்னோர்களுக்கு நீரிழிவு நோய் இருந்தாலும், அது அடுத்த தலைமுறையையும் பாதிக்கும் என்ற அவசியம் இல்லை. இந்நோய் வரலாம் என்ற முன்னேற்பாட்டோடு இதைக் கட்டுப்படுத்தும் உணவு முறைகளையும், பழக்கவழக்கங்களையும் கைக்கொண்டால், இந்நோயினால் தாக்கப்படாமல் இருக்கலாம் என்று கூறுகிறது ஆயுர்வேதம். காரணம் இவைதான், இனிப்புப் பலகாரங்கள் மீதுள்ள ஈடுபாடு. உப்பு, புளி போன்றவற்றை தேவைக்கு அதிகமாக உபயோகித்தல். கொழுப்பு கூடிய ஆகாரங்களின் அதிக உபயோகம்.

பால், பாலில் இருந்து உற்பத்திசெய்த பொருட்கள், நவதானியங்கள், மீன், மாமிசம், தானியங்கள் அரைத்து உண்டாக்கும் பலகாரங்கள் இவைகளின் தினசரி, மற்றும் அதிகமான உபயோகம்.



சரியான கால அளவுகள் இல்லாத உணவு முறைகள், போதைப் பொருட்கள் உட்கொள்வது, முறையற்ற பழக்க வழக்கங்கள், உடல் உறுப்புக்களுக்கு வேலை கொடுக்காமல் இருப்பது, உடற்பயிற்சி இல்லாமை, பகல் உறக்கமும், கூடுதலான உறக்கமும், மலம், சிறுநீர் போன்றவை சரியான நேரத்தில் வெளியேறாமை, அளவுக்கு அதிக உடலுறவுகள், சுத்தமில்லாமை, வெப்பத்தில் வேலை செய்வது, மனசஞ்சலம் இவைகளெல்லாம் நமது உடலில் உள்ள கபத்தையும், கொழுப்பையும் அதிகரிப்பதோடு, கேடு விளைவிக்கவும் செய்யும். இது தொடர்ந்து நடந்து கொண்டிருந்தால், நமது உடலின் செயற்பாடுகள் முறையற்று கழிவுகள் கெட்டி நிறுத்தப்படுகிறது.

### இப்படித்தான் ஆரம்பம் :

அதிகமான வியர்வை வெளியேறுதல்.

உடலிலிருந்து துர்மணம் வீசுதல்.

அசதி, உடல் மெலிதல், இருமல், மூச்சுத்திணறல், மயக்கம்.

கையிலும், பாதத்திலும் எரிச்சல்.

கூடுதலான உறக்கம் / உறக்கமில்லாமை, அசதி.

கண், காது, வாய், பல் போன்றவற்றில் ஏதோ ஒட்டிப் பிடித்தது போல் தோன்றுதல்.

உடல் பாரம் தோன்றுதல். தொடும்போது தெரியாமை அல்லது வலி, விறைத்தல். வாயும், தொண்டையும் வற்றுதல். வாயில் இனிப்பு சுவை தோன்றுதல்.

வயிற்றுப் போக்கு, மலச்சிக்கல், புளித்துத் திகட்டுதல்? வாந்தி, மூக்கொழுகுதல், உருசி அறியாமை, வியர்வை, சிறுநீர் இனிப்பு சுவை மற்றும் கலங்கலாக இருக்கும். நகம் மற்றும் முடி ஆகியவற்றின் அதிக வளர்ச்சி.

சிறுநீர் வெளியேறும்போது எரிச்சலும், கடுப்பும் இருக்கும்.

எல்லா அறிகுறிகளும் ஒரே சமயத்தில் உண்டாகும் என்பதில்லை. நோய் பாதிக்கும் உடல் பாகத்திற்கேற்ப அறிகுறிகளும் தோன்றும்.

# சமைப்போம்! சுவைப்போம்!

*தொகுத்துத் தருவது*

**- எம். தீபா, வளனகம், மன்னார்.**

## தேங்காய் மைசூர் பாகு



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| கடலை மா | - 200 கிறாம் |
| சீனி | - 400 கிறாம் |
| நெய் | - 250 கிறாம் |
| தேங்காய் | - பாதி |

### செய்முறை :

சீனியில் தேவையான அளவுக்கு நீர் விட்டு பாகாகக் காய்ச்ச வேண்டும். பாகு பதத்திற்கு வந்ததும் கடலை மாவையும் தேங்காய் துருவலையும் பாகில் கலந்து, நன்றாகக் கிளற வேண்டும். எல்லாம் சீராக ஒன்றாகக் கலந்தவுடன் கொஞ்சம் கொஞ்சமாக நெய்யை விட்டுக் கிளற வேண்டும். பாகு நன்றாக நுரைத்து வந்ததும் இறக்கி, நெய் தடவிய தட்டில் பரப்பிக் கொட்ட வேண்டும். பிறகு பாகு இறுகியதும் கத்தியால் துண்டு துண்டாக வெட்டிப் பரிமாறவும்.

*தொகுத்துத் தருவது*

**- சந்தான் கொண்சிலா, வண்ணாகுளம்.**

## ஐஸ் கிறீம்



### தேவையான பொருட்கள்

| | |
|---|---|
| சீனி | - 250 கிறாம் |
| லக்ஸ்பிறே | - 150 கிறாம் |
| ஜெலற்றீன் | - 1 மேசைக்கரண்டி. |
| முட்டை | - 1 |
| வனிலா | - 1/4 தே.க. |

### செய்முறை :

சீனியையும் மாவையும் சிறிது நீர் விட்டுக் கலந்து அடுப்பில் வைத்து தடித்த பதம் வரும்வரை காய்ச்சி ஆறவிடவும். பின் முட்டையை வேறாக அடித்து வைக்கவும்.

பால் நன்கு ஆறியதும் முட்டையையும், ஜெலற்றினையும் வனிலாவையும் கலந்து நன்கு அடிக்கவும். பின்பு அக்கலவையை குளிர்சாதனப் பெட்டியில் ஒரு மணி நேரம் வைத்து மீண்டும் எடுத்து ஒருமுறை அடித்து திரும்பக் குளிரில் 3 மணி நேரம் வைத்து எடுத்து பரிமாறலாம்.

# பெரியப்பா பதில்கள்





**கே: ஒருவனுக்கு ஒருத்தி என்ற பண்பாடு மாறி விவாகரத்துக்கள் பெருகுவதன் காரணம் என்ன பெரியப்பா?**

*- முகுந்தன் செட்டிகுளம்*

ப: நிலாவை அடைந்ததும், உங்கள் மனதில் தோன்றிய எண்ணம் என்ன? என்று யூறிகாரினிடம் பத்திரிகையாளர்கள் கேட்டார்கள் "பூமி நிலாவைவிட ஒளிமயமாகவும், அழகாகவும் இருந்தது. இங்கிருந்து பார்த்தபோது அழகாக இருந்த நிலா அங்கு வெறிச்சோடிக் கிடந்தது. தண்ணீர் இல்லை, பசுமை இல்லை, நிலாவிலிருந்து பார்த்தபோது என் மனதில் தோன்றிய எண்ணம், 'என் பூமி எவ்வளவு அழகானது' என்பதுதான்" என்றார்.
ஒருவர் இன்னொருவரை கொடுமைப்படுத்துவதால் வருகின்ற விவாகரத்துக்கள்போக மீதமுள்ளவை அனைத்தும் "இதைவிட அது அழகு" என்று அலைபாய்வதால்தான்.

**கே: பெரியப்பா, ஆண்களைவிட பெண்களுக்கு ஆயுள் அதிகம் என்று கூறப்படுவது உண்மையா?**

*- கலாரூபன், முள்ளிக்குளம்.*

ப: அமெரிக்காவில் ஆயுள் குறித்த ஆய்வு ஒன்று அண்மையில் நடந்தது. மனித வாழ்க்கையையே முடித்துவிடக்கூடிய 15 நோய்களில் 14 நோய்கள் ஆண்களையே தாக்குகிறதாம். இயற்கையிலேயே ஆண்களுக்கு ஆரோக்கிய சிக்கல்கள் அதிகமாக இருந்தாலும், அதை மேலும் அதிகப்படுத்துவது புகை, மது, வன்முறை போன்ற தீய பழக்கங்கள் என்கிறது ஆய்வு. அந்த ஆய்வின் முடிவுப்படி பெண்களின் ஆயுள் அதிகம் என்று கண்டறியப்பட்டாலும் பெண்களைப்போல் கண்ணீர்விட்டு அழுதால் மனஅழுத்தம் குறைந்து ஆயுள் கூட வாய்ப்புள்ளதாம்.!
ஆகவே ... ஆண்களே.... ஆயுளை...... அதிகரிக்க.... அழுங்கள்.....!

**கே: திருமணமாகிவிட்டபின் தாய் தந்தையோடு வீட்டிலேயே இருப்பது நல்லதா? அல்லது தனியாக வீடு கட்டி தனிக்குடித்தனம் போவது நல்லதா?**

*- மதிவதனி, மாங்குளம்*

ப:இல்லங்கள் தனித்திருக்கட்டும் - உள்ளங்கள் இணைந்திருக்கட்டும்.

**கே பெரியப்பா, சிலர்? பல ஆண்டுகள் பயிற்சி செய்து வயிற்றில் கார் ஏற்றியும், பாம்புகளுடன் வாழ்ந்தும் சாதனை செய்கிறார்களே, இது பாராட்டப்படவேண்டிய விசயம்தானே?**

*- அந்தோனிக்குட்டி, முருங்கன்*

ப: இராமகிருஸ்ணர் கங்கை நதிக்கரையில் உட்கார்ந்திருந்தார். அவரைப் பார்க்க வந்த யோகி, "வாருங்கள் நாம் கங்கை நதிமீது நடப்போம்" என்றார். "நீரில் நடக்க நீங்கள் எத்தனை ஆண்டுகள் செலவழித்தீர்கள்?" என இராமகிருஷ்ணர் வினவ, "பதினெட்டு ஆண்டுகள் கஷ்டப்பட்டு, நோன்பிருந்து, இடைவிடாமல் பயிற்சி செய்து, சக்தி பெற்றேன். உங்களால் நடக்க முடியுமா?" என்றார் யோகி. "நான் ஒன்றும் முட்டாள் அல்ல. தேவையற்றதற்குப் 18 ஆண்டுகளை வீணடிக்க! படகுக்காரனுக்கு இரண்டு பைசாக்களை கொடுத்தால் போதும். உங்கள் 18 ஆண்டு சம்பாதியத்தின் மதிப்பு இரண்டு பைசாதான்" என்றார்.

**கே: 'போப்' - பாப்பரசர் என்ற வார்த்தையின் அடி எங்கிருந்து வந்தது?**

ப: 'போப்' என்ற வார்த்தை இலத்தீன் வார்த்தை. இது Pappas என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து வந்தது. இதற்குத் தந்தை என்று பொருள். மூன்றாம் நூற்றாண்டில் எல்லா ஆயர்களும் சில சமயம் சாதாரண குருக்களும் 'போப்' என்று அழைக்கப்பட்டனர். ஆனால் 9ம் நூற்றாண்டிலிருந்து உரோம் நகர ஆயருக்கும், போப்புக்கும் இப்பெயரை நிரந்தரமாக்கினர். போப்புக்கு ஹோலி பாதர் (Holy Father), விக்கார் ஒவ் கிரைஸ்ட் (Vicar of Christ) பொன்டிவ் (Pontiff) என்ற வேறு பெயர்களும் ஆங்கிலத்தில் வழங்கப்படுகின்றது.



**கே: எங்கள் காதல் விவகாரம் வெளியே தெரிந்ததும் உடனடியாக காதலியின் வீட்டில் தாலி கட்டச் சொல்கிறார்களே அவர்களுக்கு அப்படி என்ன அவசரம் பெரியப்பா?**

ப: பெற்றவர்கள் தமது வயிற்று நெருப்பை அணைக்கத்தான்!

**கே: மற்றவர்கள் என்னைப் பாராட்டும்போது மகிழ்ச்சி அடையும் நான் - மற்றவர்கள் - குறிப்பாக எனது எதிரிகள் என் குறைகளை சுட்டிக்காட்டும்போது எனக்கு எரிச்சலும் கோபமும் வருகிறது. ஏன்?**

ப: நண்பர்கள் நம்மிடம் சுட்டிக்காட்டும் நல்லவற்றைவிட எதிரிகள் நம்மிடம் சுட்டிக்காட்டும் தவறுகள் அனேகமாக மிகச் சரியாக இருக்கும். நம் தலை கலைந்திருக்கிறது, கண்ணாடியைப் பார்த்தவுடன் கலைந்த தலையை சரி செய்து கொள்கிறோம். ஆனால் நம்மிடம் உள்ள குறைகளை எடுத்துக்காட்டும் கண்ணாடிகள்தான் மனிதர்கள் என்பதை மட்டும் புரிந்துகொள்வதே இல்லை.

# நீங்காத நினைவுகள் நீங்காத நினைவுகள்

## 31ம் நாள் நினைவு

மலர்வு 11 - 12 - 1980



உதிர்வு 30 - 01 - 2006

**செ. இக்னேசியஸ் லோயலா**
**(தயாளன்-நாவாந்துறை வடக்கு)**

அன்பின் இருப்பிடமே தயாளா! ஆசை நேச பாசமுள்ள தம்பியே! எம்மைவிட்டு இறைவனிடம் சென்றது ஏனோ? எத்தனை எத்தனை நாட்களோ, மாதங்களோ, வருடங்களோ, கடந்தாலும் ஆறாதப்பா எம் மனங்கள். உம் சுகவீனம் அறிந்து துயர் கொண்டோமே, இறை அருள் வேண்டி செப உதவி கேட்டு நின்றோமே இறைவன் அடியில். இவ்வுலக வாழ்வு இருபத்தைந்து ஆண்டுகள் என இறைவன் அழைத்திட்டாரே. உன் ஆன்மா இறைவனில் சங்கமமாகட்டும். அன்புத் தம்பியே இறைவனில் இன்பம் துய்ப்பீராக! உம் பிரிவால் துயருறும் அப்பா, அம்மா, அக்காமார், அண்ணாமார், மச்சான்மார், மச்சிமார், உற்றார் உறவினர் நண்பர்கள். தகவல்: அத்தான் சூ. செல்றரன் மிராண்டா, பேசாலை.

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 08 - 1985



உதிர்வு 14 - 03 - 2005

**கிறேசெற் மேரி கூஞ்ஞு (கமலி)**
**(தலைமன்னார் கிராமம்)**

எங்கள் உயிரோடு உறவாடிய இதயத்துடிப்பே, ஓராண்டு சென்றாலும் உன் நினைவாலே வாழுகின்றோம். மாய உலகினிலே உண்மைகள் உறங்குகின்றன. நிஜங்கள் மறைகின்றன. மலராய் பூத்துக் குலுங்க வேண்டிய நீ.... வாடியது ஏன்? வதனமிழந்தது ஏன்? உன் கன்னத்து சிரிப்பும் உன் வதனமும் அன்பு பாசத்தோடு பேசிட்ட உன் வார்த்தைகளும் இன்பமாய் இருந்திட்ட நாட்களும் என்றுமே எம்மைவிட்டு நீங்கிடுமோ "கமலி" அம்மா. ஓர் ஆண்டு ஆனால் என்ன? நூற்றாண்டு காலமட்டும் உன்பிரிவால் கல்லாகி நிற்கின்றோம். எம் அருமைச் செல்லமே நீ விண்ணக வாழ்வு பெற வேண்டுகின்றோம். *இவரின் பிரிவால் துயருறும், அன்பு அம்மா, அப்பா, சகோதரர்கள், உற்றார்.*

## 3ம் ஆண்டு நினைவு

மலர்வு 11 - 02 - 1948



உதிர்வு 06 - 02 - 2003

**திரு. திருச்செல்வம் தாவீது**
**(முருங்கன் கமம், முருங்கன்)**

பாசம் நிறைந்த செல்வமே,
கருணை நிறைந்த வதனமே,
பொறுமையின் இருப்பிடமே,
ஆண்டுகள் மூன்று சென்றாலும்
எங்கள் உள்ளத்திலே
இன்றும் அணையாத தீபமாய்
ஒளிர்விட்டுப் பிரகாசிக்கும்
எங்கள் தந்தையே,
எம்மை கதிகலங்க விட்டுவிட்டு
சென்றீரே அப்பா.
உம் ஆன்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம். *உம் பிரிவால் துயருறும் - மனைவி, மக்கள்.*

## 2ம் ஆண்டு நினைவு

மலர்வு 28 - 10 - 1939



உதிர்வு 05 - 02 - 2004

**செலஸ்ரீனம்மா பொன்னையா**
**(நெடுங்கண்டல் - அடம்பன்)**

ஆண்டிரண்டு போனதம்மா மீண்டிடவோ முடியவில்லை தாங்கிடாத துயரமிது நீங்கிடாதோ நெஞ்சைவிட்டு? நித்தமுங்கள் முகம் காண்போம். கத்தரே நின் ஆன்மாவை நித்தியமும் காத்தருள்வார். சத்தியத்தின் நாயகனை எத்தினமும் வேண்டுகிறோம்.
*நீங்காத நினைவுடன் -*
*கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரன் பேத்திமார்.*
*21/7 1ம் குறுக்குத்தெரு, மருதானை வீதி, ஹெந்தளை, வத்தளை.*
*தகவல்: லெஸ்ரர் பொன்னையா, ஜேர்மனி.*

## 4ம் ஆண்டு நினைவு

மலர்வு 06 - 01 - 1943




உதிர்வு 15 - 03 - 2002

**மத்தேஸ் பிரான்சிஸ் டலிமா**
**(வங்காலை)**

குடும்பத்தின் சிகரமாய் கல்விமானாக வாழ்ந்த எங்கள் அன்பு தந்தையே ஆண்டு நான்கு ஆனதப்பா ஆறவில்லை எமது துயரம். ஆயிரம் தரம் கனவில் தோன்றினாலும் உங்கள் அன்பு வதனமுகம் இனி எப்போ காண்போம்? அப்பா கண்ணுள் மணிபோல் எம்மை வாழவைத்த குடும்ப ஒளிவிளக்கே! காலம் எல்லாம் எம்முடன் இருப்பீர்கள் என்று எண்ணியிருந்தோம். ஆனால் எங்களை பரிதவிக்க விட்டு நீடிய நெடும்பயணம் சென்றதேன் அப்பா? உங்கள் ஆன்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம். *இவரின் பிரிவால் துயருறும் - மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 29 - 11 - 1975




உதிர்வு 05 - 04 - 2005

**பிரான்சிஸ் யூட் சேவியர் டலிமா**
**(வங்காலை)**

பாசம் என்ற திருக்கோயிலில் குல தெய்வமாக வாழ்ந்த பாசமிகு மகனே! காலத்தின் கொடுமையினால் எம்மை தவிக்கவிட்டு சென்றதேனோ? ஆண்டு ஒன்று சென்றாலும் உன் அன்பு முகம் மறையாது. எம் இனிய யூட் சேவியரே, அன்பான குணமும் உன் அழகிய வதனமும் நீ செய்த குறும்புகள் அத்தனையும் எம் மனதை விட்டு போகவில்லையப்பா. எத்தனை ஆண்டுகள் சென்றாலும் நாங்கள் உன்னை மறவோம் தம்பி. உன் ஆன்மா சாந்தி பெற பிரார்த்திக்கின்றோம். *இவரின் பிரிவால் துயருறும் - அம்மா, அண்ணன்மார், தங்கை, சித்திமார், சித்தப்பாமார், பெரியம்மா, பெரியப்பா, உற்றார், உறவினர், நண்பர்கள்.*

## 25ம் ஆண்டு நினைவு

மலர்வு 10 - 01 - 1910



உதிர்வு 30 - 03 - 1981

**திருமதி. அஞ்சலீனா ஹெலன்)**
**(பயஸ் பிலிப்புப்பிள்ளை)**

உயிர்ப்பும் உயிரும் நானே என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பிலும் வாழ்வான்.
மதுர இயேசுவே இவ்வாத்துமத்துக்கு குளிர்ச்சியும், பிரகாசமும், சமாதானமும் உள்ள ஸ்தலத்தை கட்டளையிட்டருளும். திருமதி அஞ்சலீனா (ஹெலன்) பயஸ் பிலிப்புப்பிள்ளை என்னும் அடியாளை உமது மோட்ச பிரகாசத்தில் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று இரந்து மன்றாடுகின்றோம். வாழ்வில் நேசித்தோம் மரணத்தின் பின்னும் மறவோம். நித்திய இளைப்பாற்றியை இவருக்கு அளித்தருளும். முடிவில்லா சமாதானத்தில் இளைப்பாறுவாராக - ஆமென்.
*இவரின் பிரிவால் துயருறும் - பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்.*

**மன்னா**
**அபிமானிகளே!**

இறந்து போன உங்கள் அன்புக்கு உரியவர்களின் நினைவுகள், யூபிலி, மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றிற்கான கட்டணமாக புதிய வருடத்தில் இருந்து ரூபா 1500 அறவிடப்படும்.
மன்னாவின் பக்கங்களை நாம் அதிகரிக்கின்ற போதும், மன்னாவின் விலையை அதிகரிக்கவில்லை என்பதை வாசகர்கள் அறிவீர்கள்.
எனவே இந்த மேலதிக செலவை மேற்கூறிய விளம்பரங்கள் மூலம் ஈடுசெய்ய விரும்புகின்றோம். எனவே மன்னா அபிமானிகள் எம்மோடு ஒத்துழைப்பார்கள் என நம்புகின்றோம்.
- மன்னா நிர்வாகம்.

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி - இல - 47

## நீதித்தலைவர்கள் - 11 - 21

உங்கள் விடைகளை 10. 04. 2006க்கு முன் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்கவும். சரியான விடையை எழுதிய மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும்.

(பதிப்பாசிரியர்)

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | | | | | | 03 |
| | | | | | 04 | | | | * | |
| | 05 | | | | | | * | | | |
| | * | 06 | | | | | | 07 | | |
| | | 08 | | | | 09 | | | | |
| 10 | | | | | | | | | | |
| | | 11 | | 12 | | | | | 13 | |
| | 14 | | | | * | | | | | |
| | | 15 | | | | | 16 | * | | 17 |
| 18 | | | | * | | | | 19 | | |
| | | | | 20 | | | | * | 21 | |

### இடமிருந்து வலம்

1. அதனால்தான் நாங்கள் உம்மை ..................... ச் செல்ல வந்துள்ளோம்.
2. ஆண்டவரின் .................. ஆற்றலுடன் அவர்மீது இறங்கியது.
4. அவர் தேனடையைக் கையில் எடுத்து ........................ க் கொண்டே தொடர்ந்து நடந்தார்.
5. அவரது ........................ கடவுளின் தூதரின் தோற்றம்போல் பெரிதும் அச்சத்துக்குரியதாய் இருந்தது.
6. அந்நாள்களில் இஸ்ரயேலுக்கு அரசன் (3ம் எழுத்து 1 ம் எழுத்துக்கு முன்னே நிற்கிறது)
10. நான் அவரிடம் ...................... இருக்கின்றேன்.
14. ஆண்டவர் இஸ்ரயேலின் பொருட்டுப் .................... னைத் தோற்கடித்தார்.
18. இஸ்ரயேல் மக்கள் ஆண்டவர் ........................ மாலை வரை அழுதனர்.
20. அவர் சிங்கத்தின் ......................... க் காணத் திரும்பினார்.

### மேலிருந்து கீழ்

1. நீதி வழங்கும் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுக்கும் ............................... மக்களுக்கும் இடையே இன்று நீதி வழங்கட்டும்.
3. இவ்வாறு அவர் உயிரோடு இருந்தபோது, கொன்றதைவிட மிகுதியான பேரை அவர் ........................ கொன்றார்.
4. அவர் தந்தையும், தாயும் இது ஆண்டவரின் செயல் என்று ........................
6. அவரது ஆற்றலின் ......................... புலப்படவில்லை.
7. என் மகன் ................ என் கையிலிருந்து இந்த வெள்ளிக் காசுகளை ஆண்டவருக்கு நேர்ச்சையாக அர்ப்பணிக்கின்றேன்.
9. அவர்கள் யூதா நாட்டுக் கிரியத்து எயாரிமில் ...................... இறங்கினர்.
10. ........................ போர்க்கோலம் தாங்கிய அறுநூறு வீரர்களும், நுழைவாயிலின் முன் நின்றுகொண்டிருந்தனர்.
17. அவர் தந்தையும், தாயும் இது ஆண்டவரின் ..................... என்று அறியவில்லை.

### வலமிருந்து இடம்

3. ஆண்டவரே! நமக்கிடையே ..................... இருப்பார்.
4. ஆகவே, நீ திராட்சை இரசமோ, மதுபானமோ ......................
7. அவர் ........................ போகுமளவிற்கு வருத்தமுற்றார்.
8. அவர்கள் அவர்களிடம் "செல்லுங்கள் நிலத்தை ..................... பாருங்கள்" என்றார்.
11. மேலும் அவர்கள் ........................ பலிகளையும், நல்லுறவுப் பலிகளையும் ஒப்புக்கொடுத்தனர்.
12. என் மகனே! ஆண்டவர் உனக்கு .............. வழங்குவாராக!
15. இன்று இஸ்ரயேலிலிருந்து, ஒரு ............... துண்டிக்கப்பட்டுவிட்டது.
16. ................... அந்நிலத்தைக் கடவுள் உங்கள் கையில் ஒப்புவித்துவிட்டார்.
19. திராட்சை ..................., மதுபானமோ அவள் அருந்தக் கூடாது.
20. பலிப்பீடத்திலிருந்து, தீப்பிழம்பு வான் நோக்கி, மேல் எழும்பியபோது, அப் ...................... ஆண்டவரின் தூதரும் மேல் நோக்கிச் சென்றார்.

### கீழிருந்து மேல்

6. இப்சான் .............. பெத்லகேமில் அடக்கம் செய்யப்பட்டார்.
7. என்னைத் தாக்கமாட்டீர்கள் என்று எனக்கு .................. கூறுங்கள்.
9. ஒவ்வொருவரும் அவரவர் ........................ யில் நேர்மையெனப்பட்டதைச் செய்துகொண்டிருந்தனர்.
12. என் தலை மழிக்கப்பட்டால், எனது .................. என்னிடமிருந்து அகன்றுவிடும்.
13. மக்கள் அவரைப் பார்த்ததும், தங்கள் ............ ப் புகழ்ந்தனர்.
16. நீங்கள் மேற்கொண்டுள்ள ...................... ஆண்டவர் கண்ணோக்கிக் காப்பார்.
17. நாடு எதிலும், குறைவற்றதாகவும், ...................... டையதாகவும் இருந்தது.
21. மக்கள் பென்யமின் புதல்வரைக் ............... மனம் வருந்தினர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி**
**இல.46ற்கான முடிவுகளை, 2006ம் ஆண்டு ஏப்ரல் மாத மன்னாவில் எதிர்பாருங்கள்.**

## உங்கள் கவனத்திற்கு!

இறந்துபோன உங்கள் அன்புக்குரியவர்களின் நினைவுகள், யூபிலி மற்றும் பிறந்தநாள் நினைவுகள் போன்றவற்றை மன்னாவில் பிரசுரிக்க வேண்டுமாயின் அந்நினைவுகள் எந்த மாதத்தில் இடம்பெற வேண்டும் என விரும்புகிறீர்களோ அந்த மாதத்திற்கு முதல் மாதம் 20ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பி வையுங்கள். இத்திகதிக்கு பின்னர் வரும் எந்த விடயங்களும் அக்குறிப்பிட்ட மாதத்தில் பிரசுரிக்கப்படமாட்டாது என்பதை தெளிவாக அறியத்தருகின்றோம். நீங்காத நினைவுப் பகுதியில் இடம்பெறும் மரண அறிவித்தலுக்கான கட்டணமாக ரூபா 1500 அறவிடப்படும்

- பதிப்பாசிரியர் -

## விவிலியகுறுக்கெழுத்துப் போட்டி இல. 45ல்

**சரியான விடைகளை அனுப்பியவர்களில் பரிசு பெறும் மூன்று அதிஸ்ரசாலிகள்**

*முதலாம் பரிசு*

யோ. ஜெனோசன்,
சென் யோசப் லேன்,
சில்லாலை, பண்டத்தரிப்பு.

*இரண்டாம் பரிசு*

ரி.றொஸ்னி,
இல.176,
ஒல்லிமோட்டை
சாவற்கட்டு, மன்னார்.

*மூன்றாம் பரிசு*

ஜோ.ம. லெசில் றொஜர்,
இல 09/32,
பாக்வீதி,
வவுனியா.

விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 110 பேர்.
சரியான விடைகளை எழுதியோர் 93 பேர்.

**விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.45ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில்**

## பாராட்டுப் பெறும் 50 அதிஸ்ரசாலிகள்

1. திருமதி. றோஜ் பரிதா குரூஸ், வங்காலை, லண்டன்.
2. எஸ். வேஜினி றோச், பள்ளிமுனை, மன்னார்.
3. எஸ். திரேசம்மா பிகிறாடோ, பள்ளிமுனை, மன்னார்.
4. ச. லின்ரா, கீளியன் குடியிருப்பு, தலைமன்னார்.
5. அ. இசக்கியேல், யோசவ்வாஸ் நகர், தோட்டவெளி
6. வி. சஞ்சுதன், பாலையடி புதுக்குளம்.
7. ரி. டிறோன், இல.176, ஒல்லிமோட்டை, சாவற்கட்டு, மன்னார்.
8. தேவிகா பத்மராஜா, வயல்வீதி, மன்னார்.
9. ஐடா பற்றிக், பிரதான வீதி, சின்னக்கடை, மன்னார்.
10. இ. யோண் றெஜீபன், உபதபாலகம், வட்டக்கண்டல்.
11. பா. பிலோமினா (குணம்), கறுக்காக்குளம்.
12. ஆ. அல்சன், டோகா, கட்டார்.
13. எஸ். விமல், காமில் மாவத்த, கெந்தல, வத்தளை.
14. ஞா. ஜீவினி, தரம்-11, 8ம் வட்டாரம், பேசாலை, மன்னார்.
15. பி. நவரட்ணம், புதுக்கமம், உயிலங்குளம்.
16. ச. சூசைநாயகம் அன்றூ றெமின்சன், பள்ளங்கோட்டை, நானாட்டான்.
17. பொ.சரஸ்கிறேஸ் ஜொஸ்பின் யூலிற் -5, (29வாரிக்குட்டியூர், வவு.
18. வி. றொனால்ட், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
19. ஸ்ரீ. ரேகா, 8ம் வட்டாரம், பேசாலை.
20. ஜோ. ஜான்சி லோஜி, 8ம் வட்டாரம், பேசாலை.
21. ஏ. யாழினி மிராண்டா, பாடசாலை வீதி, தாழ்வுபாடு.
22. சிங்கம் செபமாலை, சென்பற்றிக், கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.
23. ஜீவரட்ணம் யசிந்தா, 6ம் வட்டாரம், விடத்தல்தீவு.
24. எஸ். சூரியா பிகிறாடோ, பள்ளிமுனை.
25. ம. லடிஸ் மேரி, குமானாயங்குளம், ஆண்டாங்குளம்.
26. தே. ஜெபமலர் (ஜெர்மா), சாளம்பன்.
27. கொ. மேரி இமல்டா, தரம் - 11, பொன்தீவுகண்டல், முருங்கன்.
28. யோ. அருள்தாஸ், வெளிக்குளம், வவுனியா.
29. நா. கார்த்திகா, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
30. ஜோ. ஜொய்சன் பிரதீப், 8ம் வட்டாரம், பேசாலை.
31. யோ. சகாயநாதன், தலைமன்னார் கிராமம், தலைமன்னார்.
32. திரு. பி. அன்ரன் பொன்ராஜா, சுவிற்சர்லாண்ட்.
33. திருமதி. அன்ரன் ஜெயந்தினி, சுவிற்சர்லாண்ட்.
34. எஸ். சத்தியப்பிரியா, தரம்- 9, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
35. ச. யூடிற்றா, அடம்பொன்தாழ்வு, வட்டக்கண்டல்.
36. ஏ. செல்லக்குமார், வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
37. பி. பெனில்டஸ், வேதசாட்சி கோவிலடி, தோட்டவெளி.
38. சிலுவைராசா றோமி, சாளம்பன், ஆண்டாங்குளம்.
39. அ. கரோலின் கீர்த்தனா, 70, பேராலயவீதி, திருகோணமலை.
40. பெ. றிலுசன் (றிலு), பாலையடிப்புதுக்குளம், வட்டக்கண்டல்.
41. ய. யனோகிக்கா (யது), பறப்பாங்கண்டல், உயிலங்குளம்.
42. எஸ். நித்தியா, தரம் - 7, நொச்சிக்குளம், உயிலங்குளம்.
43. எஸ். சத்தியராஜ், நொச்சிக்குளம், உயிலங்குளம்.
44. ம. தர்மிகா, இல. 109, பெரியபண்டிவிரிச்சான், மடுக்கோவில்.
45. லாசரஸ் ஜெஸ்மின் மேரி யூலிற், வாரீக்குட்டியூர், வவுனியா.
46. ராதிகா, தரம்- 11, ஆலங்குளம், வட்டக்கண்டல்.
47. எஸ். யூலிற் சியானி, மன். புனித சவேரியார் பெண்கள் பாடசாலை.
48. சியாமளா கிறிஸ்தோப்பர், வயல்வீதி, மன்னார்.
49. ஆ. பாமா. ஆலங்குளம், வட்டக்கண்டல்.
50. கி. சை. ஜியாளினி குரூஸ், 8ம் வட்டாரம், பேசாலை.

# நீங்காத நினைவுகள்

## 1ம் ஆண்டு நினைவு

மலர்வு 08 - 08 - 1945



உதிர்வு 25 - 03 - 2005

### ம. அந்தோனி லெம்பேட்

**(நீக்கிலஸ் - மடு )**

கொத்தாக மலர்ந்தாய் சகோதரர் எழுவருடன். முத்தாக பெற்றெடுத்தாய் செல்வங்கள் மூவிரண்டுபேரை. வித்தாகி விருட்சமாகி நின்ற உங்களை காலன் இவ்வளவு சீக்கிரம் எடுத்ததேனோ? எங்கள் உயிரின் உயிரே அப்பா! குடும்பத்தின் ஜோதியாய், பாசத்தின் பிறப்பிடமாய் பொறுமையின் சிகரமாய் இருந்து எம்மை வழிநடத்தி, நல்வாழ்வளித்த எம் இதய தெய்வமே அப்பா! எங்கள் உயிருணர்வில் கலந்து என்றென்றும் எமக்கு நல்வழி காட்டுங்கள். இறக்கும் வரை இறைவனில் இணை பிரியாமல் பெரிய வெள்ளி மகிமையில் பரமனுடன் இணைய இங்கு தனிமையில் உம் அன்பு மனையாளும் பாசமிகு பிள்ளைகளும் தவிக்கின்றோம். நீங்கள் வெகு சீக்கிரம் பரமனுடன் விண்ணரசில் மகிழ்ந்திருக்க வேண்டுகின்றோம் யாம்.

*இவரின் பிரிவால் துயருறும் அன்பு மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.*

## 5ம் ஆண்டு நினைவு

மலர்வு 20 - 01 - 1936



உதிர்வு 19 - 03 - 2001

### ச. செபஸ்தியாம்பிள்ளை

**(வவுனியா - கன்னாட்டி)**

"என்னில் விசுவாசம் கொள்பவன் இறப்பினும் வாழ்வான்"

ஐந்தாண்டு காலம் சென்றுவிட்டதே ஐயா, உங்கள் பிரிவு ஐந்து நாட்கள்தான் என எண்ணுகின்றோம். இருந்த காலமெல்லாம் எம்முடன் என்றும் இருந்தீரே. இல்லாத காலத்திலும் எம் இதயங்களில் இருக்கின்றீரே ஐயா! பிரிந்துவிட்டீர் என்று எண்ணவில்லை. என்றும் எம்முடன் காலமெல்லாம் எம் எண்ணங்களிலும், எம் நினைவுகளிலும் வாழ்கின்றீர். உம் ஆன்மா இறைவன் சன்நிதானத்தில் இன்புற்றிருக்கும் என்ற நம்பிக்கை எமக்கு உண்டு. உங்கள் ஆன்மா இறைவனின் பாதத்தில் என்றுமே இன்புற்றிருக்க இறைவனை வேண்டுகின்றோம்.

*உங்கள் பிரிவால் துயருறும் மனைவி, மகள் - அருட்சகோதரி சில்வியா (தி.சி.க.), பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்*

## மன்னா சந்தாதாரர்களே!

உங்கள் சந்தாக் காலம் முடிவடையும் மாதம் உங்களுக்கு தபால் மூலம் அனுப்பப்படும் மன்னாவின் உங்கள் முகவரிக்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ளது. அதைப்பார்த்து உங்கள் சந்தாவை உரிய காலத்தில் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

**மன்னா தனிப்பிரதிகளுக்கான ஆண்டுச்சந்தா**

உள்நாடு - இலங்கை ரூபா 400
வெளிநாடு - இலங்கை ரூபா 2000 (20 யூரோ)

# நீங்காத நினைவுகள்

மலர்வு 28 - 04 - 1931



உதிர்வு 20 - 03 - 1996

## 10ம் ஆண்டு நினைவு

### கஸ்பார்பிள்ளை பிரான்சிஸ் பிள்ளை

"ஆண்டவர் எத்துணை இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்"

அன்பான அப்பா, எங்களை பாசமுடன் அரவணைத்து வளர்த்த அன்புறவே, ஆண்டவன் பாதமலர் சென்றடைந்து ஆண்டுகள் பத்து ஆயிடினும், நீங்கள் விட்டுச் சென்ற நல் நினைவுகள் எமது உள்ளங்களில் என்றென்றும் நிலைத்து நிற்கும். இவ்வுலகில் வாழும் இன் நன்நாளில் மாந்தர் நாம் யாவரும் மானிடத்தை மதித்து அன்புறவில் வாழ்ந்திட மாபரனை வேண்டிடுங்கள்!

இவரின் பிரிவால் துயருறும் மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்.

*தகவல்: மகன் சேகர், ஜேர்மனி.*

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**



**பதிப்பாசிரியர்,
மன்னா
திருமறைப்பணி நிலையம்,
புனித செபஸ்ரியார் வீதி
மன்னார்.**

**The Editor,
MANNA
Pastoral Centre,
St. Sebestian's Street
Mannar, Sri Lanka.**

தொ.பேசி. இல.
023 - 2232377

மன்னா

# இசை - உலக அமைதியின் மொழியைத் தேடும் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்கின்றது!

## திருத்தந்தை 16ம் பெனடிக்ற்

இசை உலக அமைதியின் மொழியைத் தேடும் மக்கள் அனைவரையும் இணைத்து அமைதியான உலகம் ஒன்றைக் கட்டியெழுப்ப உதவுகின்றது எனத் திருத்தந்தை 16ம் பெனடிக்ற் கூறியுள்ளார். தாம் திருத்தந்தையாகத் தேர்வுசெய்யப்பட்டதைக் கொண்டாடும் விழா ஒன்றிலேயே திருத்தந்தை இக்கருத்தினைத் தெரிவித்தார். 40 கருதினால்களும் 250 ஆயர்களும் 7000 பொதுநிலையினரும் கூடியிருந்த வத்திக்கான் மண்டபத்திலேயே திருத்தந்தை தம் கருத்தை வெளியிட்டார். கடந்த ஒக்டோபர் 20ல் நடைபெற்ற இவ்விழாவில் வொல்ப்காங் மொசாட், யோசெப் வேடி, றிச்சாட் வாக்னர் போன்ற இசை மேதைகளின் இசைகளும் வேறு பல தலைசிறந்த இசைப் படைப்புகளும் மீட்கப்பட்டன. அவ்வேளை உரையாற்றிய திருத்தந்தை, இசை எம்மைப் புனிதமாக்குகின்றது. எழுகை பெற வைக்கின்றது. இறைவனின் பெருமையையும் அழகினையும் உணர வைக்கின்றது என்றார். தொடர்ந்து அவர் கூறுகையில், பாடல்களினதும் இசையினதும் அமைதியான ஒன்று சேர்க்கை சமூக, மறைக்கட்டுப்பாடுகள் இல்லாது நடைபெறுகின்றது. அது விசுவாசிகளையும் நல்மனத்தோரையும் உலக அன்பு மொழி பேச அழைக்கின்றது. ஏனெனில் அது நீதியையும், ஒற்றுமையையும், நம்பிக்கையையும், அமைதியும் அடிப்படையாகக் கொண்ட உலகம் ஒன்றினைக் கட்டியெழுப்ப வழிசெய்கின்றது என்றார்.

திருத்தந்தையும் அவர் சகோதரர் மேன்மைமிகு ஜோர்ஜ் ரட்சிங்கரும் இசைப்பிரியர்களும் இசையாளர்களுமாவர். இருவரும் அருகருகே இருந்தே நிகழ்வில் பங்குகொண்டனர். நிகழ்ச்சியில் ஒன்றான சாங்துஸ் - என்னும் பாடல் திருத்தந்தையின் சகோதரரால் இசை மீட்டப்பட்டு றீகென்ஸ்பேர்க் இளைஞர் இசைக்குழுவினரால் பாடப்பட்டது.

## திருத்தந்தையின் தூதுவராகும் முதல் தமிழர்




திருச்சியில் பிறந்து, வளர்ந்து, கல்வி பயின்று குருவான அருட்பணி. ஜோர்ஜ் அந்தோனிசாமி அவர்கள் திருத்தந்தையின் திருத்தூதுவராக அண்மையில் நியமனம் பெற்றுத் தமிழகத் திருஅவைக்கு பெருமை சேர்த்துள்ளார். செப்ரெம்பர் 21-ம் நாள் திருச்சி மேலப்புதூர் மரியன்னை ஆலய வளாகத்தில் பேராயராக அவர் திருநிலைப்படுத்தப்பட்டார். இதில் பல பேராயர்கள், ஆயர்கள் பங்கேற்றனர். பேராயர் ஜோர்ஜ் அந்தோனிசாமி அவர்கள் 1987 – முதல் வத்திக்கான் ஆட்சித்துறையின்கீழ் இந்தனேஷியா, அல்ஜீரியா, துனீசியா, காங்கோ, ஆபிரிக்கக் குடியரசு, வங்காளதேசம், லிதுவேனியா, லிட்வியா, எஸ்டோனியா, பின்லாந்து, ஜோர்டான் உள்ளிட்ட நாடுகளில் பணியாற்றியுள்ளார்.

தற்போது திருத்தந்தையின் திருத்தூதுவராகப் பொறுப்பேற்கும் இவர் காம்பியா, கினியா, லிபேரியா, சியாரா, லியோனா ஆகிய நாடுகளில் பணியாற்றவுள்ளார்.

திருத்தந்தையின் திருத்துாதராகத் தமிழகத்திலிருந்து நியமனம் பெற்றுள்ள முதல் தமிழர் என்ற பெருமையினைப் பெறும் பேராயர் ஜோர்ஜ் அந்தோனிசாமி அவர்களை மன்னா மனதார வாழ்த்தி நிற்கிறது.

## தோமஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டமளிக்க செப உதவி கோரப்படுகின்றது



செபமாலைத்தாசர் சபையையும் செபமாலைக் கன்னியர் சபையையும் நிறுவிய வண. தோமஸ் அடிகளாரின் புனிதர் பட்டத்திற்கான மறைமாவட்ட ஆரம்ப ஆய்வுகள் முடிவுற்று அதன் அறிக்கையினை யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை உரோமை நகரிலுள்ள புனிதர் பட்டத்திற்கான ஆய்வு அவைக்கு அனுப்பிவைத்துள்ளார்.

வண. தோமஸ் அடிகளார் இறையடி சேர்ந்த 42வது ஆண்டு நிறைவுதினம் 26.01.2006 அன்று நினைவுகூரப்பட்டது. தோமஸ் அடிகளாருக்கு புனிதர் பட்டம் மிக விரைவில் வழங்கப்பட தோமஸ் அடிகளாரின் பக்தர்கள் அனைவருடைய உதவியையும், ஒத்துழைப்பையும், செபங்களையும் வேண்டிநிற்கிறோம் என செபமாலைத் தாசர் சபையின் முதல்வர் ஏ. ஆர். ஸ்ரீபன் அடிகளார் கேட்டுள்ளார்.

## தப்பிப் பிழைத்தது தமிழகம்!

திருமணத்திற்கு முன் ஆண் - பெண் உடல் உறவுபற்றி கருத்துக் கணிப்பு வெளியிட்டது "இந்தியா ருடே" பத்திரிகை. சினிமா நடிகை குஷ்பு இதுபற்றி வெளியிட்ட கருத்துக்களால் கொதித்து எழுந்தது தாய்க்குலம். தமிழகம் குஷ்புவின் கருத்துக்களை எதிர்த்து போர்க்கோலம் பூண்டது.

உண்மை என்ன? வெளியிடுகிறார் பாலியல் மருத்துவர் டொக்டர் நாராயணன். இந்திய மக்களின் பாலியல் செயற்பாடுகள்பற்றி 15 மாநிலங்களில் கணிப்பு எடுக்கப்பட்டது. திருமணத்திற்கு முன்பு பாலியல் அனுபவம் பெற்றுள்ள ஆண்கள் இந்தியாவில் பெரியளவில் இல்லை. பெண்கள் அதைவிட மிகக் குறைவாகும். அதைவிட சிறப்பான செய்தி என்னவென்றால், மற்ற மாநிலங்களைவிடத் தமிழகம் ஆரோக்கியமான போக்குடையதாக உள்ளது. இன்றும் கற்பில் முதன்மையான மாநிலம் தமிழ்நாடுதான் என்பதில் எந்த ஐயமும் இல்லை என்கிறார்.

## குற்றவாளிகள் அன்போடும் கருணையோடும் கவனிக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதியின் நிலைப்பாட்டுக்கு இந்தியத் திருச்சபை வரவேற்பு

இந்திய ஜனாதிபதி அப்துல் கலாம் குற்றவாளிகள் அன்போடும், கருணையோடும், ஆன்மீக வழிகாட்டுதலோடும் கவனிக்கப்பட வேண்டும் எனும் எண்ணத்தை வெளிப்படுத்தியபொழுது இந்திய கத்தோலிக்க திருச்சபை அவரின் நிலைப்பாட்டை வெளியரங்கமாக வரவேற்றுள்ளது. ஜனாதிபதி அப்துல் கலாம் மரண தண்டனையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் ஏறத்தாழ 50 கைதிகள் மன்னிக்கப்பட வேண்டும் என சிபாரிசு செய்துள்ளார். இந்திய அரசியல் அமைப்பு ஜனாதிபதிக்கு மன்னிக்கும் அதிகாரத்தை வழங்கியுள்ளது. இந்தியக் கத்தோலிக்க ஆயர் பேரவையின் உதவிச் செயலாளர் நாயகம் அருட்பணியாளர் டொனால்ட் டி சூசா ஜனாதிபதியின் முடிவை வரவேற்று, யாரும் மீட்புக்கோ திருந்துவதற்கோ அப்பாற்பட்டவர் அல்லர் என்றார். சிறையில் இருக்கும் காலத்தில்கூட ஒருவர் மனம் வருந்தி தன் குற்றத்தை உணர்ந்துகொள்ள முடியும் என்றார்.

ஜனாதிபதியின் நிலைப்பாட்டை வெளியிட்ட *இந்திய எக்ஸ்பிறஸ்* இதழ் ஜனாதிபதி புரட்சிகரமான எண்ணத்தை முன்வைத்துள்ளார் என எழுதியுள்ளது. ஜனாதிபதியின் மன்னிப்பைக் கோருவோருள் ராஜீவ் காந்தி கொலை தொடர்பான மரண தண்டணையை எதிர்பார்க்கும் மூவரும், 124 பேரைக் கொன்ற வீரப்பனின் 4 சகாக்களும் அடங்குவர்.

## செல்வி . பவித்ராவின் 'நடனச் சுவடுகள்'

### நூல்வெளியீடும் நடன நிகழ்வுகளும்

இளநுண்கலைப் பட்டதாரியான செல்வி. பவித்திரா எட்வின் கிறிஸ்ரியின் முதல் படைப்பான *நடனச்சுவடுகள்* என்னும் நூல் வெளியீடும் நடன நிகழ்வுகளும் கடந்த 06.02.2006ம் திகதி மன்னார் நகரமண்டபத்தில் நடைபெற்றது.

மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வுகள் ஆரம்பித்தன. மன்னார் திருமறைக்கலாமன்றத்தின் பஜனைக் குழுவினரால் இறைவணக்கம் நடாத்தப்பட்டது. தொடர்ந்து மன். சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி அதிபர் திரு. I.A தயானந்தராஜா அவர்களினால் வரவேற்புரை நிகழ்த்தப்பட்டு நூலாசிரியரின் முதலாவது நடன நிகழ்வாக கௌத்துவம் இடம்பெற்றது. இதனைத் தொடர்ந்து புனித சவேரியார் பெண்கள் தேசிய கல்லூரியின் முன்னைநாள் முதல்வரும் தற்போதைய யாழ்/ பாசையூர் திருக்குடும்பக் கன்னியர்மடத் தலைவியுமான அருட்சகோதரி மேரி பாஸ்கல் அவர்கள் ஆசியுரை நிகழ்த்த நூலாசிரியரின் வர்ணம் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து கௌரவ விருந்தினர் மன்னார் வலயக்கல்விப் பணிப்பாளர் திரு. எம்.ஏ. றெவல் அவர்களின் உரை இடம்பெற்றது. இதையடுத்து நூல் வெளியீட்டு உரையினை நூலாசிரியர் நிகழ்த்த நடனச் சுவடுகள் நூல் வெளியீடு இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக திருமறைக்கலாமன்றத்தின் ஸ்தாபகரும் இயக்குனருமான பேராசிரியர் நீ. மரியசேவியர் அடிகளார் கலந்து சிறப்பித்ததோடு நடனச்சுவடுகள் நூலினை வெளியிட்டு வைத்து சிறப்புப் பிரதிகளையும் வழங்கி கௌரவித்தார். நூல் வெளியீட்டினை தொடர்ந்து பிரதம விருந்தினருக்கும் நூலாசிரியரின் முதல் குரு ஶ்ரீமதி வசந்தி ஶ்ரீஸ் காந்தாவுக்கும் நூலாசிரியரினால் பொன்னாடை போர்த்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நூல் ஆய்வுரையினை ஶ்ரீமதி எமிரவிசங்கர் அவர்கள் நிகழ்த்த நூலாசிரியரின் கீர்த்தனை இடம்பெற்றது. தொடர்ந்து கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் டாக்டர் ஆர். றுஷாந்தன் அவர்கள் சிறப்புரை நிகழ்த்த மன். சித்திவிநாயகர் இந்துக்கல்லூரி மாணவிகளின் அகில இலங்கை ரீதியில் முதலிடம் பிடித்த குறத்தி நடனம் சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெற்றது. தொடர்ந்து சிறப்பு விருந்தினர் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரான கௌரவ செல்வம் அடைக்கலநாதன் அவர்களினால் சிறப்புரை நடாத்தப்பட்டது. தொடர்ந்து பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தினார். அவர் தமது உரையின்போது ஒரு புதுவிதமான நடனத்தையும் சிறந்த நடனக் கலைஞரையும் இங்கு கண்டதாக குறிப்பிட்டார். இதனைத் தொடர்ந்து பல்லிய நிகழ்வானது அன்றைய நிகழ்வினை அலங்கரித்த பக்கவாத்தியக் குழுவினரால் நிகழ்த்தப்பட்டது. இந்நிகழ்வின் இறுதி நிகழ்வாக நூலாசிரியரினால் மோகினி ஆட்டம் என்னும் நடன வகையின் தில்லானா என்னும் உருப்படி ஆடப்பட்டது. இத்துடன் விழா இனிதே நிறைவுற்றது.



## அன்னை திரேசா சிலையை திறந்து வைத்த இந்து சுவாமிகள்



அன்னை திரேசாவின் 8வது நினைவு தினத்தன்று, குஜராத்திலுள்ள ஆமதாபாத்தில் அன்னையின் திருஉருவச் சிலையை அங்குள்ள பூங்கா ஒன்றில் ஆமதாபாத் நகராட்சி நிறுவியது. இந்தச் சிலையை அனேக சமூகப் பணியாளர்கள், மதத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள் முன்னிலையில் ஆமதாபாத் புகழ்பெற்ற ஜெகநாதர் இந்து ஆலயத் தலைமைக்குரு மகேஸ்வர் தாஸ்ஜி மஹாராஜஶ்ரீ சுவாமிகள் திறந்து வைத்தது குறிப்பிடத்தக்கது. விழாவில் ஆமதாபாத் ஆயர் தோமஸ் மக்வான் கலந்துகொண்டார். சிலை நிறுவப்பட்ட பூங்காவுக்கு 'அன்னை திரேசா வட்டம்' எனப் பெயரிடப்பட்டுள்ளது. சிறுபான்மையினரைக் கொடுமைக்குள்ளாக்கும் இந்து தீவிரவாத அமைப்புகளுக்கு ஊக்கமளிக்கும் பாரதிய ஜனதா ஆட்சியில் அன்னைக்கு அளிக்கப்பட்ட மரியாதை தனி முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஆமதாபாத் நகராட்சி காங்கிரஸ் கட்சியின் வசம் உள்ளமையே சிலை நிறுவப்பட்டதற்கு முக்கிய காரணமாகும்.

## அதிர்ச்சி தரும் ஆய்வின் முடிவு!

### விவிலியம் வாசிக்காத கத்தோலிக்கர்கள்

கத்தோலிக்க விவிலிய நிபுணர்கள் சமீபத்தில் மேற்கொண்ட ஆய்வின்படி, கத்தோலிக்கர்கள் ஒழுங்காக விவிலியம் வாசிப்பதுமில்லை, விவிலியம் அவர்களது வாழ்வில் முக்கிய அங்கம் வகிப்பதுமில்லை எனக் கண்டறியப்பட்டுள்ளது. இத்தாலி, ஸ்பெயின், பிரான்ஸ் போன்ற நாடுகளில் எடுத்த புள்ளி விபரங்கள் கத்தோலிக்க மக்களைப் பொறுத்த மட்டில் விவிலியம் குருக்களுக்கென ஒதுக்கி வைக்கப்பட்ட ஒன்றாகவே இன்னும் கருதப்படுவதாகக் கூறுகின்றனர்.

வாழ்வில் உந்துதல் பெற உதவும் ஒன்றாகவோ, உண்மையை அறிந்துகொள்ளும் ஒன்றாகவோ கத்தோலிக்கர்கள் வாழ்வில் விவிலியம் மாறவில்லை எனக் கத்தோலிக்க விவிலியக் கூட்டமைப்பின் தலைவர் இத்தாலியைச் சார்ந்த ஆயர் வின்சென்சோ பக்லியா கூறியுள்ளார்.

## அருட்பணியாளர்களின் தாய்மார் இறைபதம்

யாழ் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்தந்தை ஜி. பீற்றர் அடிகளாரின் தாயார் திருமதி. றோஸ்மலர் ஞானப்பிரகாசம் (வயது 73 - தாளையடி) (இளைப்பாறிய அதிபர்) அவர்கள் காலமானார்.

அருட்தந்தை அமிர்தகுமார் அடிகளாரின் தாயார் பிறிஜீற்றம்மா கடந்த 05.02.2006 அன்று காலமானார். தமது அன்பு மகன்மாரை யாழ் மறைமாவட்டத்திற்கு அர்ப்பணித்த இவ்விரு தாய்மாரின் ஆன்மா இறைவனின் இன்ப சன்னிதானத்தில் அமைதியில் இளைப்பாற மன்னா அன்பு நெஞ்சங்களின் செபங்களைக் காணிக்கையாக்குகின்றோம். தமது அன்புத்தாய்மாரின் இழப்பில் துயருறும் அருட்பணியாளர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்து நிற்கின்றோம்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு கொழும்பு நந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு பதிப்பாசிரியரால் வெளியிடப்பட்டது.